எதிர்காலம் ஒளிமயமாய் இருக்குமா?

KALKI 5.2.84 ரூ1.20



கல்கி



மாமனிதர் யார்?

வாசகர் தீர்ப்பு

ஜி. பார்த்தசாரதி:

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை லாகவமாய்ச் சமாளித்துப் பல தடவை ஜெயவர்த்தனேக்கும் தமிழர் தலைவர்களுக்கு மிடையே சமரசப் பேச்சுக்கள் நடத்தினர். இன்று அப்பிரச்சினை வேகம் தணிந்து சமரசமான நிலைமையை எட்டியுள்ளது அவரால்தான்.

மன்னார்குடி. வி. எஸ். சோமசுந்தரம்.

லா வாலீசா:

கம்யூனிஸ நாடுகளில் எவரும் புரட்சி செய்ததாய்ச் சரித்திரம் இல்லை. ஆட்சியை எதிர்த்தால் கட்டுத் தள்ளிவிடுவார்கள். இத்தகைய போலந்து நாட்டில் ஒரு புதிய எழுச்சியை உருவாக்கியவர் வாலீசா. மக்கள் நலனுக்கும் தொழிலாளர் உரிமைக்கும் போராடி நோபல் பரிசு பெற்றவர்.

நெய்வேலி. என். காளிதாசன்.

கவாஸ்கர்:

இவர் புரிந்த பல சாதனைகள் எல்லோருக்கும் தெரியும். எனினும் அத்தனைசாதனைகளையும் ஒபனிங் பாட்ஸ்மன் தகுதியில்,

---

எதிர்ப்பக்கம்:

தெய்விக அழகு

வண்ணப்படம்: ஹரலிங்கம்

உலகின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர்களுக்கு எதிராக விளையாடி ஏற்படுத்தினர் இந்த மாமனிதர் என்று நினைவூட்ட விரும்புகிறேன்.

மங்களூர். ஆர். ஸத்யா.

ஒபெராய்:

ஹோட்டல் ரிசப்ஷனில் குமாஸ்தாவாக வேலையில் சேர்ந்து அனுபவத்தால் படிப்படி



✖ ஒபேராய்



✖ ஆண்ட்ரோபோவ்



✖ வாலீசா



✖ ஜி. பி.



✖ கவாஸ்கர்

யாக உயர்ந்து, இன்று இந்தியாவின் பிரதான நகரங்களிலும் அயல்நாடுகளிலும் வானளாவும் ஐந்து நட்சத்திர ஓட்டல்களை நிறுவியுள்ளவர். இவர் சாதனை தனி மனிதனின் விடாமுயற்சிக்கு நிச்சயம் பயன் உண்டு என்று காட்டுகிறது.

சென்னை—39. இரா. பாண்டியன்.

பாபா அம்தே:

தொழு நோயாளர்களின் நிவாரணத்துக்காக ஒப்பற்ற தொண்டாற்றி வரும் பாபா அம்தே அவர்களே 1983—ஆம் ஆண்டின் மாமனிதர். மகாராஷ்ட்ரா சந்தர்ப்பூர் மாவட்டத்தில் தொழு நோயாளிகளுக்கென பல அமைப்புகளை நிறுவியுள்ளார். '83—ஆம் ஆண்டுக்கான டேமியன்— டட்டன் விருதும் பெற்றுள்ளார்.

சென்னை—92. எஸ். ராமச்சந்திரன்.

டாக்டர் சலீம் அலி:

இயற்கை வளங்களை அழிப்பதால் மனித குலத்துக்கு ஏற்படும் இழப்பையும் தீங்கையும் சுட்டிக் காட்டி, மத்திய மாநில அரசுகள் இயற்கை வள பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்கவும் செயல்படுத்தவும் உதவிய டாக்டர் சலீம் அலியே '83-ன் மாமனிதர். கவனமே செலுத்தப்படாத ஒரு துறையை அரசின் கவனத்துக்குக் கொணர்ந்தவர்.

சென்னை—13. ந. சந்தானம்.

யூரி ஆண்ட்ரோபோவ்:

ஒரு பேரரசின் ஜனாதிபதியானாலும் ஒரு சிறு பெண் எழுதிய கடிதத்தை மதித்து அவளை ரஷ்யாவுக்கு வரவழைத்துத் தன் நாட்டின் சமாதானக் கொள்கையைப் பிரகடனப்படுத்தியவர்.

மதுரை—1. ஏ. வி. பாண்டியன்.

நகர் இடம்



அ. இ. ரே. யின் நகர்வலம் நிகழ்ச்சியைத் தயாரித்து அளிக்கச் சில பிரமுகர்களை (கற்பனையில்) அழைத்தோம்...

சோ (வீட்டுக்கு ஒரு பத்திரிகை)

என்னுடைய பேச்சைக் கேட்கும்போது கையில் ஒரு பத்திரிகையைப் பிரித்து





வைத்துக் கொண்டிருப்பீர்கள். கண்டிப்பாக அது ஆபாசமான பத்திரிகை ஆகத்தானிருக்கும்! இப்போது தான், வீட்டுத் தாழ்வாரத்தில், கூடத்தில் — என் அடுப்படியில் கூட ஆபாசம் வந்து விட்டதே! "நான் சினிமாவில் அப்படி நடிக்கவில்லையா?" என்று எதிர்க் கேள்வி போடுபவர்கள் அறிவிலிகள்.

இன்றென்று, நேயர்களான உங்கள் எண்ணத்தை, அபிப்பிராயத்தைக் கேட்கிறேன். "சின்ன துக்ளக்" என்ற பத்திரிகை ஆரம்பிக்கலாமென்ற எண்ணம். முழுக்க முழுக்க கதைகள்தான். ஆனால் அண்ணா—தங்கை, பெற்றோர் — பிள்ளை போன்ற பாச இணைப்பைச் சித்திரிக்கும் ஆபாசமில்லாத கதைகள் மட்டுமே இடம் பெறும்; கணவன் —மனைவி உறவு இருக்கும் கதைகள் கிடையாது. உங்கள் மேலான அபிப்பிராயத்தை ஒரு கார்டில் எழுதிப் போடுங்கள். நான் ஏற்கெனவே தீர்மானம் செய்தாகி விட்டது. இருந்தாலும், நேயர்களின் கருத்தை மதிக்கும் ஒரே ஆள் நான்தானே!

கே.பாலசந்தர் (ஸ்கூட்டர்—கார் ஸ்டாண்ட்)

நேற்று நான் பாஸு சாட்டர்ஜி படம் பார்த்துவிட்டுக், காரைச் சிரமத்துடன் ரிவர்ஸ் செய்ய முயன்று கொண்டிருந்தேன். எனக்குப் பக்கத்தில் ஓர் இளைஞன் தன் ஸ்கூட்டரையும் அது போலவே எடுக்க முனைந்து கொண்டிருந்தான். அவனைத் தட்டிக் கொடுத்து, "ஸ்கூட்டர் ரிவர்ஸில் போகாது. அது வாழ்க்கை மாதிரி! 'We can never go back!" என்று சொன்னேன். "சார்! பாலசந்தர் வசனம் மாதிரி இருக்கிறதே!" என்று ஆச்சரியப்பட்டான் அவன். இருட்டில் என் முகம் சரிவரத் தெரியவில்லை போலும்!

உங்களுக்கு எப்படியோ, இதுபோன்ற இடங்களில் காரை நிறுத்துவது எவ்வளவு சிரமமோ அதைவிட சிரமம், சரியான சில்லறை கொடுப்பது! விலை உயர்ந்த வாகனத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, சரியான சில்லறைக்காகத் திண்டாடுவது இருக்கிறதே — அது மகா தர்ம சங்கடம்.

"We can even exchange ideas, but not coins!"!" என்று நான் அப்போதெல்லாம் எண்ணுவதுண்டு.

எம். சந்தோஷம் (ஸ்டேஷனுக்குப் போவது)

உங்களுக்கு எப்படியோ, ரயில்வே ஸ்டேஷனுக்கோ, விமான நிலையத்துக்கோ போய் யாரையாவது வரவேற்பது என்றாலே எனக்குக் குலைநடுக்கம். நிச்சயம் காலதாமதமாகவே அவை வருவதால் நமது பொன்னான நேரம் வீணாகும். ஒருசமயம் பாருங்கள் — ரொம்ப வேண்டியவர் இன்ன 'ஃபிளைட்'டில் வருகிறேன் என்றெல்லாம் விவரமாக எழுதியவர் கடைசி நிமிடத்தில் வராமலே இருந்து விட்டார். அவருக்காக வீட்டில் நிறைய ஏற்பாடு செய்தது எல்லாம் வியர்த்தம். அந்த நபரின் நட்பையே கத்தரித்து விட்டேன்.

நான் சொல்லிக் கொள்வதெல்லாம் இதுதான். முந்திரிக்கொட்டை மாதிரி முன்னால் போய் நிற்காதீர்கள். இடிச்ச புளி மாதிரி வீட்டிலேயே இருங்கள். வேண்டிய நண்பர் வந்தால், "அடடா லெட்டர் கிடைக்கவே இல்லையே! தெரிந்து இருந்தால் ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே!" என்று கூசாமல் சொல்லுங்கள்.

கற்பனை: **சுஸ்வர்குமார்**

கல்கி

அடுத்த வாரம்

எதிர்க்கட்சிகளின் அணி சாதிக்கப் போவது என்ன?

- கல்கத்தா மாநாட்டினை யொட்டி கலைஞர் கருணாநிதி பேட்டி

விபத்துக்குப்பின் விபரீதங்கள்!

"விபத்தே பெரும் துயரென்றால் அதற்குப்பின் நாம் சந்திக்க நேரும் அல்லல்கள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலிருக்கின்றன" - அனுபவித்தவர்களின் குமுறல்!

அடுத்து வரும் இதழ்களில்:

டீ.வி. ஸ்பெஷல் — இலவச இணைப்பு

கோடைக்கானலில் 'டிவி டவர்' இயங்க ஆரம்பிக்கப்போகிறது. இனி தமிழகமெங்கும் டிவி பார்க்கலாம்.

டிவி வாங்கு முன் அல்லது பார்ப்பதற்குமுன் கல்கியின் இந்த அன்பளிப்பை முதலில் பெற்றுப் பயனடையுங்கள். டிவி பற்றி A முதல் Z வரை தெரிந்து கொள்ளலாம்!

ஆரோக்கியம் அழைக்கிறது — இலவச இணைப்பு

ஒற்றைத் தலைவலி முதல் உள்ளங்காலில் ஆணி விழுவது வரை பல விதமான உடல் கோளாறுகளையும் தவிர்ப்பது எப்படி? தப்பித்தவறி யாருக்கேனும் வந்துவிட்டால் குணப்படுத்த உபாயங்கள். விஞ்ஞான ரீதியான விளக்கங்கள்.

டாக்டர்களே எழுதி ஒரு டாக்டரே ஆசிரியராக இருந்து தயாரித்து எளிய தமிழில் வழங்கும் ஆரோக்கிய அகராதி. என்றென்றும் பயன் படக் கூடிய கையேடு.

கல்கி உங்களுக்காக மாபெரும் திட்டங்களை வைத்திருக்கிறது



எதிர்காலம் ஒளிமயமாய் இருக்குமா?

✖ மனம் திறந்த பேச்சு

நமது நிருபர்கள்

கொடுமையான மின்சார வெட்டைக் கூட கவர்ச்சிகரமான புன்னகையுடன் சமாளித்துக் கொண்டு போகும் அமைச்சர் பண்ருட்டி திரு. எஸ். ராமச்சந்திரன் ஒளிவு மறைவின்றிப் பேசுகிறார். ''மின் உற்பத்தி என்ற அடிப்படைப் பிரச்னைக்கு ஆவன செய்யாமல் எத்தனைவிதமான திட்டங்கள் போட்டாலும் பயனில்லை; நாடு துரிதமான முன்னேற்றமடையாது'' என்கிறார், அழுத்தம் திருத்தமாக.

○ அப்படியானால் அதற்கு ஆவன செய்ய வேண்டியது தானே? யார் தடுத்து நிறுத்துகிறார்கள்? ஏன் இந்தப் பிரச்னை சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டுகளாகியும் தீர்க்கப்படாமலே இருக்கிறது?

நியாயமான கேள்வி. மக்கள் இப்படித்தான் கேட்பார்கள். பிரச்னைகளைத் தீர்க்கத்தானே உங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளோம். பிரச்னைகளையே திரும்பவும் எங்களிடம் கூறிக் கொண்டிருந்தால் எப்படி என்றுதான் எண்ணுவார்கள். ஆனால் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் இல்லாத நிலையில் எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற நிலையில் மோதி மோதிப் பார்த்து அலுத்துச்சலித்துப் போவது இயல்பு. அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்னும் போது மாநில அரசை மட்டும் நான் குறிப்பிடவில்லை. நெய்வேலியிலோ தூத்துக்குடியிலோ மின்நிலையக் கேந்திரங்களிலேயே அதிகாரிகள் தைரியமாக முடிவுகள் எடுக்க ஊக்குவிக்கப்பட வேண்டும்.

○ தமிழகத்தில் வருடம் முழுவதும் குறைந்த சதவீதமாவது மின்சார வெட்டு அமுலில் இருந்து கொண்டே இருக்கிறதே? என்ன காரணம்? தமிழ்நாட்டில் தற்போது மின்சார உற்பத்தியின் நிலை என்ன?

மின்சார உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் நான்காவது இடம் வகிக்கிறது. தமிழகத்தின் மின்சாரத் தேவைகளில் 40 சதவீதத்தை நீர்மின் நிலையங்களும், 60 சதவீதத்தை அனல் மின்சார நிலையங்களும் வழங்குகின்றன. வடமேற்கு பருவ மழை நன்றாக இல்லாததால் நீர்மின் நிலையங்கள் சரியான அளவில் மின்உற்பத்தி செய்ய முடியவில்லை. அடுத்து அனல் மின்சார நிலையங்கள். இவைகளின் முக்கிய தேவை நிலக்கரி. ஆந்திரா அல்லது பீஹாரிலிருந்து வர வேண்டும். இதற்கும் மத்திய அரசைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. நேரத்தில் கிடைப்பதில்லை. ரயில்வே வாகன் இல்லை என்பதால் தாமதப்படுகிறது. மேலும் நமக்கு வரும் நிலக்கரியில் நிறைய சாம்பல் (Ash Content) இருக்கிறது. மூன்றாவது பிரச்னை நிலக்கரியில் பெரும் அளவில் இருக்கும், கற்களும், மண்ணும், அனல் மின் நிலைய இயந்திரங்களில் போய் மாட்டிக் கொண்டு, மிகவும் தொல்லை கொடுக்கின்றன. இதனாலெல்லாம் பல நாட்கள் அனல் மின் நிலையங்கள் வேலை செய்யாமலே இருக்க நேருகிறது.

○ கல்பாக்கம் அணுமின் நிலையம் தமிழ்நாட்டிற்கு எந்த அளவில் பயன்படும்?

கல்பாக்கம் அணுமின் நிலையம் முழுவதும், இந்திய தொழில் நுட்பத் திறனையும், கருவிகளையும் அடிப்படையாக வைத்து நிறுவப்பட்ட ஒன்று. எந்த அணுமின் நிலையத்திலும், ஆரம்பித்து இரண்டு, மூன்று வருடங்கள் வரை தொல்லைகள் (Teething Problems) இருந்து கொண்டே இருக்கும்.

○ கல்பாக்கத்தில் உற்பத்தி செய்யப் போகும் மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டிற்குத் தானா?

கிடையாது. தமிழகம், நிறைய மின் திட்டங்களுக்கு அனுமதி கோரிய போது, 'கல்பாக்கம் உருவாகிறதே' என்று கூறிய மத்திய அரசு இதர திட்டங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. ஆனால் இப்போதோ உற்பத்தி ஆகும் மின்சாரம் தென் மாநிலங்கள் பலவற்றுக்கும் பிரித்துக் கொடுக்கப்படும் என்று கூறி இருக்கிறது. என்ன செய்வது? அணுமின் நிலையத்தின் உரிமையாளர்கள் மத்திய அரசு தானே? எனவே அவர்கள் இஷ்டம்தான்.

○ அணுமின் நிலையங்களிலிருந்து வரும் கழிவுப் பொருட்கள், மனித இனத்திற்கு ஆபத்தானவை என்று சொல்லப்படுகிறதே?

இது ஒரு முக்கியமான பிரச்னைதான். அமெரிக்கா போன்ற நாடுகளில் கூட இது ஒரு பூதாகாரமான பிரச்னையாக உருவாகி வருகிறது. மக்கள் எதிர்ப்பு அதிகமாகி வருகிறது. ஆனால் அங்கே மின்சாரம் உபரியாக உற்பத்தியாகிறது. இங்கேயோ பற்றாக்குறை. எச்சரிக்கையாக இருக்க வேண்டுமே தவிர வேண்டாம் என்று அணுமின் நிலையங்களை நாம் ஒதுக்குவதற்கில்லை. இனி நீர்மின் நிலையங்களுக்குத் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் வாய்ப்பு இல்லை. அனல்மின் நிலையத்துக்குத் தேவையான நிலக்கரியும் தமிழகத்தில் கிடையாது.

O நிலக்கரியைக் கொண்டுவர கப்பல்கள் வாங்கப் போவதாகச் சொல்லப்பட்டதே?

கப்பல்கள் வாங்குவதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்தால்தானே? தினமும் ஒன்றரைக் கோடி மதிப்புள்ள நிலக்கரியை நாம் வாங்குகிறோம். ஆந்திராவிலிருந்து வந்தால்தான் நமக்கு லாபம். ஆனால் வெகு தொலைவிலுள்ள சுரங்கங்களிலிருந்து எடுத்து வர அனுமதி கொடுக்கிறார்கள். இதனால் நாட்கள் பல ஆகின்றன. செலவும் அதிகம்.

O சமீபத்தில் நிலக்கரியின் விலை 25 சதவிதம் அதிகரித்துள்ளதே! இதனால் மின் கட்டணம் உயருமா?

மாநிலங்களுக்கு அதிகாரங்கள்தான் குறை என்றால் இதுபோன்ற முடிவுகளை எடுக்குமுன் எங்களைக் கலந்தாலோசியுங்கள் என்று கேட்கிறோம். அதுவும் மாட்டேனென்கிறார்கள். இப்போது நிலக்கரி விலை உயர்வு காரணமாய் மாநில அரசு மின் கட்டணத்தை உயர்த்தினால் மத்திய ஆளும் கட்சி நம்முடையது என்பதை மறந்து இங்கே எதிர்க்கட்சியாக இயங்குபவர்கள் மின் கட்டணத்தை உயர்த்தாதே என்று கோஷம் போடுவார்கள்.

O விலையும் உயர்கிறது,தரமும் இல்லை என்கிறீர்கள்....?


சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். நிலக்கரியில் உள்ள கற்களையெல்லாம் ஆட்களை விட்டு எடுக்கச் சொல்லி விட்டு, நிலக்கரியை உபயோகித்தோம். அப்படி எடுக்கப்பட்ட 2000 டன் கற்கள் வேறு சில சிறிய கட்டிட வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன! இந்த கற்களுக்கும், மண்ணுக்கும் சேர்த்துத்தான் பணம் கொடுக்கிறோம்.

O இந்தப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது?

இதை நிலக்கரி அனுப்பும் இடத்திலேயே தீர்க்க வேண்டும். வேகன்களில் நிலக்கரியை அனுப்புமுன் கற்களையும் வேண்டாத பொருட்களையும் நிலக்கரியை விட்டுப் பிரித்து எடுத்து அனுப்ப வேண்டும். இங்கே நிலக்கரி வந்து சேர்ந்தால் போதும் என்ற நிலை இருக்கிறது.

O தமிழக மின்சார வாரியம் எப்போதும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறதே?

இதற்கு மூன்று முக்கிய காரணங்கள் இருக்கின்றன. ஒன்று: நிலக்கரி, எண்ணெய், மற்றும் இவற்றைக் கொண்டு வர ரயில் கட்டணம் போன்றவை அதிகரித்துள்ளன. உற்பத்தி செலவு



ஏகமாய் அதிகமானாலும், சமுதாய நலன் கருதிக் குறைந்த கட்டணத்தில் தான் விநியோகிக்கவேண்டியதிருக்கிறது. மூன்றாவதாக நிர்வாகச் செலவுகள். இதை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

○ 'சோஷலிஸம்' என்று கூறிக் கொண்டு மின்சாரத்தைக் குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு விநியோகிப்பதால் என்ன பயன்? மின்வாரியத்திற்கு ஏற்படும் நஷ்டத்தை இறுதியில் மக்கள்தானே தாங்குகிறார்கள்? பட்ஜெட்டில் இதற்கும் சேர்த்துத்தானே வரி போடப்படும்?

உயர் அழுத்த மின்சாரத்துக்கு ஒரு கட்டணம், குறைந்த அழுத்த மின்சாரத்துக்கு ஒரு கட்டணம், விவசாயிகளுக்கு ஒரு கட்டணம் என்று வெவ்வேறுவிதமாகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. விவசாயிகளைப் பொறுத்தமட்டில் ஒரு யூனிட் மின்சாரம். 18 காசுக்கு வழங்கப்படுகிறது. இது மிகவும் குறைவான ஒன்று. 170 கோடி ரூபாய் இதனால் நஷ்டமாகிறது. இந்தக் கட்டணச் சலுகையை அனுபவிப்பவர்கள் பம்ப்செட் வைத்து போர் பைப் போட்டு விவசாயம் செய்யக் கூடிய அளவு வசதி படைத்த பணக்கார விவசாயிகள் தான். அரசியல் செல்வாக்கு இருப்பதால் இச்சலுகையை அடைகிறார்கள். இத்தனை கோடி ரூபாய்களை வேறு ஏதாவது சமுதாயநலப்பணிக்கோ தொழில் அபிவிருத்திக்கோ செலவழிக்கலாம்! நான் தேர்தல் காலங்களிலேயே இதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். கசப்பதானாலும் உண்மை இதுதான்.

○ மின்சாரத்தை விநியோகிக்கும்போது ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்த்தாலே மின் வாரியத்தின் நஷ்டம் பெருமளவு குறைந்து போகும் என்று கருதப்படுகிறதே?

நீங்கள் குறிப்பிடுவது டிரான்ஸ்மிஷன் லாஸ் எனப்படுவது. உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவையும் எத்தனை யூனிட்டுகளுக்கு பில் போடப்படுகிறது என்பதையும் ஒப்பு நோக்கி விநியோகத்தில் நஷ்டம் என்கிறார்கள். ஆனால் இதைத் துல்லியமாய்க் கணக்கிட எல்லா மீட்டர்களிலும் ஏக காலத்தில் 'ரீடிங்' பார்த்து முடிவு செய்ய வேண்டும். மேலும் எத்தனை மீட்டர்கள் சரியாக ஓடிக் கொண்டிருக்கின்றன? எத்தனை பம்ப் செட்டுக்களில் மீட்டருக்குப் போகாமலேயே முறைகேடாக மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது! ''டிரான்ஸ்மிஷன் லாஸ்'' இல்லை என்று நான் வாதாடவில்லை. ஆனால்மக்களின் ஒத்துழைப்பும் தேவை என்கிறேன்.

○ 1977க்குப் பிறகு மின்சார உற்பத்தியில் தமிழகத்தின் சாதனைகள் என்ன?

1977—க்குப் பிறகுதான் பல முக்கியமான திட்டங்களுக்கு அனுமதி பெற்று வேலைகள் நடந்து கொண்டு

செய்தி வெடிகள்

அமிதாப் மாதிரி யாருண்டு?

★ கிரிக்கெட் மாட்சை டி. வி. யில் காட்டியதற்குப் பதில், நல்ல உடற்பயிற்சிகளைக்காட்டியிருக்கலாம். —ஒரு பத்திரிகை நேயர்.

◒ மேற்கிந்திய கிரிக்கெட் வீரர்கள், நம் வீரர்களை அடிக்கடி பவுண்டரி நோக்கி ஓட வைத்தது உடற்பயிற்சி இல்லாமல் வேறு என்னவாம்?

★ அமிதாப்பச்சன், படப்பிடிப்பு முடிந்ததும், தன்னை விட வயதில் பெரிய நடிகர்களின் காலைத் தொட்டுக் கும்பிட்டு விட்டுத்தான் போவார். ஒரு சினிமாச் செய்தி.

◒ தமிழ் நடிகர்களில் ஒரிருவரைத் தவிரக் குனியக் கூடிய உருவம் உள்ளவர்கள் யாரிருக்கிறார்கள்?

★ பட்டுத் துணியில் படும் கறைகளைப் போக்கும் சக்தி யூகலிப்டஸ் தைலத்துக்கு இருக்கிறது. —ஒருசெய்தி

◒ பட்டுப் புடவை விற்பனையாளர்கள், ஒவ்வொரு பட்டுப் புடவையுடனும் ஒரு யூகலிப்டஸ் தைல பாட்டில் இலவசம் என விளம்பரம் செய்யலாம்!

★ நூற்பாலை ஒன்றைத் திறப்பது பற்றிய பேச்சு வார்த்தையில் முட்டுக் கட்டை ஏற்பட்டுள்ளது, —புதுச்சேரி செய்தி.

◒ நூற்பாலை விவகாரத்திலும் முட்டுக்கட்டை தானா? 'சிக்கல்', 'சிடுக்கு' 'முடிச்சு' என்று சொல்லலாமே!

★ 'தெலுங்கு கங்கை திட்டத்துக்கு மத்திய உதவி



கிடையாது' என்று திட்டக் குழு தலைவர் அறிவித்தார்.

—புதுடில்லிச் செய்தி

◒ இவரைத் திட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டால் ஆச்சரியமில்லை!

—மகரம்

பாக்கியராஜ் சொன்ன குட்டிக்கதை

சொர்க்கம், நரகத்தைப்பற்றி ஒரு மாணவன் ஆசிரியரிடம் கேட்டான். ''நல்லவர்கள் போகும் இடம் சொர்க்கம். தீயவர்கள் போகும் இடம் நரகம். நரகத்தில் போகிறவர்களை கால் கைகளை எல்லாம் துண்டு துண்டாக வெட்டி எண்ணெய்க் கொப்பரையில் போடுவார்கள். இதுதான் அங்கு கொடுக்கும் தண்டனை'' —என்று பதில் சொன்னார் ஆசிரியர்.

'சார் நீங்கள் எங்கே போக விரும்புகிறீர்கள்?' — ஒரு மாணவன் கேட்டபோது, ''உங்களிடம் அவஸ்தைப் படுவதை விட நரகமே மேல் என்று தோன்றுகிறது'' என்றார் ஆசிரியர்.

மாணவன் சொன்னான்: ''நானும் அங்கு நார் சான் வர ஆசைப்படுகிறேன். எங்களால் செய்ய முடியாததை எல்லாம் எமகிங்கரர்கள் உங்களிடம் செய்வதைப் பார்க்க ஆசைப் படுகிறேன்!''



கோவை நட்சத்திரக் கலைவிழாவில் பாக்கியராஜ் சொன்னது

தகவல்: தாம்பிரவருணி.

வருகின்றன. மேட்டூர் அனல் மின் திட்டம், தூத்துக்குடியில் மூன்றாவது பிரிவு கட்ட அனுமதி. நெய்வேலியில் மூன்றாவது பிரிவு ஏற்படுத்த அனுமதி. பேசின் பிரிட்ஜ் விரிவாக்கம் போன்றவை 1977—க்குப் பிறகு நடந்தவைதான். தமிழகத்தில் 1951 முதல் 1977 வரை 26 ஆண்டுகளில் மின் துறை அபிவிருத்திக்கு 714 கோடி செலவானது. ஆனால் 77 முதல் 83 வரை 6 ஆண்டு காலத்தில் 900 கோடி மின் துறை முன்னேற்றத்துக்குச் செலவிடப்பட்டுள்ளது. இந்நேரத்தில் முக்கியமான ஒன்றைச் சொல்லவேண்டும். 1967—ல் முடித்த மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்துடன், நீர்மின் நிலையங்களைக்கட்டி முடித்தாயிற்று. 1970—களில் மேற்கொண்டு எந்தப் புதியமின் உற்பத்தி திட்டத்துக்கும் அனுமதி பெறாமல் மின் இணைப்பு பணியை மட்டும் தொடர்ந்து வேகமாய்ச் செய்து கொண்டிருந்தது அப்போதைய அரசு. அதன் பின் விளைவுகளைத் தான் நாம் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

○ சமீபத்தில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தீர்களே அங்கே ஏதாவது மின்சார நிலையங்களுக்குச் சென்றிருந்தீர்களா?

சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் நிலையத்துக்குச் சென்றிருந்தேன். காற்று விசை கொண்டுமின்உற்பத்தி செய்யும் மற்றொருநிலையத்துக்கும் சென்றிருந்தேன். எல்லாம் பரிசோதனை அளவில் தான் இருக்கிறது. அங்கே மின் உற்பத்தி உபரியாக இருப்பதால் இந்த ஆய்வுப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீட்டை அரசு குறைத்து விட்டது. சூரிய சக்தி கொண்டு மின்சாரம் தயாரிப்பது சம்பந்தமான முழு விவரங்களையும் தெரிந்து வந்துள்ளேன். தமிழகத்தில் இதற்கு நல்ல எதிர்காலம் உண்டு என்று தோன்றுகிறது. குறிப்பாக கோடை காலத்தில் தான் போர் வெல்லும் பம்ப்செட்டும் பயன்படும் என்பதால் சிறிய சிறிய சூரிய வெப்ப மின் நிலையங்களை ஆங்காங்கே உருவாக்கலாம்.

○ அமெரிக்காவில் தனியார் கூட மின் நிலையங்களை நடத்துகிறார்களே? இந்தியாவிலும் மின் உற்பத்தியைத் தனியார் துறையிடம் கொடுக்கலாமே?

நான் வரவேற்கிறேன். இந்த யோசனையை நானே வெளியிட்டும் இருக்கிறேன். ஆனால் மத்திய அரசின் கொள்கை தனியார் துறை மின் உற்பத்தி செய்வதை அனுமதிப்பதாக இல்லை. மின் வெட்டின்போது நம் தொழிலதிபர்கள் டீசல் ஜெனரேட்டர் வைத்துச் சமாளிக்கிறார்கள். இந்த டீசலுக்கு அந்நியச்செலாவணி எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிட்டால் தொழிலதிபர்கள் சிலர் சேர்ந்து மின் நிலையங்களை அமைக்க அனுமதி வழங்குவதே புத்திசாலித்தனம் என்பது தெரியவரும்.


○ அடுத்த சில மாதங்களில் தமிழகத்தில் மின்சார நிலைமை எப்படி இருக்கும்?

ஜூன், ஜூலை மாதங்களில் பரவலான மின் வெட்டு காத்திருக்கிறது. இப்போது 'உயர் அழுத்த மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு 30 சதவீதவெட்டு இருக்கிறது. நம்து தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமாக வெட்டினால்தான் 'லே—ஆப்' போன்ற பிரச்னைகள் வரும். மற்றபடி, ஜெனரேட்டர்கள் வைத்துக் கொண்டு சமாளித்து விடுவார்கள்.

புகைப்படம், மேலட்டை

வண்ணப்படம்: சுபா



தேர்தல் அறிவிப்பு
இப்ப ஸ்டார்ட் பண்ண மாட்டான்!
யார் கண்டது?.. சொல்ல முடியாது!


மொய்லி


நல்லா மாஞ்சா போட்டிருக்கேன்!.. ஜோரா 'மேல்' விடு!

கல்கி

1984 பிப்ரவரி 5
ருத்ரோத்காரி தை 22
மலர் : 42 இதழ் : 27





அரைவேக்காடு அரசியல்!

பந்த் என்ற நீண்ட கழி கொண்டு தேன்கூட்டைக் கலைத்து விட்டார் ராஜ்குமார். தேனீக்கள் 'புஸ்'ஸென்று கிளம்பி அகப்பட்டவர்களைச் சூழ்ந்து கொட்டின. 'தேன் கூட்டைக் கலைத்தது மட்டுமே என் பணி. தேனீக்கள் கொட்டியதற்கு நான் பொறுப்பல்ல' என்று தட்டிக் கழிக்கிறார் ராஜ்குமார். அரை வேக்காடு அரசியல் என்பது இதுதான். ஒரு கிளர்ச்சியை ஆரம்பிப்பவர்கள் அதன் பின் விளைவை எதிர்நோக்க வேண்டும். அதற்கு தார்மீகப் பொறுப்பு ஏற்கவும் வேண்டும். 'பங்களூர் பந்தின் போது நடந்த வன்முறைகளுக்கும் உயிர்ச்சேதங்களுக்கும் ராஜ்குமார் அபிமானிகள் பொறுப்பல்ல, விஷமிகளும் குண்டர்களும் 'பந்த்'தைச் சாக்காக வைத்துக் கொண்டு அட்டூழியம் பண்ணிவிட்டார்கள்' என்று ராஜ்குமார் கூறும் சமாதானம் செல்லுபடியாகாது. கிளர்ச்சியை ஆரம்பித்து வைத்தால் அதில் நல்லவர்களுடன் சில பொல்லாதவர்களும் புகுந்து கொண்டு கலகம் விளைவிக்கவே பார்ப்பார்கள். அவர்களின் எண்ணங்கள் நிறைவேறாதவிதமாகக் கிளர்ச்சியாளர்களின் சாத்துவிகப் போராட்டத் திட்டம் முன் யோசனையுடன் அமைய வேண்டும். தொண்டர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய தகுதியும் திறனும் தலைவருக்கு வேண்டும். இந்த ஆற்றல் ராஜ்குமாருக்குச் சிறிதும் இல்லை என்பது, ''ராஜ்குமார் அபிமானிகள் சங்கம் எதற்காக எப்போதும் நல்லதையே செய்ய வேண்டும்?'' என்று அவர் வினவியதிலிருந்தே புரிந்து கொள்ளலாம். விஷப்பரீட்சையைத் தூண்டிவிட்ட ராஜ்குமார், பந்த் தினத்தன்று பெங்களூரிலேயே இல்லை என்பது இவரது பொறுப்பின்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ராஜ்குமார் பந்த் நடத்திய முறை தவறு என்பதோடு அதன் நோக்கமும் படு மோசமானது. கர்நாடகத்தில் அரசுப்பணியில் சேருவோர் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் கன்னடத்தில் தேர்ச்சி பெறவேண்டும் என அங்கு ஜனதா அரசு நியாயமான கொள்கை வகுத்து அமல்படுத்தி வருகிறது. ராஜ்குமார், கன்னடத்தில் தேர்ச்சியிருந்தால்தான் அரசு ஊழியத்தில் சேர முடியும் என்ற முன் நிபந்தனையைச் சட்டமாக்க வேண்டுமென்கிறார். பல்வேறு மொழியினரும் பல்வேறு மாநிலங்களில் குடியேறிப் பரவலாக வாழ்கின்ற தேசத்தில் மொழி விஷயத்தில் இம்மாதிரியான குறுகிய மனப்பான்மைகளை வளர்த்துக் கொள்வது மிகவும் ஆபத்தானது.

ராஜ்குமாருக்குத் தந்தி அனுப்பி அறிவுரை கூற முற்பட்ட தமிழக முதல்வர், இங்கே நிலைமை எப்படி இருக்கிறது என்பதையும் கவனிப்பது நலம். ஒரே ஒரு தனி மனிதரின் விருப்பு வெறுப்புக்கு இணங்க நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகப் பரிணாம வளர்ச்சி அடைந்து வந்துள்ள தமிழ் எழுத்து வரி வடிவங்களை மாற்றுவதும்; தமிழ்ப்படத்தைத் தியேட்டரில் திரையிடுவதைக் கட்டாயமாக்குவதும்; கடைகளில் போர்டு வைப்பதற்குக் கூட சட்டம் கொணர்ந்து தனி மனிதர் சுதந்திரங்களைப் பறிப்பதும்; தமிழ் அறிவு இருந்தால் போதாது, தமிழைப் போதனமொழியாகக் கொண்டு படித்தவர்களுக்கே அரசு ஊழியங்களில் சலுகை என்பதும்; இவை போன்ற வேறு சில செயல்களும் தமிழ் அபிமானத்தைக் காட்டவில்லை, மொழிவெறியையே உணர்த்துகின்றன.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

அத்தியாயம் 14

வரவேற்பு

சிறுதுறை – பெயருக்கேற்ப சோழவள நாட்டிலே ஒரு குக்கிராமம். காவிரியின் பல கிளைகளுள் ஒன்று அந்த வட்டாரத்தைச் செழிக்கச் செய்து கொண்டிருந்தது. என்றாலும் கிராமம் என்னவோ இரண்டே தெருக்களுடன் தூங்கி வழிந்து கொண்டுதானிருக்கும். காலையில் எழுந்து கூழோ, கஞ்சியோ குடித்து விட்டு வயல் காட்டுக்குப் போனால் இருட்டும் வேளையில் திரும்பித் திண்ணையிலேயே அசதி தாங்காமல் சாய்ந்து விடுவார்கள் ஆண் மக்கள். நடவு, அறுவடைக் காலங்களில் பெண்களுக்கும் வேலை மிகுதி. எந்த வித மாறுதலுமின்றி ஒரு வழக்கமான நியதியில் நடந்து கொண்டிருந்த வாழ்க்கை.

ஆனால் இது என்ன? இன்று அங்கே ஒரே கோலாகலம்! திரும்பின பக்கமெல்லாம் மாவிலை, குருத்தோலைத் தோரணங்கள்! புலிக் கொடிகளும் வில் கொடிகளும் அருகருகே பறந்தன. அக்கம்பக்கத்துச் சிறிய, பெரிய ஊர்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்து திரண்டதால் அந்தச் சிறிய கிராமம் கனம் தாங்காது வெடித்து விடும் போல் தவித்தது! கிராம மக்களும் அயலூர்க்காரர்களும் தங்களிடம் உள்ளதற்குள் நல்ல புதிய ஆடைகளாகத் தேர்ந்தெடுத்து அணிந்து கொண்டிருந்தனர். வாசலைப் பெருக்கி மெழுகி வண்ணக் கோலமிட்டிருந்தனர். சற்று வசதி படைத்தவர்கள் வீடுகளை வெள்ளையடித்துப் புது மெருகு ஏற்றியிருந்தனர். யானை குதிரைகளும், தேர்களும் அவற்றில் வந்த வீரர்களும் ஊர் எல்லையில் குவிந்திருந்தனர். அதிகாரிகள் பலர் மிடுக்கோடு இங்குமங்கும் விரைந்து கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தனர். தாரை தப்பட்டைகள் முழங்கின; முரசுகள் அதிர்ந்தன: கொம்பு ஊதப்பட்டது. இவை அடங்கியதும் நாதசுவர இசை எழுந்து ஊரையே நிரப்பியது. மக்கள் குதூகலித்து மகிழவும் பொழுது போக்கவும் நாலு நாட்களாகக் குறவைக் கூத்துக்கு ஏற்பாடாகியிருந்தது.



இத்தனை கோலாகலத்துக்கும் காரணம் சேரமான் சோழ நாட்டுக்கு விஜயம் செய்கிறார் என்பதுதான். அவர் தலைநகர் தஞ்சையை நோக்கித்தான் விரைகிறார் என்றாலும் சோழ தேசத்தின் எல்லையை அவர் கடந்ததும் எதிர்ப்படும் முதல் ஊர் என்பதால் சிறுதுறைக்குப் பெருஞ்சிறப்பு சேர்ந்தது. வழிநெடுகப் பல ஊர்களில் வரவேற்புகளை ஏற்க அவகாசமில்லை என்று சேரமான் முன்கூட்டியே அறிவித்து விட்டதால் எல்லையில் ஒன்றும் தஞ்சையில் ஒன்றுமாக வரவேற்புக்கு ஆயத்தங்கள் நடந்திருந்தன. பட்டத்து யானை மலர்மாலை அணிவித்து, தும்பிக்கை உயர்த்தி மரியாதை செலுத்தச் சித்தமான நிலையில் தும்பிக்கையுடன் உடலையும் லேசாக அசைத்தவாறு நின்றது. அதன் மீது பசுமை நிறப்பட்டு பளபளத்தது. அதில் பொறித்திருந்த பாயும் புலி உருவமோ மஞ்சள் நிறத்தில் ஒளிர்ந்தது.

எதிர்பார்ப்புக் காற்றிலே கலந்து மனத்திலே பரபரப்பாக இறங்க, தொலைவில் குதிரைகள் குளம்பொலியும் ரதம் ஒன்று வேகமாய்ச் சக்கரங்கள் உருளவரும் சத்தமும் கேட்டது. எதிர்த்திசையிலிருந்து இந்த ஓசை வந்ததால் இது தாணுரவியாக இருக்க முடியாதென்பதும் தலைநகரிலிருந்து ஏதோ அவசரச் செய்தி வந்திருக்கலாம் என்றும் புரிந்து போயிற்று. கூட்டம் கலைந்து மக்களில் சிலர் என்ன ஏது என்று பார்க்க அந்தப் பக்கம் ஓடினார்கள். நான்கு குதிரைகள் பூட்டிய அந்த ரதம் ஊர் எல்லைக்கு வெகு அருகில் வந்து நின்றது. திரை விலகவும் ரதத்திலிருந்து இறங்கினார் நம்பி. ரதத்தின் முன்பாகவும் அதைத் தொடர்ந்தும் குதிரைகளில் பயணித்து வந்த வீரர்கள் புலிக்கொடி பறந்த வேல்களை உயர்த்தி ''திருமுறைகளைத் தொகுக்கும் வேதநேசச் செல்வர், தெய்வத் தமிழ்க் காவலர், ஆதித்தன் அவையில் புலவர் தலைவர், நம்பியாண்டார் நம்பி வாழ்க!'' என்று முழங்கினர். உடனே ஊர்ப் பொதுமக்களிலும் இதுவரை அவரை இன்னாரென்று அறிந்து கொள்ளாதவர்களும் புரிந்து கொண்டவர்களாக அகமகிழ்ந்து முகமலர்ந்து ''வாழ்க! வாழ்க!'' என்று எதிரொலி செய்தனர். ''வழி விடுங்கள், வழி விடுங்கள்'' என்று அவர்களை விலக்கிப் பாதை ஏற்படுத்திக் கொண்டு அவசரமாக முன்னே வந்தார் ஊர் ஆளும் கணத் தலைவர். மாலை அணிவித்து, பூர்ணகும்பம் அளித்து, பழங்கள் சமர்ப்பித்துப் பணிவாய் வணங்கினார்.

''இது என்ன, சேரமானை வரவேற்க வைத்திருந்த எல்லாவற்றையும் என்னிடம் தந்து விட்டீர்கள்!'' என்றார் நம்பி நகைத்தவாறு.

''சுவாமி! சேரமான் தாணுரவியையோ அல்லது தங்களையோ வரவேற்கும் தகுதி இந்தக் குக்கிராமத்தில் யாருக்கு உண்டு? அந்த உரிமையை எங்களுக்கு வழங்கிய நம் மாமன்னர் வரவேற்பில் எந்தவிதக் குறையும் இருக்கலாகாது என்பதிலும் கவன


அபிமானவல்லி
கி.ராஜேந்திரன்

மாய் இருந்து முன்னேற்பாடுகளைச் செய்துள்ளார். சேரமானின் தகுதிக்கும் சோழ மன்னரின் பெருமைக்கும் குறைவின்றி எல்லாம் நடக்கும். நடத்தி வைக்கத் தாங்களும் வந்து விட்டீர்கள். இனி என்ன கவலை?''

''எப்போது வருகிறார் சேரமான்?''

''இன்னும் அரை நாழிகையில் எதிர்பார்க்கலாம் ஐயா! முன்னணி வீரர்கள் வந்தாயிற்று.''

''நல்லது'' என்ற நம்பி, வரவேற்புக்கான ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டுச் சில சிறிய மாற்றங்களையும் செய்தார்.

இதற்குள் தொலைவில் மறுபடி குதிரைகளின் குளம்பொலியும் தேர்ச்சக்கரங்கள் உருளும் ஓசையும் கேட்கலாயின. அனைவருமே மனக்கிளர்ச்சியுற்றனர். வீரர்கள் தங்கள் அதிகாரத்தைக் காட்டிக் கூட்டத்தை ஒழுங்கு செய்தனர். வாத்தியங்கள் முழங்கின. முரசுகள் அதிர்ந்தன.

சற்று நேரத்தில் தகதகவென்று ஆதவன் தரையிறங்கி வந்தாற்போன்ற பிரகாசத்துடன் தென்பட்டான் சேரமான். சற்றுக் குள்ளம்தான். ஆயினும் உயர்ந்த கரும் புரவியில் கம்பீரமாய் அமர்ந்திருந்த கோலத்தில் அது குறையாகத் தென்படவில்லை. இடையில் வெண்பட்டு அணிந்திருந்தான். நெஞ்சிலே நீலப்பட்டாடைக்கு மேலாக வைரங்களும் ரத்தினங்களும் மரகதங்களும் பதித்த அகன்ற சந்திரஹாரம் கவசமெனக் காத்தது. காதிலே பெரிய பெரிய முத்துக் குண்டலங்கள் அசைந்தாடின. கைகளைக் கவ்விப் பிடித்த வாகு வளையங்களிலும் ரத்தினங்கள் பதிக்கப் பெற்றிருந்தன. பயணத்தின் வசதி கருதி கிரீடம் தரிக்கவில்லையாயினும் தலைப்பாகையிலும் ஒரு நவரத்தினப் பதக்கம் ஒளிர்ந்தது. நறுக்கு மீசையும் காந்தக் கண்களுமாய் விளங்கினான் சேரமான். அவனுக்கு முன்னும் பின்னும் விற்கொடி கட்டிய வேல்களுடன் வீரர்கள். அவர்களுக்குப் பின்னால் திரைச்சீலையால் மூடப்பட்டிருந்த ஒரு ரதம். அதனுடன் வந்த சில வீரர்கள்.

நாட்டெல்லையைக் கடந்து ஊர் எல்லை நெருங்கவும் வரவேற்பையும் உபசரிப்பையும் எதிர்பார்த்து அவர்கள் வேகத்தைக் குறைத்தனர். முரசறைவோர் ஒய்வெடுக்கக் கட்டியம் கூறுவோர் முழக்கமிடத் தொடங்கினர். ''ராஜாதி ராஜ, ராஜமார்த்தாண்ட, ராஜ கம்பீர, ராஜ கோலாகல, சத்ருமல்லன், ஆதித்தனின் ஆருயிர் நண்பன், அவனிப சேகரன், சேரமான் தாணுரவி வாழ்க!''

''வாழ்க! வாழ்க!'' என்ற கோஷங்கள் நூற்றுக்கணக்கான கண்டங்களில் எழுந்தன.

பூரண கும்பம் ஏந்தி நம்பி நெருங்கவும் கட்டியங்கூறுவோர் அவருக்கும் உரிய முறையில் வாழ்த்தொலி எழுப்பினர்.

''நம்பியா! நம்ப முடியவில்லையே!'' என்ற சேரமான் புரவியிலிருந்து கீழே இறங்கிக் கரம் கூப்பினான். ''ஐயா! இவ்வளவு தூரம் அடியேனை வரவேற்கத் தாங்களே வரவேண்டுமா?'' என்றவாறு புழுதியைக் கூட அலட்சியம் செய்து மண்டியிட்டு வணங்கினான். மக்கள் மெய்சிலிர்த்தனர்.

''பிரபோ! எழுந்திருங்கள்! இதென்ன அபசாரம்'' என்று கூறித் தவித்தார் நம்பி. கையில் பூர்ண கும்பம் இருந்தபடியால் சேரமானின் தோள்களைப் பற்றி உயர்த்தவும் இயலவில்லை.

''அபசாரமாவது? ஆசிநல்குங்கள்புலவரே! பெறற்கரிய பெரும் பேறு இது எனக்கு. தெய்வீகத் தமிழ்ப்பணியும் தமிழ்த் தெய்வங்களுக்குத் திருப்பணியும் ஒருங்கே செய்யும் தாங்களே எனக்கு மரியாதை செய்ய முன் வருவதென்றால் எப்பேர்ப்பட்ட பாக்கியம் அது! ஆதித்தன்தான் என்னை எந்த அளவுக்கு உயர்த்தி விட்டார்!''

''இன்று போல் என்றும் விளங்க வாழ்த்துகிறேன்'' என்றார் நம்பி. ''இறையருள் தங்களைக் காக்கட்டும். சோழனுக்கும், சேரனுக்கும் நட்புறவு மேன்மேலும் பலப்படட்டும்.''

சேரமான் எழுந்து நின்றான். புன்னகை தவழும் வதனத்துடன். ''கண்ணனைப்போல் தோன்றுகிறீர்கள் என் கண்களுக்கு'' என்றார் நம்பி.

''ஐயா, என்னுடன் வந்துள்ள அனைவருக்குமே நீங்கள் ஆசி நல்க வேண்டும். அதிலும் குறிப்பாக இருவரை அழைக்கிறேன்... பிறகு தான் வரவேற்பு!'' என்றான் தாணுரவி. திரும்பிப் பார்த்தான். அவன் சைகையைப் புரிந்து கொண்டு ஆஜானுபாகுவான ஓர் இளைஞன் அவர்களை அணுகினான். அவ்வாலிபன் முகத்தில் அடர்த்தியான உரோமம் வளர்ந்திருக்கத் தாடியை அளவாகவும்

பேரறிஞர் பெர்னாட்ஷா எழுதிய ஒரு வார்த்தையை 5 ரூபாய் விலை கொடுத்து வாங்கக் கூடப் பலர் தயாராக இருந்தார்களாம். ஆனால் 'லெஸ் கேர்ல்ஸ்' என்ற நாவலை எழுதிய ஒருவர் பெர்னாட்ஷாவையும் மிஞ்சிவிட்டார். 'லெஸ் கேர்ல்ஸ்' என்ற பெயர் ஒரு ஹாலிவுட் படாதிபதியை மிகவும் கவர்ந்து விட்டது. அந்த நாவலின் உரிமையை வாங்கிக் கொண்டார். ஆனால் தாம் எடுத்த படத்துக்கு அந்தக் கதையை உபயோகிக்கவில்லை. வேறொரு கதையைத்தான் படமாக்கினார். படத்தின் பெயரை மட்டும் 'லெஸ் கேர்ல்ஸ்' என்றே வைத்தார். இரண்டு வார்த்தைகளின் விலை 50 லட்சம்!

—ஆர். எஸ். சுப்பிரமணியம்.





''துணை ஆசிரியர் வேலைக்குக் கற்பனா சக்தி மிருந்த கதாசிரியர் தேவை என்கிறீர்களே: நான் ரெடி!''

''சரி! உனக்கு சம்பளம் ரூ. 5000, இலவச பங்களா, கார் கொடுப்பதாக நினைத்துக் கொண்டு நாளைக்கே நீ இங்கு வேலைக்கு வரலாம்.''

அழகாகவும் வெட்டி விட்டு அலங்கரித்துமிருந்தான். இரு பக்கங்களிலும் அது வளைந்து இரட்டை அரிவாள்களை இணைத்தாற்போன்று நூதனமாகக் காட்சியளித்தது. கனத்த மீசையும் நன்றாக நெய்தடவி முறுக்கி விடப்பட்டிருந்தது. கூர்முனைகள் மேல் நோக்கி வளைந்திருந்தன. தலையை அழகிய சிவந்த தலைப்பாகை மறைத்தது. அதன் மையத்தில் ஒரு மரகதமணி ஒளிர்ந்தது. வியர்வையை ஒற்றிக் கொள்ள எப்போதாவது ஒருமுறை தலைப்பாகையை நீக்கினால் தலை மழுங்க மழிக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

''புலவரே! தளபதி குலாந்தகனை ஆசீர்வதியுங்கள்'' என்றான் தாணுரவி. குலாந்தகனும் விரைப்பாகத் தரையில் மண்டியிட்டு வணங்கி எழுந்தான். நம்பியை உற்று நோக்கினான். பார்வையில் தெரிந்த ஒரு கொடூரம் நம்பியை வருந்தச் செய்தது.

''அப்பனே! வீரத் தளபதிக்கு ஏற்ற பெயர்தான் பூண்டிருக்கிறாய். எதிரியின் குலத்தையே அழிப்பவனாகவும் அவர்களுக்கு எமனாகவும் விளங்குவாய். அது உன் தொழில் தர்மம். ஆனால் உன் உள்ளம் நல்லவர்பால் இரங்கட்டும். அங்கே வெறுப்பு எனும் எதிரியுடன் அன்பு போரிட்டு வெற்றிபெறட்டும். நீடு வாழ்க' என்று கூறும்போதே கலசத்தை அருகில் நின்ற வேதியரிடம் தந்து விட்டு முதலில் சேரமானுக்கும் பிறகு குலாந்தகனுக்கும் திருநீறு இட்டார்.

''குலாந்தகா! கடம்பமாதேவியை நான் இங்கு அழைப்பதாகச் சொல்'' என்று தாணுரவி உத்தரவிடவும் அவன் சற்றே எட்ட நின்றிருந்த தேரினை நோக்கிச் சென்றான். நடையிலே வேகமும் உறுதியும் துணிவும் போட்டியிட்டன. ரதத்தின் அருகிலே போனதும் மன்னரின் விருப்பத்தைத் தெரிவிக்கவும் காந்தள் மலர்க்கரம் ஒன்று புலனாயிற்று. நீண்ட விரல்கள் திரையை ஒதுக்கின. மேகத்திரை விலக முழுமதி முகம் தெரிந்தது. தேரிலிருந்து இறங்க வசதியாகக் குலாந்தகன் தன் கரத்தைச் சமர்ப்பிக்கவும் அதைப் பற்றிக் கொண்டாள். கால்களை நீட்டித் தரையில் பாவ வைத்தபோது ஆடை சற்றே மேலேறி அகல, தந்தத்தில் கைதேர்ந்த சிற்பி செதுக்கியது போன்ற பாதங்கள் தென்பட்டன. உயர்ந்த காலணிகளைப் பூண்டிருந்த அவை தரையில் சிறிதளவு குதித்து இறங்கிய போது அவள் முழு உருவமும் திரைக்குப் பின்னாலிருந்து சரேலென்று வெளிப்படவும் முதல் முறையாக அவளைக் காண்பவருக்கு ஓர் இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது. 'அடடா! இப்படியும் ஓர் அழகு இருக்க முடியுமா?' என்று வியந்தார்கள். ஏற்கெனவே அவளைப் பார்த்திருப்பவர்களுக்கோ 'ஓ, இந்த எழிலை இன்னொரு தடவை காண நமக்குக் கொடுத்து வைத்திருக்கிறதே' என்ற மகிழ்ச்சி!

அவள் நடந்து வந்த போது ஏற்பட்ட அசைவுகளால் ஆபரணங்கள் ஒளி, ஒலிச் சிதறல்களை ஏற்படுத்த அவற்றோடு அழகுத் தத்துவமும் சூழ இருந்தவர் மீது பன்னீர்ச் சிதறலின் குளுமை நறுமணத்துடன் கலந்து படர்ந்தது. 'அமுதக் கலசம் ஏந்தித் தேவாசுரர்களுக்குப் பரிமாற வந்த மோகினி இப்படித்தான் இருந்திருப்பாள்' என்று எண்ணத் தோன்றியது. அளகபாரத்தை அள்ளியெடுத்து கொண்டையிட்டிருந்த வனப்பும் அகன்ற கண்களை அடிக் கோடிட்டு எடுத்துக் காட்டும் விதமாக மையிட்டிருந்த நேர்த்தியும் துருதுருவென்று சுழன்ற விழிகளும் புன்னகையில் மலர்ந்த மாதுளை மொட்டு அதரங்களும் ஞாயிறு ஒளியில் பிரகாசிக்குமாறு இளம் சிவப்பு நிறத்தில் அவள் அணிந்திருந்த ஆடைகளும் வழுவழுப்பான தோள்களும் 'இல்லையோ' என்ற ஐயத்தை ஏற்படுத்தாமல், 'அந்தக் கலசங்களைத் தாங்க இந்த அளவுக்கு இடை தேவைதான்' என்ற நம்பிக்கையோடு விளங்கிய மையப் பகுதியும் பின்னர் அகன்ற மேகலாபரணப் பிரதேசமும், பருமன் தெரியாத வகையில் நீண்டிருந்த தொடைகளும் கால்களும் பாத எழில்களும் கண்களைக் கூச வைத்தன. இமைகளை மூடினாலோ, 'அடடா, ஒரு நல்வாய்ப்பை நழுவ விடுகிறோமே' என்று தோன்றியது!

தேர் விட்டிறங்கி மன்னரை நோக்கி நடக்கும் போதே நம்பி குறித்துக் குலாந்தகன் கூறக் கேட்டுக் கொண்ட அவள், உத்துதலுக்கு அவசியமின்றி நெற்றி தரையில் பதிய வணங்கி எழுந்தாள்.

''நங்காய்! இறைவனின் அளவிலா கலை ஆற்றலை உன் எழில் வடிவிலே காண்கிறேன். இதனை நினைவில் இருத்தி அவனுக்கு நன்றி செலுத்திடு: நலமே பெருகும்'' என்று கூறித் திலகத்துக்கு மேலாகச் சிறிய அளவில் திருநீறு இட்டார் நம்பி. ''உன் அலங்காரம் முழுமை பெற்றது'' என்றார்.

''ஐயா! இவனுக்கு இறைவன் அபூர்வமான அழகை மட்டுமல்ல, அரிதான ஆற்றலையும் வழங்கியிருக்கிறான். சொன்னால் நம்ப மாட்டார்கள். போர்த் தந்திரங்களில் இவன் வல்லவன்! பூர்வீகமாகக் கங்கநாட்டிலிருந்து சேர நாடு வந்து குடியேறிய குடும்

பத்தில் பிறந்த இவன் தந்தை மாபெரும் ராஜதந்திரி. அகாலமாய் இறந்து விட்ட அவரது அறிவாற்றலில்.....''

''ஏதோ சிறிதளவு பெற்றிருக்கிறேன் ஐயா'' என்று இடைமறித்துக் கூறினுன் கடம்பமாதேவி.

''அடக்கம் உன் அழகை அதிகரிக்கிறது'' என்ருர் நம்பி.

''குலாந்தகன் மிகச் சிறந்த குஞ்சர மல்லன். வேறு பல போர்த் திறங்களிலும் வல்லவன்'' என்ற தாஞுரவி நம்பியை உற்றுப் பார்த்தான்.

''அப்படியா, மிக்க மகிழ்ச்சி!'' என்ற நம்பி சட்டென்று விக்கியண்ணன் ஞாபகம் வந்தவராகச் சில கணங்கள் மௌனத்தில் ஆழ்ந்தார். திருவெறும்பூரிலிருந்து திரும்பும் வேளையில் நடந்த உரையாடலை நினைவுகூர்ந்தார்:

''சேரமானை அடைந்து அவனிடம் நீ அடைக்கலம் புகலாம் என்று நாம் யோசித்து வந்த வேளையில், அதே தாஞுரவியை நாட்டெல்லையில் எதிர்கொண்டு அழைக்கும் பொறுப்பை ஆதித்தன் என்னிடமே ஒப்படைத்துப் பயணத்துக்கு வேண்டிய ரதம், வீரர்கள் முதலானவற்றுக்கும் ஏற்பாடு செய்திருக்கிருர் பார்த்தாயா! இறையருள் என்பது இதுதான்! குறளப்பரின் மகிமையே மகிமை! அவர் நமக்கு அறம் உணர்த்தி முடிவதற்குள் தூதர்கள் மன்னரின் கட்டளையுடன் வந்து விட்டார்களே!''

''இப்போது பேசுவதற்கென்ன, பிரமாதமாகத்தான் புகழ்வீர்கள் ஆதித்தனை. ஆனுல் அந்தத் தூதர்கள் வந்தபோது என் மனம் எப்படித் 'திக்திக்' கென்று அடித்துக் கொண்டது தெரியுமா? என்னைக் கைது செய்வதாக இருந்தால் தாவிக் குதித்து ஓட எந்தக் கணமும் சித்தமாயிருந்தேன்!''

''இப்போதும் கூட நீ பயந்து ஓடாவிட்டாலும் விரைந்து ஓட வேண்டியவன் தானே'' என்ருர் நம்பி. ''நமக்கு மன்னர் வழங்கியுள்ள இரு குதிரைகளுள் சிறந்ததைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு பறந்து செல். சேரமான் பயணம் புறப்படும் முன்னர் இல்லாவிடினும் சோழ நாட்டெல்லையை அடையுமுன்னரேனும் அவரை வழியில் சந்தித்துப் பேசு. நானும் என் முத்திரை பதித்து ஓலை தருகிறேன்.''

''ஐயா! மேலே செல்வோமா?'' என்று சேரமான் கேட்கவும் திடுக்கிட்டவராக நிகழ்காலத்துக்குத் திரும்பிய நம்பி, பூர்ண கும்ப கலசத்தை வேதியரிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டார். மறையோர் வேதம் ஓத அதனைத் தாஞுரவியிடம் தந்தார். பொன்னுடை போர்த்திஞர். மலர் மாலை அணிவித்தார். அகன்ற வெள்ளித் தட்டிலே பழங்களை வைத்துப்பரிசளித்தார். ஊர் - சபையினர் வெண் கொற்றக் குடை பிடித்து வெண்சாமரம் வீசினர். பட்டத்து யானை மலர் மாலை சூட்டி வணங்கிய பின் கால் நடையாகக் கிராமத்தைக் கடந்தான் தாஞுரவி.

எளியமக்களின் மரியாதைகளை மனமுவந்து ஏற்ருன். நாதசுவர இசை ஒலிக்க வீதி உலா வந்தபோது, வீடு வீடாக ஆர்த்தி எடுத்தனர் பெண்கள். மலர் தூவி வரவேற்றனர். ஆதித்தனை மன்னனுகப் பெற்ற அவர்கள் பாக்கியத்தையும் நண்பனுகப் பெற்ற தனது யோகத்தையும் குறிப்பிட்டு அவர்களை மகிழ்வித்தான். இரண்டே தெருக்களை உடைய சிறுதுறையில் வரவேற்பு சீக்கிரமே முடிந்து விட்டது.

ஊர் எல்லையில் அம்பலத்தில் சற்று இளைப்பாறச் செய்து இளநீர் தருவித்துத் தந்தார் நம்பி.


''பார்த்தீர்களா, தங்களைக் கண்ட பரவசத்தில் ஆதித்தன் திருமுகத்தை மறந்தே போனேன்'' என்று கூறி இடையில் பத்திரப்படுத்தியிருந்த மன்னர்பிரானின் ஓலையை எடுத்துக் கொடுத்தார்.

அதை வாங்கி இலச்சினையுடன் கூடிய முத்திரையை உடைத்துப் பிரித்துப் படித்தான் தாஞுரவி. சோழ நாட்டுக்குச் சேரமானை வரவேற்பதாகவும் அவசரப்பணி காரணமாக நாட்டெல்லைக்கே வர இயலாமற் போனதற்கு வருந்துவதாகவும் ஆனுல் தன்னை விடவும் பல விதங்களில் உயர்ந்தவரான உத்தமர் நம்பியைத் தன் பிரதிநிதியாக அனுப்ப முடிந்ததில் மகிழ்வதாகவும் குறிப்பிட்டு விரைவிலேயே தலைநகரில் எதிர்கொண்டழைக்கும் தருணத்துக்கு ஆவலுடன் காத்திருப்பதாகவும் தெரிவித்திருந்தான்.

நம்பி சுற்றுமுற்றும் பார்த்துத் தனிமையை உறுதிப்படுத்திக் கொண்டு கேட்டார்: ''மன்னவா விக்கியண்ணனைத் தங்களுக்கு நினைவிருக்கிறதா? அவனிடம் ஓலை கொடுத்து அனுப்பினேனே, வந்து சேர்ந்தானு?''

இதைக் கேட்டுச் சேரமான் குபீரென்று சிரித்தான். இடைவிடாது அவன் சிரிக்கவும் நம்பி இனம் புரியாத குழப்பத்தில் ஆழ்ந்தார். (தொடரும்)





◉ சபரிமலை—முதல்பக்கம், மறுபக்கம் இரண்டையும் இந்த வாரம் 'வீரமணி' சப்புக் கொட்டிப் படித்திருப்பார். எங்காவது இதை மேற்கோள் காட்டி விளாசித் தள்ளப்போகிறார்.
சென்னை—30.
பாம்பனைத்துயின்றோன்.

◉ நடுப்பக்க செய்திக் கோவை முற்றிலும் புதுமை!
சென்னை—28 இ.க.ஸ்ரீராம்.

◉ நட்சத்திரங்களும் 27—செய்திகளும் 27 அருமையாக இருந்தன.
சென்னை—7,
கே. எஸ். கலைமணி.

◉ ''பூனைக்கு யார் மணி கட்டுவது'' என்று எலிகள் மகாநாடு போட்டன அது தான் 'கல்கத்தா மகாநாடு' என்று கருத்துப்படம் போட்டிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.
இந்த எதிர்க்கட்சிகள் தான் சில ஆண்டுகளுக்கு முன்னால் யானை பலம் பெற்றிருந்த இந்திராகாங்கிரசை வீழ்த்திக் காட்டின என்பதை மறந்து விட்டீர்களா?
இரணியல் கலைமன்னன்.




◉ உண்மைகளும், நியாயமான வாதங்களும் கூட எந்தக் கதறலுக்கும் எதிர்திற்க முடியாத இந்தக் காலத்தில்... இப்படி ஒரு அதிசயப் பிறவியா? உங்கள் ''இரண்டு சொட்டுக் கண்ணீரின்'' நாயகனைத்தான் சொல்கிறேன்.
பெங்களூர்—86 நிரஞ்ஜனி.

◉ ஈழத்தமிழர்களின் துயர் துடைக்கத் தங்கள் குடும்பத்தையே வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டு, பல இன்னலுக்கும், இழப்பிற்கும் ஆளாகியிருக்கின்ற அமிர்தலிங்கம் தம்பதியினரைப் பற்றி நினைக்கும் போது, தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவருடைய நெஞ்சமும்கொதிக்கும், அவர்களது தொண்டை எண்ணித் துதிபாடும்.
லால்குடி எம்.ராஜேந்திரன்.

◉ 'வயது—3: ஊசிகள்-30 படித்து அதிர்ச்சியடைந்தேன். மருத்துவரின் அனுமதியின்றி மருந்துசளை



வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கு இது ஒரு பாடம்.
மதுரை-1 எஸ்.சாகுல்ஹமீது

◉ முதலாளி—தொழிலாளி உறவில் இருக்க வேண்டிய பரஸ்பர நம்பிக்கை டி. வி. எஸ். நிறுவனங்களில் உள்ளது போல் நாட்டிலுள்ள இதர நிறுவனங்களுக்கும் பரவ வேண்டும்.
சென்னை—40,
பா. நாராயணன்

◉ நவநாகரீகமாய்ப் பரவி வருகின்ற — பரவ இருக்கின்ற ' ஜீன்ஸ்'' உடையின் வரலாற்றை வனிதை ஒருத்தியின் வண்ணப்படத்துடன் வெளியிட்டிருப்பதைப் படித்து மகிழ்ந்தேன்.
பெங்களூர்—21 மு. நவீன்.

◉ மாதம் ஒருமுறையாவது ஜீன்ஸைத் தோய்த்து உடுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறாமல் விட்டது ஏனோ?
திருச்சி—14 எஸ். முரளி.

◉ கரம் பிடித்தவருக்குத் துணை நிற்பதில் நிறைவு காணும் திருமதி. சாந்தி ராமச்சந்திரன் பேட்டி அருமை!
சென்னை—69, ம.ரங்கநாயகி

◉ இந்தியாவிற்கு ஜனாதிபதி ஆட்சிமுறை அல்லது தற்போதைய முறையே நீடிக்கலாமா என்ற பிரச்னையை விட ஆட்சி செய்யக் கிடைத்திடும் வாய்ப்புப் பெற்றோர் ஒழுக்கமாக, நேர்மையாக, நியாயமாக ஆட்சி செய்தாலே போதும்.
மேட்டுப்பாளையம்,
பி. ஏ. வஹாத்.

◉ ஒருநாள் நான் அஞ்சல் நிலையத்துக்கு அவசரமாய் ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தேன். பஸ் கிடைக்காமல் தவிப்பது போல் தோன்றிய ஒரு மாணவன் தன்னை ஸ்கூட்டரில் ஏற்றிச் செல்லுமாறு வேண்டினான். ''பிறருக்கு உதவு'' என்ற பண்புப்படி நான் அவனை ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டு விரைந்தேன். வழியிலிருந்த அவன் கல்லூரியில் அவனை இறக்கி விட்டு அஞ்சல் நிலையம் எய்தினேன். மணிபர்சை எடுக்க என் நிஜாரின்



பின் பையைத் துழாவினேன். பர்சைக் காணவில்லை. மாணவனுக்கு நான் செய்த உதவியின் விலை நூறு ரூபாய் சொச்சம்!
பம்பாய்,
வரகூர் வை. சீனிவாசன்.

கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது





ULKA-HCG- 4 -84 TAM

ஜங்ஷனிலே ஒரு மேம்பாலம்

15

ஏஸ்தரைப் பார்த்ததும் ஜெயாவிடம் முதலில் பொங்கியெழுந்த உணர்ச்சி பொறுமைதான். அவளை ஏறிட்டுப்பார்த்து விட்டு வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு உன்னை நான் வெறுக்கிறேன் என்று அறைகூவிச் சொல்வது போல் அவள் டிபன் கேரியரை எடுத்துச் சென்று மேஜைமேல் தொப்பென்று வைத்தாள்.

அவள் திரும்புகிற அவகாசம் கூட ஆயிருக்காது. அதற்குள் எஸ்தர் முன்னே வந்து அவள் தோள் மீது பரிவோடு ஒரு கையை வைத்தாள். இதை ஜெயா எதிர்பார்க்கவில்லை. சட்டென்று தான் சின்னவளாகி விட்டமாதிரி அவளுக்குள் ஒரு நுட்பமான வெட்கம் பிறந்தது.

படித்தவள். நாகரீகமானவள். ஸ்டைலாக டிரஸ் செய்து கொண்டு நிற்பவள். தோற்றத்தைப் பார்த்தாலே வசதியான வீட்டில் பிறந்தவள் என்று தெரிகிற இந்தப் பெண் தன் வெறுப்பை விளம்பரமாகக் காண்பித்த பின்பும் கூட எப்படி வந்து தன்னைத் தொடுகிறாள்?

எஸ்தர் செய்த அடுத்த காரியம் இன்னும் அவளை வெட்கிக் குறுக வைத்தது.

எஸ்தர் ஜெயாவின் மோவாயை நிமிர்த்தி அவள் கண்ணுக்குள் பார்த்து விட்டு அவள் கன்னங்களை நீவி, ''எவ்வளவு அழகா இருக்கே?'' என்றாள்.

''போங்கக்கா'' என்று நாணத்தோடு ஜெயா தலை கவிழ்ந்து கொண்டாள்.

மகன்: அப்பா! அரசியல்வாதியாக என்ன படிக்க வேண்டும்?
அப்பா: 'தாவர'வியல்.

—எஸ். மஞ்சுளா.



ஹரிக்கு இந்த இரண்டு பெண்களும் சந்திப்பது எங்கே ஒரு விரும்பத்தகாத விளைவை ஏற்படுத்துமோ என்ற கலக்கம் மறைந்தது. ஜெயாவின் வெறுப்பு வேர்விட முடியாமல் ஒரு வேகத்தில் எழுந்த அலை மாதிரி வழிந்தோடி விட்டது.

நான் ஏன் இவள் மீது பொறுமைப்பட வேண்டும் என்று ஜெயா அடுத்துத் தனக்குள் கேட்டுக் கொண்டாள். காசி ஒரு நாளும் இன்னொரு பெண்ணைப் பார்த்துத் தான் பொறுமைப்படும் விதத்தில் நடந்து கொள்ளவில்லை என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டாள்.

எஸ்தரை நிமிர்ந்து பார்த்து இலேசாகச் சிரித்தாள். அப்படிச் சிரித்த போது அதில் ஒரு குற்ற உணர்வு வந்திருந்தது. எஸ்தரை அணு அணுவாகப் பார்த்து அவள் தோற்றத்தைத் தனக்குள் பதிய வைத்துக்கொள்கிறவள் போல ஜெயா அவளை அங்கம் அங்கமாகப் பார்த்தாள்.

அப்படி அவள் பார்ப்பது எஸ்தருக்கு விநோதமாக இருந்தது.

''நீ இப்படிப் பார்க்கிறதுக்கு நான் ஓர் ஆம்பிளையா இருந்தா சும்மா விட்டிருக்க மாட்டேன்!'' என்று சொன்னாள் எஸ்தர். ஜெயாவின் பார்வை எஸ்தரின் மீதே இருந்தது.

எவ்வளவு உயரம். தெம்பான உடம்பு. பூசி மெழுகி, திருப்தியில் பூரித்துப் பூத்துக் குலுங்கி நிற்கும் உடம்பு.'

''இன்னா பண்ணியிருப்பீங்க?''

''குதிரைமேல் வந்து ஒன்னை அலாக்காத் தூக்கிக்கிட்டு வேறேராஜ்யத்துக்கே ஓடிட்டிருப்பேன்...'' ஜெயாவுக்குள் ஒரு குதூகலம் நெஞ்சை முட்டிக் கொண்டு வந்து கண்களில் இச்சுகிச்சு காட்டித் தொண்டையில் கிளுகிளுத்தது.

''நல்ல காலம் ஜெயா தப்பிச்சது'' என்றான் ஹரி.

''ஆமா... தப்பிச்சுட்டே'' என்று ஒற்றை விரலை ஆட்டி ஆட்டிக்காட்டிப் பயமுறுத்துகிற மாதிரி சொன்னாள் எஸ்தர்.

அப்படிச் சொல்லிவிட்டு மறுபடியும் அவள் தோள்களை நீவி அவள் வலது கையை எடுத்துத் தன் இடது உள்ளங்கை மேல் வைத்து அவள் அணிந்திருந்த நீலநிற நெளி வளையல்களை ஒவ்வொன்றாகப் பூமாதிரி எடுத்து எடுத்து விட்டுக் கொண்டே எஸ்தர் ஜெயாவை ரசித்தாள்.

''சிவ சிவா'' என்றான் ஹரி.

''ஏன்?'' எஸ்தர் அவன் பக்கம் திரும்பினாள்.

''என்னமோ ஸினிமாவிலே ஒரு பாசக் காட்சி பாக்கற மாதிரி இருக்கு. கஷ்டமா இல்லே. நல்லாத்தான் இருக்குது. ஆனு வயிறு பசிக்குது'' என்ருன் ஹரி.

குபீரென்று சிரித்துவிட்டனர் இருவரும்.

அதற்கப்புறம் ஜெயா பரிமாற, எஸ்தர் கூட நின்ருள். புடவை என்ன விலே? எடுத்தது எங்கே? சைக்கிளில் தவணைக்குப் புடவை கொண்டு வந்து விற்பவர்கள்.... அவர்கள் கோயமுத்தூரில் கூட உண்டு என்ற தகவல். இப்படிச் சின்னச் சின்ன தாகக் கேள்விகள். சின்னச் சின்னதாகப் பதில்கள்.

ஹரி இரண்டு பெண்கள் சந்தித்தால் அவர்கள் உறவு எப்படி ஆரம்பித்து என்னென்ன விவரங்களில் வலுப்பெறுகிறது என்று வேடிக்கை பார்த்துக்கொண்டே சாப்பிட்டான்.


ரொம்ப நாட்களாகப் பார்க்காமல் இருந்த அத்யந்த சிநேகிதி ஒருத்தியைப் பார்த்த மாதிரி இருந்தது ஜெயாவுக்கு.

அவன் சாப்பிட்டு முடித்ததும் டிபன்கேரியரை அடுக்கி எடுத்துக் கொண்டு கிளம்புற நேரத்தில்தான் காலேயில் நடந்த லாரி சம்பவத்தை ஹரி ஆரம்பித்தான். அவன் சொல்லச் சொல்லக் கண் கொட்டாமல் மூக்கு துடிக்கக் கேட்டவாறே ஜெயா அமைதியாக இருந்தாள்.

''இப்ப ஒங்க அண்ணுத்தை எங்கே!''

''கடையிலே தான் இருப்பாரு.''

''சாப்பாட்டுக்குக் கூட வரலியே. இங்க இருப்பாருன்னு நெனேச்சிக்கின்னு வந்தேன்'' அதற்குமேல் அவள் ஒரு



வார்த்தை கூடப் பேசவில்லை. அடுக்கி வைக்கப்பட்ட டிபன் கேரியரில் செருகியிருந்த கம்பியையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

ஜெயாவின் முகம் சித்திரத்தில் எழுதியது போன்று நிர்ச்சலனமாக இருந்தது. அந்தக் திமர் மௌனத்தை எஸ்தரும் ஹரியும் மாறி மாறிப் பார்த்து விட்டு ஒருவரை ஒருவர் நோக்கி அதன் புதிரைப் புரிந்து கொள்ள முயன்றனர்.

அப்புறம் அவள் புறப்பட்டாள்.

போகும் முன்பு எஸ்தரைப் பார்த்து ''அக்கா நீ கட்டாயம் ஓட்டலுக்கு வரணும்'' என்றாள்.

''எங்க இருக்குது?''

''ஹரி கிட்டே சொன்னா இட்டாருவாரு''

''நீ எங்க விட்டுக்கு எப்ப வர்றே?''

''மொதல்லே நீ வந்தியானா ஒங்கூடவே வந்துருவேன்.''

எஸ்தர் அவள் கன்னத்தைத் தட்டிக் கொடுத்து வலிக்காத மாதிரி லேசாகக் கிள்ளினாள்.

''வரட்டா? இத பாரு.. நீ சாயங்காலமா அங்கே வந்து சேரு...'' என்று ஹரியின் பக்கம் திரும்பி அவனுக்கு ஓர் உத்தரவு போட்டுவிட்டுக் கிளம்பினாள் ஜெயா.

வெய்யில் இன்னும் தணியாததால் தண்டவாளத்தைக் குறுக்கே கடந்து போகாமல் மேம்பாலத்தின் மீதேறிப்போக முடிவு செய்தாள். மேம்பாலத்தின் ஒரு முனை, டாக்ஸி பஸ்ஸ்டாண்டில் ஹோட்டல் தெருவுக்கு அருகே இறங்கிற்று. அதன் மறு முனை ஊரைத் தொடர்பு கொள்ளும் திருப்பத்தில் இறங்கிற்று. ஜெயா அந்தப் படிக்கட்டில் தான் ஏறினாள். படிகளுக்கு மேலே கூரை தொடங்கும் இடத்தில் ஏறி இரண்டு மூன்று படிகள் தாண்டியிருப்பாள். மேலேயிருந்து வில்வம் கீழே இறங்கிக் கொண்டிருந்தான். கூட இரண்டு ஆட்கள்.

ஜெயாவுக்குள் குபீரென்று எதுவோ பற்றி மூண்டது.

பலி வாங்கப்போகிறவள் மாதிரி அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்தவாறே அவள் ஒவ்வொரு படியாக ஏறினாள்.

வில்வம் இளைத்து விட்டிருந்தான். சில்க் சட்டை போட்டு ஒரு கூலிங் கிளாஸ் அணிந்திருந்தான். தும்பைப்பூ மாதிரி ஒரு மெல்லிய ரக வேஷ்டி. கையில் சிகரெட்டு புகைந்து கொண்டிருந்தது. அவர்கள் மூவரும் ஏதோ பேசியபடியே பாலம் அவர்களுக்காகவே கட்டப்பட்டிருப்பது மாதிரி அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே இறங்கி வந்தனர். ஜெயா வருவது கண்களில் படாத மாதிரி, அவள் ஒதுங்கிக் கொண்டு ஓரத்தில் வழிக்காகக் காத்து நிற்க வேண்டும் என்பது மாதிரி அவர்கள் இறங்கினர்.

ஜெயா நேரே படியின் நடுவில் போய் நின்று கொண்டாள். நீ வேண்டுமானால் என்னைச் சுற்றிக் கொண்டு போ என்று சவால் விடுகிற மாதிரி இருந்தது அவள் நடத்தை.

இரண்டு படி உயரத்தில் வில்வம் நின்றான். இவள் கீழே கால் ஊன்றிக்கொண்டு நின்றாள். அவன் அவளைப் பார்த்தான்.

''நீ பாயின்ட்ஸ்மேன் கேசவன் பொண்ணு இல்லே?'' என்று கூலிங் கிளாஸைக் கழற்றிக் கொண்டே கேட்டான்.

''ஆமா அண்ணாத்தே!'' என்று பக்கத்தில் ஒரு ஜாலரா ஓசை கேட்டது.

ஜெயா கண்களை அகல விரித்துக்கொண்டு இமைக்காமல் அவனைப் பார்த்தாள்.

''இன்னா பொண்ணு அப்பிடி மொறைக்கறே?'' என்றான் வில்வம். அந்தப்பார்வையில் ஒரு கொலைவெறி தாண்டவமாடியதை அவனால் உணர முடிந்தது.

''ஆங்... பார்க்கறேன்... நீ தானே அந்த வில்வங்கறவன்?'' என்று மார்பில் உணர்ச்சி கொந்தளிக்க மேல் மூச்சோடு கேட்டாள்.

''ஏய்... இன்னும்மே வாய்க்கொழுப்பா'' என்று இன்னொரு ஜால்ரா துள்ளிக் கொண்டு வந்தான்.

''உஸ்ஸ்'' என்று ஓசையிட்டுக்கையால் சைகை செய்து அவனைக் கையமர்த்தினான் வில்வம். அவனுடைய முகத்தில் முப்பது வயதுக்கு மேற்பட்ட ஒரு முதுமை தெரிந்தது. புருவத்துக்கு நேர் மேலே லேசான வெட்டுத் தழும்பு. அந்தத் தழும்பு அவனது கண்களுக்கு ஒரு குரூரக் களையை வழங்கியிருந்தது.

அந்தச் சொருக ஓட்டலில் ஒரு வசதி. தொலைபேசி ஆபரேட்டரிடம் காலையில் எழுந்திருக்க வேண்டிய நேரத்தைக் கூறி விட்டால் போதும். மறக்காமல் அந்த நேரத்திற்குத் தொலைபேசி மணியடித்து எழுப்பி விட்டுவிடுவார்.

காலை ஆறு மணிக்கு எழுப்பவேண்டுமெனக் கூறிய அறையில் உள்ளவரை தவறுதலாக விடியற்காலை 4மணிக்கே கூப்பிட்ட பிறகு தவறை உணர்ந்த ஆபரேட்டர், உடனே இப்படிக் கூறி விட்டார்:

''ஹலோ! குட்மார்னிங்! தாங்கள் இன்னும் இரண்டு மணி நேரம் தூங்கலாம்!''

—காயத்ரி.



''காத்தால காசியண்ணன் மேல் லாரி ஏத்திச் சாவடிக்கப் பாத்தியா...''

''ஏய்'' என்று இன்னொருவன் கத்தினான்.

அவனையும் கைநீட்டி வாயடக்கினான் வில்வம்.

''நீ ஆம்பிளைதானே...'' என்று கேட்டு விட்டு அவள் ஓங்கரித்துக் கொண்டு வயிற்றிலிருந்து எடுப்பது போல் காறிவிட்டு ஓரமாகத் துப்பினாள்.

''நீ ஆம்பிள்ளையா இர்ந்தா சொல்றேன் கேட்டுக்கோ... இப்பிடிப் பொட்ட மாதிரி லாரியை வுட்டு ஆளை வுட்டுப் பழி தீர்த்துக் காதே... நேர்ல வா... நேர்ல வர முடியலே இப்பிடிப் பெருச்சாளி மாதிரிப் பதுங்கிக் காசியண்ணனுக்கு ஏதாவது பண்ணே... நீ எந்த லோகத்திலே போயி ஒளிஞ்சாலும் உன்னை இஸ்தாந்து ஒங்கொடலை உருவிடுவேன்... என்னமோ பொம்பளைடான்னு நெனைக்காதே.''

வில்வம் விறைத்து நின்றான்!

''அண்ணாத்தே...'' என்று இரண்டு பேரும் மீண்டும் எகிறிக் கொண்டு வந்தனர். அவர்கள் இருவரையும் கையமர்த்தி விட்டு அவளையே அவன் ஒரு நிமிஷம் வெறித்துப் பார்த்தான்.

அவள் தன் சீற்றம் முழுவதும் பொங்கித் திரண்டு நிற்கக் காளி மாதிரி தென்பட்டாள்.

''அப்புறம்?'' என்று அவன் நிதானமாகக் கேட்டான்.

''அப்புறமா... தூ...'' என்று அவள் இன்னொரு முறை திரும்பிக் காறி உமிழ்ந்தாள்.

அதற்குள் மேம்பாலத்தின் மீதிருந்து நாலைந்து பேர் கீழிறங்கி வந்தனர்.

''பாக்கறேன்'' என்று மட்டும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு ''வாங்கடா போகலாம்'' என்று கூட வந்தவர்களை அழைத்தான்.

''இன்னா அண்ணாத்தை... இவளை அப்படியே இந்தப் பாலத்து மேலேயே போட்டு மெறிச்சிட்டு வர்றோம்...''

வில்வம் அவர்கள் இருவர் கரங்களையும் பிடித்து இழுத்துக் கொண்டு விடுவிடுவென்று படி இறங்கினான். ஜெயா ஆவேசம் தணியாத மாதிரி நிமிர்ந்தவாறே படியேறினாள்.

படிகளில் இறங்கும் போதே வில்வம் ஒரு முறை திரும்பி அவளைப் பார்த்தான். அவள் கையில் டிபன் கேரியர் நடுங்கிக் கொண்டிருந்தது. அவளது எச்சரிக்கையில் ஓர் எரிமலைச் சீற்றம் குமுறியது இன்னும் காதில் கேட்டது.

அது வெறும் மிரட்டல் அல்ல என்று வில்வத்துக்குத் தோன்றிற்று. ஒரு பெண்தானே என்று முதலில் அவனுக்கு அலட்சியம் பிறந்தது. படிகளில் இறங்கி நடக்க நடக்க அது என்ன தெய்வம் வந்தவள் மாதிரி பேசுகிறாள் என்று நினைத்தான்.

எனினும் இப்படி முகத்துக்கு முகம் வந்த சவாலை விட்டு விடுவது அவனது சுய கௌரவத்தை எங்கோ இடித்தது.

(தொடரும்)

சட்டத்துக்கு அப்பால்....

அன்னம்



கீழே ஆபீஸ் அறையில் ஏதோ சத்தம் கேட்க மாடியிலிருந்து இறங்கிப் போன சோபனா, அங்கே எட்டிப் பார்த்த மறு கணம் ''வீல்'' என்று கத்திக் கீழே விழுந்து மயக்கம் அடைந்தாள்.

அவள் கணவன் விட்டல் நெஞ்சில் புதைந்த கத்தியுடன் கீழே மல்லாந்து கிடந்தான். இரும்புப் பெட்டி திறந்து கிடந்தது. கையில் கொண்டு வந்திருந்த ''பிரீப் கேஸில்'' எல்லாவற்றையும் எடுத்துத் திணித்துக் கொண்டிருந்தவன் சோபனாவின் காலடிச் சப்தம் கேட்டுத் திரும்பினான். அவன் முகத்தை மறைத்துக் கட்டியிருந்த கைக்குட்டை கழன்று கீழே விழுந்தது. சோபனா அவன் யார் என்பதைப் புரிந்து கொண்டாள். அடுத்தாற்போல் அவள் பார்வை மல்லாந்து கிடந்த விட்டல் மேல் விழ, அப்படியே கீழே சாய்ந்து மயங்கிப் போனாள் அவள்.

இரும்புப் பெட்டியைக் குடைந்தவன், சோபனாவின் கழுத்தையும் நெரிக்க முயன்றான். ஆனால் மற்றவன் தடுக்கவே, இருவரும் புறப்பட்டு, மாடிப்படி வழியாகப் பாய்ந்து, பின்புறமாக வைக்கப்பட்டிருந்த காரில் ஏறி இருளில் மறைந்துபோனார்கள்.

• • •

சென்னை உயர்நீதி மன்றத்தில் அந்த வழக்கு பல நாட்களாக நடந்து கொண்டு இருக்கிறது. கொலையுண்டவர் ''விட்டல்''— ஒரு பெரிய கம்பெனியின் ஆடிட்டர்.

கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர் அந்தக் கம்பெனியின் பாகஸ்தர்களில் ஒருவரான ரங்கேஷ்.

முக்கியமான சாட்சி — சோபனா விட்டலின் மனைவி. ரங்கேஷை அந்த அறையில் தன் கண்களால் பார்த்ததாகச் சொல்கிறாள்.

கொலையின் நோக்கம் — 'ஆடிட்' செய்த விட்டல், கம்பெனியில் ரங்கேஷ் நடத்திய திருவிளையாடல்களைக் கண்டுபிடித்து விட்டான். வெளியே தெரிந்தால் ரங்கேஷ் பல வருஷங்கள் கம்பி 'எண்ண வேண்டி வரும்.

குற்றவாளிக் கூண்டில் இருந்த ரங்கேஷ் முகத்தில் கவலையும் பயமும் இல்லை. அவனை விடுவிக்க பலமான சாட்சியங்கள் உருவாக்கப்பட்டு இருந்தன. அவன் சார்பில் பிரபல வக்கீல் சட்டநாதன் ஆஜராகியிருக்கிறார்.

சீர்காழியில் பிறந்த போது அவருக்கு வைத்த பெயர் அது: ஆனால் அவர் கைக்குள் சட்டம் அடங்கிக் கிடந்தது. அவர் சொன்னபடியெல்லாம் பேசியது: ஆடியது.

சட்டநாதன் எடுத்த கேஸ் தோற்றதாகச் சரித்திரம் கிடையாது. அரசாங்க வக்கீல்கள் அவரைக் கண்டால் பயந்தார்கள். எப்படியும் தான் தோற்கப்போகிறோமே என்று அசிரத்தையாக இருந்தார்கள்.

சோபனா தவித்தாள். தன் கண்களால் கண்ட சத்தியம் இங்கு கற்பனையாக மாற்றப்படுவதைக் கண்டு குமைந்தாள். அவளால் என்ன செய்ய முடியும்?

சட்டநாதன் அவள் சாட்சியத்தை நார் நாராகக் கிழித்து எறிந்து விட்டார். அன்று அவள் பார்த்த ரங்கேஷ் என்ன சட்டை போட்டிருந்தான் எனக் கேட்

டார். சட்டை கட்டம் போட்டதா. 'பிளெயினு?' என்று விசாரித்தார். ''உன் கணவரைப் பார்க்க வருபவர்கள் எல்லோரையும் இப்படித்தான் கவனித்து வந்திருக்கிறாயா?'' என்று விஷமமாக வினவினார். ஒற்றைத் தலை வலிக்காக எப்போதோ ஆறு மாதங்கள் அவள் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்ததைப் —பார்வையில் கோளாறு — என ஒரு கண் வைத்தியர் மூலம் கோர்ட்டுக்கு எடுத்துச் சொல்ல வைத்தார்.

குற்றம் நடந்த அன்று ரங்கேஷ் தன்னுடன் பம்பாயில் இருந்ததாக நான்குபேர் சத்தியப் பிரமாணம் செய்தார்கள். புதிதாக கம்பெனியை ஆடிட் செய்தவர்கள், கம்பெனியில் ஏற்பட்ட தவறுகளுக்கு ரங்கேஷ் மட்டும் பொறுப்பு இல்லை என வாதித்தார்கள். ரங்கேஷ் பசையுள்ளவன். விட்டல் இரும்புப் பெட்டியைக் காலி செய்வது அவனுக்குத் தேவையற்றது எனச் சட்டநாதன் அடித்துச் சொன்னார்.



சோபனாவிற்குப் புரிந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அவள் கணவனைக் கொலை செய்த ரங்கேஷ் விடுதலையாகப் போகிறான்! நிச்சயமாக அவன் தான். எத்தனை சாட்சியங்கள் மறுத்தாலும் அவள் நம்பப் போவதில்லை. அந்த ஒரே ஒருகணம் அவள் நெஞ்சில் அழுத்தமாகப் பதிந்திருந்த அந்தக் காட்சி அவளால் மறுக்க முடியாதது.

பணம் — கேவலம் பணம் — ஒரு உண்மையை எப்படி மறைத்து விடுகிறது. வயிற்றுப் பிழைப்பிற்காக — இந்த வக்கீல்— ஒரு குற்றவாளியை - அதுவும் ஒரு கொலைகாரனை எப்படியெல்லாம் உத்தமனாகச் சித்திரிக்கிறார்!

கையைத் தூக்கித் தூக்கி — சுட்டு விரலைக் காட்டிக் காட்டி — அவளைக் குருடி என்றும், அவள் கணிப்பு தவறு என்றும், அவனே ஏன் இந்தக் கொலையைச் செய்திருக்கக் கூடாது என்றும் கேட்கிறாரே — இந்தச் சட்டநாதன்... அவரை... அவரை....

சோபனா சிலிர்த்தெழுந்தாள்.... அரசாங்க வக்கீலைக் கூப்பிட்டாள். அவள் சொன்ன விவரத்தை நம்ப முடியாமல் அவர் திரும்பத் திரும்பக் கேட்டார். பின்னர் அவர் நீதிபதியிடம் ஏதோ பேசப்போக வழக்கு அன்று ஒத்திப் போடப்பட்டது!

• • •

மறுநாள்: நீதிபதி ஆசனத்தில் வந்து அமர்ந்தார்.

அரசாங்க வக்கீல் தாம் சட்டநாதனைச் சாட்சியாக விசாரிக்க விரும்புவதாகச் சொன்னதும் நீதிமன்றம் வியந்தது. இந்தப் பப்ளிக்பிராசிகியூட்டருக்கு இப்படி ஒரு தைரியமா? சட்டநாதன் அலட்சியமாகச் சாட்சிக் கூண்டில் ஏறினார்.

''ஒரே ஒரு கேள்வி, மிஸ்டர் சட்டநாதன்!... உங்கள் வலது கைமோதிர விரலில் அணிந்துள்ள மோதிரத்தைக் கழற்றுகிறீர்களா?''

சட்டநாதன் ஒரு கணம் திகைத்துப் போனார். பின்னர் மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தார்.

''இந்த மோதிரம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது என்று சொல்ல முடியுமா?''

ரங்கேஷ் ஒருமுறை கேஸ் விஷயமாக இவரைப் பார்க்க வந்தபோது, இந்த மோதிரத்தைப் போட்டுக் கொண்டு வந்ததும், தான் அதைக் கேட்டபோது உடனே கழற்றிக் கொடுத்ததும் கவனம் வந்தது. இப்போது அதைச் சொன்னால் கேஸ் திசை மாறும் என்பதும் அவருக்குத் தெரியும்.

அவர் மூளை அதி விரைவில் செயல்பட்டது.

''இது என் நண்பர் ஒருவர் எனக்கு வெகுமதியாகக் கொடுத்த மோதிரம்...''

''யார் அந்த நண்பர் எனக் கூற முடியுமா?''

''அவரையே கூடக் காட்ட நான் தயார்... ஆனால் எமன் முந்திக் கொண்டு விட்டானே!''

''யார் அந்த நண்பர்...?'' அரசாங்க வக்கீல் அதட்டினார்.

"விட்டல்... இந்த வழக்கில் கொலையுண்டதாகக் கூறப்படும் நபர்... மைடியர் ஃப்ரெண்டு ஆடிட்டர் விட்டல்."


"அப்படியா? எப்போது கொடுத்தார்?"

"நினைவில்லை."

"தேதி வேண்டாம். உத்தேசமாகச் சொல்லுங்கள். போதும்!"

"ஒரு வருஷம் இருக்கும் என்று நினைக்கிறேன்."

"தாங்க்யூ!..." என்றார் பிராஸிக்யூடர் மகிழ்ச்சியுடன். சட்டநாதன் பெருமிதத்துடன் ரங்கேஷைப் பார்த்துப் புன்னகை செய்து விட்டு இறங்கினார்.



அடுத்த சாட்சி. காதில் கடுக்கன்கள் மின்ன – கழுத்தில் மைனர் செயின் ஆட – நாற்பது வயது மதிக்கத்தக்க நபர்.

"உங்கள் பெயர்."

"கதிரேசன்."

"தொழில்?"

"நகை வியாபாரம்... மீனாட்சி ஜுவல்லரீஸ்..."

"இந்த மோதிரத்தை நன்றாகப் பாருங்கள்..."

கதிரேசன் பார்த்தார்.

"நம்ம கடையில் செய்ததுதான்..எம்.ஜெ. என்று பொறிக்கப்பட்டுள்ளது."

"எப்போது. யாருக்காகச் செய்தது?"

தன் கைப்பையிலிருந்து ஒரு புஸ்தகத்தை எடுத்துப் புரட்டினார்.

"ஆடிட்டர் . விட்டலுக்காக..."

"தேதி..."

"பிப்ரவரி இருபத்தைந்து ஆர்டர் கொடுத்தார்கள்.. மார்ச் ஐந்தாம் தேதி டெலிவரி கொடுத்தேன்..."

"தேதியை மறுபடியும் சொல்லுங்கள்.."

"மார்ச் மாதம் ஐந்தாம் தேதி..."

"யுவர் ஹானர் .. மோதிரம் மார்ச் ஐந்தாம் தேதி – அதாவது விட்டல் கொலையுண்ட தினம் தான் அவரிடம் சேர்க்கப்பட்டிருக்கிறது..." சாட்சியிடம் திரும்பிய அரசாங்க வக்கீல்... "அவரே கடையில் வந்து வாங்கிக் கொண்டாரா?" எனக் கேட்டார்.

"நான் தான் நேரில் இரவு ஏழு மணிக்குக் கொண்டு கொடுத்தேன்... நம்ம கம்பெனிக்கும் அவர்தான் ஆடிட்டர்..."

"யுவர் ஹானர்... மார்ச் ஐந்தாம் தேதி இரவு ஏழு மணிக்கு மோதிரம் விட்டலிடம் சேர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. பத்து மணிக்கு விட்டல் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். என் மதிப்பிற்குரிய நண்பர் சட்டநாதனிடம் எப்படி இந்த மோதிரம் ஒரு வருஷமாக இருக்க முடியும்?"

"மோதிரத்திற்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை" என்று சட்டநாதன் முழங்கினார்.

"இருக்கிறது!" அடித்துப் பேசினார் அரசாங்க வக்கீல். "மோதிரம் கொலையுண்ட அறையிலிருந்து களவாடப்பட்டிருக்கிறது. அது இப்போது என் மரியாதைக்குரிய நண்பரிடம் இருக்கிறது. அவரிடம் இருப்பதால் நான் சொல்கிறேன் – இது கொலையாளியால் அவரிடம் சேர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.. அல்லது அவரே விட்டலைக்...."

"ஸ்டாப் இட்!" வெடித்தார் சட்டநாதன். "இந்த மோதிரம்... இந்த மோதிரம்... இந்த ராஸ்கல் ரங்கேஷ்தான் கொடுத்தான்!" என்றார் ரங்கேஷைச்சுட்டிக் காட்டி...

ரங்கேஷ் முகம் வெளிறிப் போயிற்று!

விட்டலின் படத்திற்கு மாலை போட்டு வணங்கிய சோபனா நினைத்துக் கொண்டாள்: "கடவுள் எப்போதும் தூங்குவதில்லை!"



கரகரப்பு கரைஞ்சு போகுது!
தொண்டையிலே கரகரப்பு என்றால் தொல்லை மிகக் கடுமைதான். யாரையுமே பாதிக்கும் இது நம்மைப் பிடிக்கும் வழிகளோ ஏராளம். புகை, தூசு, எண்ணெய் மிகுந்த கார உணவு. குறிப்பாக ஐஸ் க்ரீம் மற்றும் குளிர்ந்த பானங்கள். கரகரப்பின் முதல் அறிகுறி தோன்றும்போதே ஸ்ட்ரெப்ஸில்ஸ் சாப்பிடுங்கள். ம்ம்ம்.. இது சுவைமிக்கது. இது கரைந்து போகும்போதே வேலையைத் தொடங்குகிறது. தொண்டைக்கு இதமளிக்கிறது. வாயில் புத்துணர்ச்சி திகழச் செய்து சுத்தமாக வைக்கிறது.
சுவையுடன் சுகமளிக்குது
ஸ்ட்ரெப்ஸில்ஸ்
தொண்டைக் கரகரப்புக்கு சுவையான சிகிச்சை
4 இனங்களிலே ஆரஞ்ச், லெமன், ஜிஞ்ஜர்-லெமன் மற்றும் ரெகுலர்.
Strepsils

ஜனநாயகத்தின் தாயகம்

வாஸந்தி

13

லண்டனில் டி. வி. நிகழ்ச்சிகள் மிகமிக சுவாரஸ்யமானவை.

நம் ஊரில் உப்புச்சப்பில்லாத, செய்திச் சுருளைப் பார்த்து அலுத்துப் போன எனக்கு லண்டனில் செய்தி வாசிப்பவரை அதிகம் காட்டவே காட்டாமல் அநேகமாகப் படங்கள் மூலமாகவே செய்திகளை அழகிய ஆங்கிலத்தில் பின்னிக் கொண்டு போவது சுவாரஸ்யமாய்த் தோன்றிற்று.

நான் போய்ச் சேர்ந்த அன்று மிகப் பரபரப்பான செய்தி அம்சம் இருந்தது. பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி தாட்சருக்கு வேண்டியவராக ஒரு சமயத்தில் இருந்த அவரது (வியாபார தொழில் — Trade and Industry) மந்திரி திரு. பார்க்கின்ஸன் பதவியிலிருந்து ராஜினாமா செய்து விட்டார் என்ற செய்தி. ஐம்பத்து மூன்று வயதான அவருக்கும் ஸாரா கீஸ் என்ற அவரது (36 வயது) காரியதரிசிக்கு மிடையே இருந்த ரகசியக்காதல், அவர் மூலம் தான் கர்ப்பமானதை ஸாரா பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்ததில் அம்பலமாகிப் போனதால், தொடர்ந்து அவர் பதவியிலும் கட்சியிலும் இருக்கக் கூடாது என்று கன்சர்வேடிவ் கட்சிக் காரர்கள் பதைக்க, திருமதி தாட்சரும் கட்சியின் கொள்கைகளைக் காப்பாற்றும் பொருட்டு, "வருத்தத்துடன் திரு. பார்க்கின்ஸனது ராஜினாமாவை ஏற்றுக் கொண்டதாக" டி. வி. செய்தி அறிவித்தது. அதுவும் எப்படி? பெரிய கோலாகல நிகழ்ச்சி போல, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பிரதம மந்திரி செய்தியை அறிவித்ததும் அங்கத்தினர்கள் உற்சாகமாகக் கையைத் தட்டி, திருமதி. தாட்சரின் பொறுப்புணர்வை மெச்சி, அவரது கையைக் குலுக்கி — ஒரே ஆரவாரமான காட்சி! பார்க்கின்ஸன் சினிமாக் கதாநாயகன் சோகத்திற்குள்ளானது போல — ஒரு கம்பீரச் சிரிப்புடன், சுருக்கமாக இரண்டு வார்த்தைகள் சொன்னார்: "நான் விலகிக் கொள்கிறேன்!" பத்திரிகைக்காரர்கள் அவருடைய வாயிலிருந்துவார்த்தைகளைப் பிடுங்க மல்லுக்கு நிற்கிறார்கள்.

அவர் ஒரே பேச்சாக— "No Comments!"

ஆனால் பி. பி. ஸி. — நியூஸ் ஸர்வீஸ் அத்துடன் நிற்கவில்லை. கிட்டத்தட்ட நிறைமாதக் கர்ப்பம்போல் தோற்றமளித்த அவரது செகரட்டரியையும் 'போக்கஸ்' செய்தது. அடுத்த இரண்டு நாட்களுக்குச் செய்திச் சுருளில் பார்க்கின்ஸனின் நடவடிக்கைகளைக் காட்டிய வண்ணம் இருந்தது. மறுநாள் காலை "ப்ரேக்ஃபாஸ்ட்" செய்தியில் "பார்க்கின்ஸன்ஸ் கிளம்பத் தயாராகிறார்கள்" என்று அவர்கள் மூட்டை கட்டுவதைக் காண்பித்தது. இரவுச் செய்தியில், "கிளம்புகிறார்கள்!" என்று குடும்பம் முழுவதும், நாய் உள்பட அரசாங்க வீட்டைக் காலி செய்து சாமானை வண்டியில் ஏற்றுவது வரை காட்டிற்று!

லண்டனில் வெளியாகும் தினசரி செய்திப் பத்திரிகைகள் மிகத்தரமானவை. மிக சுவாரஸ்யமான கட்டுரைகள் கொண்டவை. Manchester Guardian, London Times, Sunday Telegraph, Observer போன்ற தினசரிகளை நான் மிக ஆர்வத்துடன் எந்த அவசரத்திலும் விடாமல் படித்தேன். உண்மையில் ட்யூப் ரயிலில், ஒன்றிலிருந்து ஒன்றரை மணி நேரம் பயணம் செய்யும் போது தான் அநேகம்பேர் அன்றைச் செய்தித்தாள்களைப் படிக்கிறார்கள். பார்க்கின்ஸனது விவகாரம்



○ டிரஃபால்கர் சதுக்கம்



○ லண்டனில் ''பிக்பென் கடிகாரமும், பாராளுமன்ற கட்டிடமும்!

செய்தித் தாள்களில் பல வேடிக்கையான ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்குக் காரண மாயிற்று. 'யார் அதிகம் பரிதாபத்துக்குரியவர்? மனை வியா, ஆசைநாயகியா?' போன்ற குவிப்புக்கள். ஒரு வேடிக்கை என்னவென் றால் மனைவிக்குப் பரிந் ததை விட ஆசை நாய கிக்குத்தான் அதிக பரிவு பிரிட்டிஷ் பெண்கள் காட்டுவதாகத் தோன் றிற்று. அரசியல் ரீதியில் பல ரேஹஸ்யங்கள் தெரி விக்கப்பட்டன. திரு.பார்க் கின்ஸன் அளவுக்கு மீறி விஷயங்கள் தெரிந்து கொண்டு விட்டிருந்தார் என்றும் மார்க்கரெட் தாட் சருக்கு அவரால் சங்கடம் ஏற்பட்டது என்றும் இந்தக் காதல் விவகாரம், அவரை விலக்க ஒரு சாக்காக அமைந்ததாகவும் பத்திரிக் கைகள் தெரிவித்தன.

நான்கே நாட்கள் தான் நான் லண்டனில் தங்க உத்தேசித்திருந்தேன். (அது லண்டனுக்கு ரொம்பக் குறைவு என்று பிறகு மிக வும் வருந்தினேன்.) லண்டன் முழுவதையும் விரைவில்/ பார்க்கும் ஒரே வழி, காலையிலிருந்து மாலை வரை சுற்றிக் காட்டும் டூரிஸ்ட் பஸ்ஸில் செல்வது தான் என்று தீர்மானித்து டிக்கெட் வாங்கிக்கொண்டு, மறுநாள் காலை டீ.வி.யில் 'ப்ரேக்ஃபாஸ்ட் நியூஸ்' கேட்ட கையுடன் அவசர மாகக் கிளம்பி டூரிஸ்ட் பஸ் நிலையத்துக்குச் சென்று பஸ் ஏறினேன். பஸ்ஸில் நான் ஒருத்திதான் இந்தியன். பாக்கி அனைவரும் சற்று வயதான அமெரிக்க ஜோடிகள். எங்களுக்கு லண்டனை விவரிக்க, ஒரு பெண் கைட் வந்தார். மிக அழகிய ஆங்கிலத்தில் ஆங்கிலேயருக்கே உரித் தான ஹாஸ்ய உணர் வுடன், சரித்திரப் பிரஸித்தி பெற்ற லண்டனின் பெரு மைகளை ஒரு கலா ரஸனை யுடன்தெளிவாகச்சொல்லிக் கொண்டு போனார்.

'லண்டன் அலுத்துப் போய் விட்டது' என்று ஒருவன் சொன்னால் அவ னுக்கு வாழ்வே அலுத்துப் போய்விட்டது என்று அர்த் தம்! என்று டாக்டர் சாமு வேல் ஜான்ஸன் சொன்ன ராம். பார்க்கப் பார்க்க, இருக்க இருக்கச் சுவை குன் றாத இடம் லண்டன். இரு நூறு வருஷங்களாக ஆங்கிலத்துடன் ஏற்பட்டுப் போன பந்தம் காரணமோ என்னவோ! ஆங்கில இலக்கி யமும் ஆங்கிலேய ஐரோப் பிய சரித்திரமும் பாடமாக மாணவப் பருவத்தில் எடுத் துக்கொண்டிருந்த எனக்கு, லண்டனின் ஒவ்வொரு தெருவின் பெயரும், நாடகக் கொட்டகையின் பெயர் களும், மற்ற இடங்களும் பழக்கப்பட்ட பெயர்களாக இருந்ததால், மறுபடி மாணவப் பருவத்துக்குத் தாவினாற்போல் நாடி நரம்புகளில் எல்லாம் புதிய ரத்தம் பாய்ந்து உற்சாக மூட்டிற்று.

பஸ் ரஸ்ஸல் ஸ்ட் ரீட்டை விட்டுக் கிளம்பிப் பிரஸித்தி பெற்ற ரஸ்ஸல் ஸ்க்வேரைத் தாண்டி முன் னால் நகர்ந்ததும் எதிர்த் தாற்போல் தெரிந்த ஒரு கட்டிடத்தையும் அதனுள் ஒட்டியபடி இருந்த முக் கோண வடிவப் பூங்காவை யும் கைட் பாமெலா கட்டிக்காட்டினார். ''பூங்கா வில் இருக்கும் ஒரு கிழவ ரின் சிலையைப் பார்த்தீர் களா? மனித இனம் என் றென்றும் அவருக்காகக் கடன் பட்டிருக்கிறது. யேசு வுக்குப் பிறகு மனிதாபி மான தத்துவத்தைவாழ்ந்து காட்டிய மகா புருஷர்— ''காந்தி''யின் சிலை! நீங்கள் எல்லாரும் 'காந்தி' படத் தைப் பார்த்திருப்பீர்கள்.

○ பிரிட்டிஷ் அரசியின் மெய்க்காவலர்கள்



இது அவர் படித்த கல்லூரி King's College''

என் கண்களில் ஏன் அசட்டுப் பிசட்டென்று நீர் நிரம்புகிறது என்று புரியாத குழப்பத்துடன் பஸ் சென்ற புதிய தெருக்களைப் பார்ப்பதில் மனத்தைத் திருப்பினேன். இருபத்தி ஐந்து வருஷங்களுக்குமுன், லண்டன் மிக அசுத்தமாக இருந்ததாகப் பாமெலா சொன்னர். 1954—ஆம் ஆண்டு வரை நிலக்கரி தான், வீட்டைச் சூடுபடுத்தவும், மற்ற வேலைகளுக்கும் எரிபொருளாக இருந்ததாம். ஒவ்வொரு கட்டிடத்துக்கு மேலும் இன்னும் புகைப் போக்கிகள் (105 புகைப் போக்கிகள் கொண்ட கட்டிடம் ஒன்று இருக்கிறது!) இருக்கின்றன. இந்தப் புகை, நகரத்திலிருந்த கட்டிடங்களையெல்லாம் கரியாக்கியது மட்டுமில்லாமல், சூழ்நிலை, சுவாசிக்கும் காற்றை விஷமாக்கி விட்டது. புகையுடன் (Smoke) சேர்ந்த பனியை (Fog) லண்டன் வாசிகள் Smog என்று சொல்ல ஆரம்பித்தார்கள். 1953—ஆம் வருஷம் இந்த Smog-கினல் நிறையபேர் மாண்டு போனர்கள். மறு வருஷமே பிரிட்டிஷ் பாராளுமன்றம், 'இனிமேல் யாரும் லண்டனில் நிலக்கரி உபயோகிக்கக் கூடாது' என்று சட்டத்தை அமுலாக்கி விட்டது. உடனடியாக லண்டனின் மூலை முடுக்கைக் கூட விடாமல் மின்சார, காஸ் வசதியைச் செய்து விட்டது அரசாங்கம். லண்டனைச்சுத்தப்படுத்தும் வேலையும் ஆரம்பிக்கப் பட்டது. சுத்தப்படுத்தப் பட்ட இடமெல்லாம் இப்பொழுது பனிச்சென்று லேசாக 'க்ரீம் நிறத்தில் கண் கவரும்' அழகுடன் இருக்கிறது. சுத்தம் செய்யும் இந்த வேலையை விஞ்ஞான ரீதியில் மிக நுணுக்கமாக அதற்கென்றே பிரத்தியேகக் கருவிகளின் உதவியுடன் கவனமாகச் செய்கிருர்கள். கன்னங்கரேலென்ற சில பகுதிகள் இன்னமும் இருக்கின்றன. அதுவே லண்டனுக்கு ஒரு கதாபாத்திரத் தனத்தைக் கொடுத்திருப்பது போல் எனக்குத் தோன்றிற்று.

பல ஹிந்தி சினிமாக்களில் வெளி நாட்டுக்காட்சி என்ருல் நிச்சயம் ஒரு ஷாட் இருக்கும். கதாநாயகிகள் கையில் புறுவைப் பிடித்துக் கொண்டு டிரஃபால்கர் ஸ்க்வேரைச் சுற்றித் தீவிரமான காதலில் ஓடி ஆடும் ஷாட்! லண்டனில் இருக்கும் புறுக்கள் ஒட்டு மொத்தமாக இங்கே வாசம் செய்கிருற் போல் தோன்றிற்று. ஸினிமாக் கதாநாயகியாக அங்குபாடிக் கொண்டு நிற்க வேண்டிய அவசியமில்லை. புறுக்கள்தாமாகதமது தோளிலும்தலையிலும்வந்து அமர்கின்றன. அவைகளுக்குத் தானியம் போடுவதற்காகப் பிரத்தியேகமாகத் தானியம் விற்கிருர்கள். அந்தப் பிரும்மாண்டமான நாற்சந்தியின் மையத்தில் 185 அடி உயரத்தில் நிற்கிறது நெல்சனின் சிலை; ட்ரஃபால்கர் போரின் வெற்றிச் சின்னமாக.

பல முக்கியமான அலுவலகக் கட்டிடங்கள் கொண்ட மிகப் பிரபலமான நாற்சந்தி இது. எந்த நேரத்திலும் போக்குவரத்து இங்கு அதிகமாகத் தெரிகிறது. எல்லா நிர்வாகத்திலும் இந்தியா பிரிட்டிஷ் முறையையே பின்பற்றுவதால் இங்கு போக்குவரத்து விதிகளும், தொலைபேசி இயங்குவதும், எனக்குக் குழப்பத்தைத் தரவில்லை. ''அமெரிக்கர்களைப் போல் நாங்கள் வலது சாரிகள் இல்லை. இடது சாரிகள் — போக்குவரத்தில்!'' என்று எங்கள்கைடு வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

. இடதுசாரிகளோ வலது சாரிகளோ ஜனநாயகத்தின் ஆரம்பவித்து இங்கிலாந்தில் தான். அரசாட்சி செங்கோலோச்சிய 12—ஆம் நூற்ருண்டிலேயே அரசன் ஜானை எதிர்த்து 'மாக்னகார்ட்டா' என்ற ரூபத்தில் விதைக்கப்பட்டது. மக்களின் ஜனநாயக உணர்வை மதிக்கக் கற்றுக் கொள்ளாவிட்டால், தங்களுக்கும், முடியையும் சிரசையும் இழந்த சார்லஸ்—1—இன் கதிதான் ஏற்படும் என்று பிரிட்டிஷ் மன்னர்கள் உணர்ந்திருக்கிருர்கள். இந்த அவர்களது ஒத்துழைப்பினுலோ என்னவோ பிரிட்டிஷ் மக்களுக்கு அரச குடும்பத்தினரிடம் இன்னமும் மிகுந்த பற்றுதலும் மரியாதையும் இருப்பது தெரிகிறது.

ஹைட்பார்க் என்று ஒரு பெரிய பூங்கா இருக்கிறது. அங்கு பேச்சாளர் மூலை (Speaker's Corner) என்று இருக்கும் மூலை சரித்திரப் பிரஸித்தம்.

அவன்: உன் கழுத்திலேதான் ஒரு நகையும் இல்லையே. அப்புறம் ஏன் வெளியே போகும் போதெல்லாம் புடவைத் தலைப்பால் கழுத்தைப்போர்த்திக் கிட்டுப் போறே?

இவள்: அப்போதான் பார்க்கிறவங்க கழுத்து நிறைய நகை போட்டுக்கிட்டுத் திருட்டுப் பயத்தாலேபோர்த்திக்கிட்டுப் போகிறேன்னு நினைச்சிக்குவாங்க.

—அரியநாச்சி ரத்னவேலு.





எரிச்சலூட்டும் இருமல்
அதிகாலையில் ஐந்துமணிக்கே
உங்களை எழுப்பிவிடும்.
ஆனால் நீங்கள்
டாக்டரை எழுப்ப முடியுமா?
VOCACIL
வொ கா ஸி ல்
உங்கள் அருகிலேயே
ஒரு டாக்டர்.
Trikaya.PPV.1.83 TAM

ஞாயிறன்று மாலை யார் வேண்டுமானாலும் இங்கிருக்கும் பெஞ்சின் மேல் நின்று கொண்டு சொற்பொழிவு கொடுக்கலாம். காரசாரமாக யாரை வேண்டுமானாலும் தாக்கலாம் — பிரிட்டிஷ் ராணியைத் தவிர—! அரசியைத் தாக்கிப் பேசக் கூடாது என்கிற மரபை இவர்கள் இன்னமும் கடைப்பிடிப்பது எனக்கு வியப்பை அளித்தது.

மரபிற்கும் மரபின் வழி வந்த சில ராஜகுல சம்பிரதாயங்களுக்கும் இவர்கள் காட்டும் ஆர்வத்திற்கு 'Changing cf ths guards' என்ற சடங்கு ஓர் உதாரணம். தினமும் சரியாகப் பகல் பதினொரு மணிக்குப் பக்கிங்காம் அரண்மனையின் பிரதான வாயிலில் கண்ணைப் பறிக்கும் சிவப்பு கறுப்பு உடையில் இருக்கும் குதிரை வீரர்கள் இடம் மாறிவேறு வீரர்கள் வருவார்கள். அந்த மாற்றம் அமர்க்களமான பாண்டு வாத்தியத்துடன் நடைபெறுகிறது. குதிரைகளும், அந்தச் சீருடையும் வீரர்களின் கம்பீரத் தோற்றமும் குழந்தைத்தனமான ஓர் ஆர்வத்தை எல்லாருக்கும் கிளப்பி விடுகிறது. முக்கியமாக அமெரிக்க டூரிஸ்டுகளுக்கு. இந்தச் சடங்கைப் பார்ப்பதற்குத்தினம் நூற்றுக்கணக்கான ஜனங்கள் தெருவோரங்களில் நிற்கிறார்கள். நமது குடியரசு விழாவின் போது நடக்கும் பீட்டிங் தி ரிட்ரீட் இதைவிட நேர்த்தியானது என்று நான் நினைத்துக் கொண்டேன். கூட்டத்தில் அரை மணி கால் கடுக்க நின்று நான் சோர்ந்து போயிருந்தேன்.

அங்கிருந்து 'வெஸ்ட் மினிஸ்டர் ' ஆபி' க்கு அழைத்துச் செல்லப் பட்டோம். அந்த விஜயம் ஓர் அற்புதமான அனுபவம்!



அருள்வாக்கு

● வியாதிக்கு மருந்து மாதிரி பசிக்குச் சாப்பாடு ரொம்பவும் அளவாகத் தான் போட வேண்டும்; அதாவது பசியைத் தீர்த்துக் கொள்ளத்தான் ஆஹாரமே தவிர ருசியைத் தீர்த்துக் கொள்ள அல்ல என்று ஆசார்யாள் சொல்லியிருப்பதாகச் சொன்னேன். மற்ற வியாதிகளுக்கும் இந்த 'க்ஷுத் வியாதி'க்கும் ஒரு வித்தியாசம். தலைவலிக்கு மருந்து போட்டால் அது போய் விடுகிறது. மறுபடி என்றைக்கோ ஒருநாள் தான் வருகிறது. ஜ்வரமும் இப்படித்தான். ஆனால் இந்தப் பசி வியாதி மட்டும் இப்போது மருந்து போட்டு ஸ்வஸ்தப்பட்டாலும் வேளை தப்பாமல் மறுபடி மறுபடி 'அட்டென்டன்ஸ்' கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. இப்படி இயற்கையை ஏவி விட்டு ஈச்வரன் வேடிக்கை பார்க்கிறான். நமக்குப் பரீக்ஷை வைக்கிறான். நாம் பாஸ் பண்ணினால் தான் பெருமை. அவனுடைய அருந்துணையை நம்பி, நாம் ஸங்கல்பம் பண்ணிக் கொண்டு உறுதியாயிருந்தால், அவன் கை கொடுத்துப் பாஸ் பண்ண வைத்து, நல்லாரோக்கியம், நல்ல ஆத்மா விருத்தி முதலான ப்ரைஸ்களையும் கொடுப்பான்.

நம்முடைய த்ருடசித்தம் முக்கியம். எங்கேயோ ஒரு இடத்துக்குப் போகிறோம். அவர்கள் விலக்கப்பட்ட பதார்த்தம் எதையோ உபசாரம் பண்ணிச் சாப்பிடச் சொல்கிறார்கள். அந்த ஸமயத்தில் தாக்ஷிண்யத்தாலோ அவர்கள் தப்பாக நினைக்கப் போகிறார்களே என்றோ, அதைச் சாப்பிட்டு விடக் கூடாது. 'பிரின்ஸிபிளை' விடக் கூடாது...

நாக்கை அடக்க முடியவில்லை என்று விடவே கூடாது. ஆப்பிளைச் சாப்பிட்டுத்தான் ஆடம் அடிமட்டத்துக்கு விழுந்து விட்டான் என்கிறார்கள். Forbidden Fruit மாதிரி நம் சாஸ்திரப்படி Forbidden Food எதையுமே சாப்பிடக்கூடாது. மீறினால் அது நம்மைக் கீழே தான் இறக்கும். இம்மாதிரி 'டெம்ப்டேஷன்' உண்டாகிற சமயங்களில், 'இப்போது இது உகந்த ருசி என்று சாப்பிட்டாலும் சாப்பிடுகிற இந்த ஐந்து பத்து நிமிஷங்களுக்கு அப்புறம் ருசி நாக்கில் நிற்கிறதா என்ன? இது உகந்த பதார்த்தம் என்று சாப்பிட்டாலும் இது என்ன சாச்வதமாக வயிற்றிலேஇருந்து கொண்டு மறுபடி பசிக்காமலே பண்ணப்போகிறதா என்ன?' என்று நம்மை நாமே கேட்டுக் கொண்டு கண்ட்ரோல் பண்ணிக்கொள்ளவேண்டும்.

இப்படி ஒரு நல்லறிவு உண்டாவதற்கு மறுபடியும் பகவானையேதான் வேண்டிக் கொள்கிறேன்.

— ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்



IS 4246


L P Gas Stoves

Hallmark

இல்லத்திற்கேற்ற உபகரணங்களில்
உயர்ந்த அந்தஸ்து பெற்றது!



Deluxe
2-burner stainless steel gas stove.



Popular
2-burner cast iron gas stove with stainless steel spill trays.



Super
3-burner stainless steel gas stove.

தயாரிப்பாளர்கள்;
ஓரியண்டல் அப்ளையன்ஸஸ், சென்னை 600 018.

NISCHA-DEEP ENTERPRISES

Marketed by
NISCHA DEEP ENTERPRISES
8, Victoria Crescent Egmore, Madras 600 105. Phone: 811403.

242 S N Layout
II Street, Cross Cut Road
Tatabad
COIMBATORE 641 012

2 Nanjappa Road
Shanthi Nagar
Bangalore 560 027
Phone: 22 78 48


6-1-67/19 Saifabad,
Hyderabad-500 004
Phone: 36719

29-4-17 Kothandarami
Reddy Road
Arundalpet (Eluru Road)
VIJAYAWADA 520 002

MM.174.83 TM



தியாகராஜ கீர்த்தனைகளை உடன் பாடி மகிழும் மேனாட்டு ரசிகை!
தியாகராஜரின் சங்கீத சாம்ராஜ்யத்திற்கு உறுதுணையாக நிற்கும் அரசியல்!
மூப்பனார்
சுதியில் வாசிக்கும் கை கஞ்சிராவும் வாசித்து அமர்க்களப் படுத்துகிறது!
கல்யாணச் சாப்பாடு மாதிரி இருந்தது! கையலம்பாது காவேரி ஆத்துலே!
— ஒரு சென்னை வாசி
ஆராதனை விழா காரியதரிசி
ஹரித்வார மங்கலம் பழனிவேல்!
ஆராதனை விழாவில் பாடாதது ஒன்று தான் குறை! மற்றபடி புன்முறுவலுடன் அன்பைச் செலுத்தி அமைதி காத்த போலீஸ் அதிகாரி!
சித்தே இடம் விடுங்கோடி!
ஆஹா.. ஓஹோ! ஆராதனை!



இந்தாப்பா! உள்ளே
போகத்தான் பாஸ்!
வெளியே போகவும்
பாஸ்! இந்தக் காலை
ப்ரோகிராம் காதில்
மிளகாய்ப் பொடி
தூவின மாதிரி
இருக்குப்பா!
ஆளை விடு!
மிருதங்க வித்வான்
எல்லா. வெங்கடேஸ்வர ராவ்
காவிரி ஆற்றில் டம்ளரில்
அளந்து குளிக்கிறார்!
மைக்குகளுக்கிடையே
மாண்டலின் சீனிவாசனை
இப்படித் தரிசனம்
பண்ணுகிறார்கள்
சுகமான
நாதஸ்வர இசைக்
கலைஞர்கள்
சுவாமிநாதன்,
மீனாட்சி சுந்தரம்!
"இதோ பாருடி கண் தெரியுது!"
"இங்கே குனிஞ்சு பார் மூக்கு.."
"இங்கே பார் ரெண்டு கண்ணும் தெரியுது"!
இவர்களைத் தெரிகிறதா?

மன ஊசலாட்டங்கள்

எம்.பி.சுப்ரமணியன்

"**எ**ப்படி இருக்கு டாக்டர்?" என்றான் நேசமணி, அவன் தந்தை தர்மலிங்கத்தைப் பரிசோதித்த டாக்டர் ஜான்சனிடம். அவன் தங்கை பிரமீளா டாக்டர் முகத்தையே பார்த்தாள்.

"அப்படியே தான் இருக்கிறது. இனி நிச்சயமாகத் தேற மாட்டார், ஆனால்.... ஆனால்... எப்பொழுது என்று கூற முடியாது", என்று கூறிக் கொண்டே காரில் ஏறி விட்டார்.

நேசமணியும் பிரமீளாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

தர்மலிங்கம் மத்திய அரசில் பெரிய பதவிகள் வகித்து ஓய்வு பெற்றவர். அவர் மகன் நேசமணி, அமெரிக்காவில் வாஷிங்டனில் வேலையாக இருந்தான். மகள் டெல்லியில் கணவனுடன் இருந்தாள். இருவரும் நல்ல வசதியுடன் இருந்தனர்.

தர்மலிங்கம் சென்னையில் இருந்தார். அவர் மனைவி இறந்து பல ஆண்டுகள் ஓடி விட்டன. தூரத்து உறவினரான ஓர் அம்மாள் சமையல் வேலைகளைக் கவனித்து வந்தாள். வேலையாட்கள் வேறு இருந்தனர். முனுசாமி அவரைக் கவனிக்க விட்டோடு இருந்தான்.

தர்மலிங்கத்திற்கு ஏராளமான சொத்து இருந்தது. எழுபது வயதாகி விட்ட தர்மலிங்கத்தின் வாழ்வு கிளப், பீச், வீடு இப்படித் தண்டவாளத்தில் ஓடியது. வாரத்திற்கு ஒரு முறை தம் மகனுக்கும், மகளுக்கும் கடிதம் எழுதுவார். மகள் ஆண்டுக்கு ஒருமுறை, டிசம்பரில் சென்னைக்குக் குடும்பத்துடன் வருவாள். பேரக் குழந்தைகளுடன் கிறிஸ்துமஸ் கொண்டாடுவதில் அவருக்கு மகிழ்ச்சி. மகன் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வருவான்.

பத்து நாட்களுக்கு முன் காலையில் எழுந்ததும் அவர் தலை சுற்றியது. டாக்டர் வந்து பார்த்தார்.

"இப்பொழுது உங்களுக்கு வந்துள்ள நோய் ஒருவிதப் புற்றுநோய். இரத்தத்தில் புற்று நோய் 'லூகிமியா' என்பார்கள். இதற்கு மருந்து இல்லை. முன்பே உங்களுக்கு இருதய நோயும் உண்டு. அதனால்...." என்றார் சிறிது பதற்றத்துடன்.

டாக்டர் கூறியதை நிதானமாக எடுத்துக்கொண்டு, "முடிவு சீக்கிரமாகுமானால் மகனுக்கும் மகளுக்கும் தந்தி அடித்து விடுங்கள்" என்றார் தர்மலிங்கம்.

மகள் பிரமீளா இரண்டு நாளில்வந்து விட்டாள். மகனும் ஒரு வாரத்திற்குள் வந்து விட்டான். மருமகளும் பேரப்பிள்ளைகளும் வந்தார்கள். மகளும் மகள் வயிற்றுப் பேரக் குழந்தைகளும் வந்து விட்டார்கள். வீடு நிறைந்து வழிந்தது.

நாட்கள் ஓடின. அன்றுடாக்டர் வந்ததும் தர்மலிங்கம்,

"இவர்கள் வரும் முன்பே நான் இறந்து விடுவேன் என்று நினைத்தேன். இவர்களும் பயந்தோடி வந்தார்கள். ஆனால் நடந்தது என்ன? என் முடிவு எப்போது? அது தெரிந்தால் எவ்வளவு சுலபமாகக் காரியங்களைக் கவனிக்கலாம், பிரமீளா டில்லிக்கு போக வேண்டும், மணி அமெரிக்கா போக வேண்டும், குழந்தைகள் படிப்பு கெடுகிறது. இதற்கெல்லாம் சரியான முடிவை ஏன் நான் நிர்ணயிக்கக் கூடாது? நான் ஒரே தூக்கத்தில் இருக்க ஒரு மருந்து கொடுக்கக் கூடாதா?" என்றார்.

"அப்பா!" என்று அலறிக் கொண்டே அவர் மேல் தன் முகத்தை வைத்துத் தேம்பி அழுதாள் பிரமீளா. தந்தையின் சொல் கேட்டுப் பிரமித்தான் நேசமணி.

"இப்படியெல்லாம் பேசாதீர்கள்!" என்றார் டாக்டர். "என்ன டாக்டர் நீங்க கூட பழைய போக்காகவே இருக்கிறீர்களே!" என்று முறுவலித்தார் தர்மலிங்கம். "ஏம்மா, பிரமீளா ஏன் இப்படி அழறே! கண்ணைத் துடைத்துக் கொள்!" என்று அவள் தலையை வாஞ்சையோடு வருடினார்.



அவர் கைபட்டு. அதிலுள்ள பாசத்தை உணர்ந்து மெய்சிலிர்த்தாள் பிரமீளா.

தந்தையை வாஞ்சையோடு பார்த்தாள்.

''நீ செல்லமாக 'மின்னி' என்று ஒரு நாய் வளர்த்தே ஞாபகமிருக்கா? அது மேலே ஒரு நாள் லாரி மோதி அது துடியாய்த் துடித்தது. பிழைக்காது என்று தெரியும். ஓடிவந்து என்கிட்டே என்ன சொன்னே? அப்பா! அது படற கஷ்டம் பாக்க முடியலே, வேதனையாலே துடிக்குது. உங்க துப்பாக்கியாலே சுட்டுப் போடுங்கோ என்று சொன்னே. நேசமணியும் மன்றாடினுன். என்னைச் சுட வெச்சிங்கோ. எதனுலே? அந்த நாயின் பேரிலிருந்த பாசத்தினுலே! அந்தப் பாசமும் இரக்கமும் ஏன் அம்மா என் பேரிலே தோணலே'' என்ருர் கண்களில் நீர் வடிய.

''அப்பா! அப்பா!'' என்று அவர் காலைப் பற்றிக் கதறினுள் மகள்.

''அப்படிச் சொல்லாதீர்கள் அப்பா'', என்று அவர் கையை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் மகள்.

தர்மலிங்கம் இடைரென்று வலி தாங்காமல் கத்த ஆரம்பித்தார். பேரப் பிள்ளைகள் அவர் நிலையைக் கண்டு மிரண்டு அழுதன. நேசமணியின் ஏழு வயதுப் பெண் அமெரிக்காவில் வளர்ந்தவள். அவள் இப்படி ஒரு காட்சியைக் காணுது வளர்ந்தவள். பயந்து அழுது மூர்ச்சையாய் விட்டாள்.

டாக்டர் பிற்பகல் ஒரு மணிக்கு மேல் தான் வந்தார். பரிசோதித்துப் பார்த்தார். ''இப்பொழுது மருந்து ஒன்றும் வேண்டாம்'' என்ருர்.

''என்ன டாக்டர் ஊசி போடுங்கள், வலி தாங்க முடியவில்லை'' என்ருர் தர்மலிங்கம்.

''இருதயம் பலவீனமாக இருக்கிறது. ஊசி போடுவது அபாயம்.''

''அபாயம்! எது? என்னைப் போக விட மாட்டீர்களா? ரேஸிற்குப் போயிருக்கிறீர்களா, ஓடிவரும்போது கால் உடைந்தால் குதிரையை அப்போதே சுட்டு விடுவார்கள். உயர்ந்த ஜாதிக் குதிரைகள், கால் உடைந்து.



வருந்தக் கூடாது. ஆனால் மனிதன்! அந்த இரக்கம் எனக்குக் காட்டக்கூடாதா?'' வலியிலும் அவர் முறுவலித்துக் கூறியது அங்குள்ளவர்கள் உணர்ச்சியைக் கிளறியது.

''சாரி, தர்மலிங்கம்! மனித உயிரை மாய்க்க உரிமையில்லே!''

''நாய், குதிரை வலியால் துடிக்கக் கூடாது! பாவம்! மனிதன் துடிதுடிச்சுச் சாகணும்! கருணையே இப்ப சிதைக்கிறீர்களே. அது? டாக்டர் 'யூதனேஷியா' என்பதை நீங்கள் கேட்டது கூட இல்லையா?'' என்று கத்தினார். டாக்டர் வெலவெலத்துப் போனார்.

''என் முன் நிற்காதீர்கள். என் வேதனையை நானே அனுபவிக்கிறேன். என்ன வேடிக்கை இங்கு! போங்க, போங்க'' என்று ஆத்திரத்தோடு கத்தினார்.

எல்லோரும் வெளியே வந்துவிட்டனர். வெளி வராந்தாவில் கூடினர். பிரமீளாவின் கணவர் திரவியம்தான் பேச்சைத் துவங்கினார். ''பிரமீளா, நான் சொல்வதைக் கேள். குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு நான் டெல்லிக்குப் போகிறேன். மணி உன் குழந்தைகளையும்தான். இங்கு அவர்கள் இனியும் இருப்பது சரியல்ல'' என்றார்.

அவர் கூறியது நியாயமாகத் தோன்றியது. குழந்தைகள் சில மணி நேரத்தில் புறப்பட்டு விட்டனர்.

நேசமணி பெருமூச்சு விட்டார். குழந்தைகள் அந்த வீட்டிலிருந்து போனது நிம்மதியாகத் தோன்றியது. தன் நிலை! எப்பொழுது போவது? ஒரு மாத விடுமுறையில் இருபது நாட்கள் ஓடிவிட்டன. முக்கியமான வேலையிருந்தது. ''ஓ மை காட்!'' என்று பெருமூச்சுடன் சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் தோன்றவில்லை.


''முனியா, வலி தாங்க முடியவில்லையடா. நீயாவது ஏதாவது கொடு''

''என்ன வேணும் ஐயா, சொல்லுங்கோ கொடுக்கிறேன். உங்களுக்கு இல்லாததா!''

''சாக மருந்துடா.''

கணவர்: மணி ஏழு ஆச்சு! இன்னமும் பேப்பர்க்காரன் வரலியே!

மனைவி: அப்பவே வந்து கொடுத்துட்டுப் போனான்! கொஞ்சம் இருங்க மாவு சலித்து விட்டுக் கொடுக்கறேன்!



''ஐயா, அப்படிச் சொல்லாதீங்கோ?'' என்று அழுதான்.

''எல்லோருமா சேர்ந்து சித்ரவதை பண்ணுங்கோ!'' என்றார்.

''என்னங்க காலையிலேருந்து நீங்க ஒன்னுமே சாப்பிடலையே'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் நேசமணியின் மனைவி.

டாக்டரே வந்து விட்டார். ''அப்பா, படுகிற வேதனையைப் பார்க்க முடியலே. ஏதாகிலும் செய்யுங்கள்'' என்றான் நேசமணி.

''இன்றைக்கு பிராக்னிவாலும் பெத்தடினும் கொடுக்கிறேன். கவலையையும் நீக்கித் தெம்பு உண்டு பண்ணும்'' என்று கூறிக் கொண்டே தர்மலிங்கம் இருந்த அறைக்குள் போனார். கண்களை மூடிக் கொண்டு 'அப்பா, அம்மா, கடவுளே'' என்று வேதனையால் முனகிக் கொண்டு இருந்தார். அவர் கைகளைத் தொட்டதும் கண்களைத் திறந்து. ''உங்களை எல்லாம் யமதூதர்கள் என்பார்கள். நீங்கள் எதிரியாகவல்லவா இருக்கிறீர்கள்'' என்றார்.

''மருந்து கொடுக்கிறேன். வலி இருக்காது.''

''இனி வலியேஇல்லாத மருந்து கேட்டா.. நீங்க எனக்குக் கெடு வைக்கிறீர்களே!''

மறுநாள் காலையில் நேசமணிக்கு உடனடியாக வரும்படி அமெரிக்காவிலிருந்து கேபிள் வந்தது. அதையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

''என்ன அன்று இடிந்து போய் உட்கார்ந்து விட்டே'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் பிரமீளா.

''கேபிள் வந்திருக்கு. உடனடியாக வரும்படி.''.

''என்ன பண்ணுவது என்று எனக்குக் கூடப் புரியலே. குழந்தைகளை அவர் எப்படிச் சமாளிக்கப் போகிறார்! மோகன் ரொம்ப அடம் பிடிப்பான். ரேணுவிற்குச் சாப்பிட. வேண்டுமென்றால் நான் வேண்டும்!'' எல்லோருக்கும் தர்மலிங்கம் ஒரு பிரச்னை!

டாக்டர் வந்து விட்டார். நேசமணி வேகமாக வெளியே போய்விட்டான். பிரமீளா ''தண்ணீர் கொதிக்க வைக்கிறேன்'' என்று கூறிச் சமையலறைப் பக்கம் போய் விட்டாள். முனுசாமி மட்டும் டாக்டருடன் இருந்தான்.

சிறிது நேரம் சென்ற பின் தர்மலிங்கம் இருந்த அறைக்கு வந்தான் நேசமணி. வந்து பார்த்து உடனடியாகப் போய் விடுவான். தர்மலிங்கம் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தார். அவர் அருகில் இருந்த டப்பாவில் இரண்டு மாத்திரைகள் இருந்தன. அப்படித் தனியாக மாத்திரைகளை வைக்கும் பழக்கமில்லை. டாக்டர் வைத்திருக்க மாட்டார். ஒருவேளை... நேசமணியின் மனம் அலை பாய்ந்தது. டாக்டரின் செயல்தானோ? அந்த மாத்திரைகளாகத்

தான் இருக்க வேண்டும்! அப்பாதான் அடிக்கடி கேட்பாரே! தானே கொடுப்பது தவறு என்று வைத்து விட்டாரோ? அருகில் போய்ப் பார்த்தான். ம...... தெரிந்தது. கண்பார்வை சரியில்லை. எடுத்துப் பார்க்க மனம் இடம் கொடுக்கவில்லை. டெட்ராஸ்சா (TEDRAL-SA) மாத்திரைகள் தான்! இருதய நோய் உள்ளவர்கள் சாப்பிட்டால் இருதயம் படபடவென்று அடித்து நின்றுவிடும்! அதைப்பற்றிப் படித்திருக்கிறான். அப்பாவிற்கு இருதயம் சரியில்லை. ''அப்பாவிற்குத் தூக்க மருந்து கொடுத்தாரா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் பிரமீளா. நேசமணியின் உடல் நடுங்கியது. அங்கிருந்து போய் விட்டான்.

அருகில் வந்த பிரமீளா டப்பாவில் இருந்த மாத்திரைகளைப் பார்த்தாள். அவனும் என்ன மாத்திரைகள் என்றுபார்க்க அருகில் வந்தான். ம...... என்பதுதான் இருந்தது. அவனும் TEDRAL-SA மாத்திரைகள் என்ற முடிவுக்கு வந்துவிட்டான். தர்மலிங்கம் அசைந்தார். பேசாமல் அங்கிருந்து போய் விட்டான். நேசமணி தோட்டத்தில் உட்கார்ந்திருந்தான். அவனிடம் பேசக் கூடாது என்று சமையலறைப்பக்கம் விரைந்தாள் பிரமீளா.

குளிர் காற்று வீசியது. ஆனால் நேசமணியின் உடல் வியர்த்தது.

''அய்யா. ஓடியாங்கோ!'' என்று முனுசாமி அலறினான்.

உள்ளே ஓடினான் நேசமணி. பிரமீளாவும் ஓடிவந்தாள். தர்மலிங்கம் வாயிலிருந்து நொப்பும் நுரையுமாகக் கக்கியிருந்தார். அருகில் சென்று பார்த்தான். மூச்சு நின்று விட்டது தெரிந்தது. ''அப்பா, அப்பா'', என்று கதறி அவர் மேல் விழுந்து புரண்டாள் பிரமீளா.

நேசமணியின் கண்கள் டப்பாய் பக்கம் சென்றன. மாத்திரைகள் அங்கு இல்லை.

''நாம் படும் கஷ்டத்தைப் பார்த்தே தாங்காமல் போய் விட்டார்'' என்றாள் பிரமீளா. டப்பாவில் மாத்திரைகள் இல்லாததை அவனும் பார்த்துப் பெருமூச்சு விட்டான்.

''டப்பாவிலிருந்த மாத்திரைகளை யார் அவருக்குக் கொடுத்தார்கள்? முனுசாமியா? அவரே எடுத்துக் கொண்டாரோ?'' மனம் கேட்டது. ஏதோ ஒரு விதத்தில் எல்லாம் முடிந்து விட்டது என்ற எண்ணம் ஒரு அமைதியைக் கொடுத்தது. டாக்டர் வந்தார். அவர் முகத்தில் ஒரு திருப்தி தோன்றியது. ''திடீரென்று இருதயவலி ஏற்பட்டிருக்க வேண்டும். அவர் விடுதலை பெற்றார் என்றே கூற வேண்டும். நல்லவர், என் நண்பர் என்ன செய்வது?'' என்று கூறிப் போய் விட்டார்.

காரியங்கள் முடிந்து விட்டன. இரைச்சல் ஓய்ந்து விட்டது. இனி அவரவர்கள் வேலையைக் கவனிக்க வேண்டியதுதான்.

சென்னை வீட்டைப் பற்றி ஒரு முடிவு எடுக்கும் வரை முனுசாமி அந்த வீட்டிலேயே இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர் நேசமணியும் பிரமீளாவும்.

டாக்டரைப் போய்ப் பார்த்தான் நேசமணி. அவருக்குத் தன் நன்றியைத் தெரிவித்து விட்டு அவர் பில் போட்ட தொகை மேல் நூறு ரூபாய் கொடுத்தான். ''ஜாஸ்தி கொடுத்து விட்டீர்கள்'', என்று டாக்டர் சொன்னதற்கு, ''நீங்கள் செய்த உதவிக்கு அது சிறிய தொகைதான்'' என்றான்.

டாக்டர் பணத்தை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டு, நோயாளிகளைப் பார்க்க 'வார்டினுள்' போய் விட்டார்.

நேசமணியும், பிரமீளாவும், சுற்றமும் சென்னையை விட்டுப் போய் விட்டனர். வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான் முனுசாமி. தர்மலிங்கம் படுத்திருந்த அறையைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தான். கட்டிலை ஓரமாகத் தள்ளியபொழுது ஒரு மாத்திரை கிடந்தது. அடுத்து இன்னொரு மாத்திரை. கையில் எடுத்தான். ''அட! அய்யா போயிட்டன்னிக்கி, டாக்டரிடம் இருமல் போக்க மாத்திரை கேட்டேன். ரெண்டு கொடுத்தாரு. டப்பா மேலே வெச்சேன். பின்னாலே தான் ஒரே களேபரமாப் போயிடிச்சு, மறந்து போச்சு'' என்று முணுமுணுத்துக் கொண்டே அந்த TABROL-DS (டாப்ரால்) மாத்திரைகளை ஜன்னல் வழியே எறிந்தான்.

அந்த மாத்திரைகள் எத்தனை மன விகாரங்களை எழுப்பின என்பதை அவன் எப்படி அறிவான்!

பொங்கல் கவியரங்கம்

தாலாட்டு — **(திருப்பம்)**

-ஜெயமன்மதன்

'ஆரிராரோ ஆரிராரோ யாரங்கே ஆரிராரோ
ஆரிராரோ ஆரிராரோ கேளுங்களேன் ஆரிராரோ
'தாலாட்டு' என்று ஒரு தலைப்பைத் தந்தார்கள்
தமிழ்ப் படத்தைப் பாடென்று நயமின்றி சொன்னார்கள்.
விளையாட்டுப் பையன் என்ன செய்வான், வாத்தியாரிடம் 'வாலாட்டு'
விவேகப் புருஷனைப் பாருங்கள், மனைவியிடம் 'தலையாட்டு'.
(அரங்கத்தில் கைதட்டல்.)
தாயென்று ஆனவள் மட்டுமே தந்திடுவாள் நல் 'தாலாட்டு'
(அரங்கத்தில் ஆஹா...ஆஹாக்கள்)
தமிழ்ப்படத்தின் தூயதொரு தாலாட்டென, (மறுபடி அழுத்தி)
தமிழ்ப்படத்தின் தூயதொரு தாலாட்டென
பொங்கலுக்கு வந்ததொரு புதுத் 'திருப்பம்'!
கதையினைச் சொல்லவோ, காட்சியினை விள்ளவோ
கண், உறக்கம் தேடும் வரை கவிதையினை அழைக்கவோ....
நேர்மையை சுவாசித்து, நல்லதையே யோசித்து
நெடுக நிமிர்ந்திருக்கும் ஒரு காவல் அதிகாரி.
நவின்றிடுவீர் அவர் பெயரை எனில்
நறுக்கென்று சிவாஜி என்பீர் — அல்ல; படத்தில் ராஜசேகரன்.
அவரின் பரந்த முதுகுக்குப் பின்னால்
பாய்விரித்த ஒரு சோகக்கதை.
பழகிய காதலி பலவந்தமாய் 'பழைய' காதலியாகிப் போனாள்.
பின்னாளில் சந்தித்து பிரியமுடன் பேசப் போனால்
கண்ணீரால் கால் கழுவி கதறி நின்றாள் தமிழ்ப்பாவை.
கட்டிய புருஷன் 'புட்டி'ப் புருஷனும் எட்டி உதைக்க
தவிப்பாய்த் தடுத்தார் ராஜசேகர்.
உருண்டவன் கைக்கத்தி மார்பில் தைத்து உடனே சுயமாய் உயிரை விட்டான்.
மருண்டாள் மானினைக் 'காதலி'; 'மறைப்போம் இதை' என்றாள்.
நீதியின் காவலர் நிழலில் ஒளிந்தார்.
துரத்தும் விலங்கைத் துடியாய்த் தவிர்த்தார்.
கடைசிக்காட்சியில் நாட்டுக்காக நல்லுயிர் ஈந்தார். —
காவியமானார் என்பது கதையாம்.

சிங்காரத்திற்கு சிலுக்கு, ஜிலுஜிலுப்புக்கு அம்பிகா,
சீறுவதற்கு சிவாஜி, சின்னச் சிங்கம் பிரபு,
கண்ணில் கங்கையுடன் காவிய நாயகி சுஜாதா,



எள்ளல் வில்லனாய் எஞ்சிய ஜெய்சங்கர்.
விஸ்வநாதனின் இசை விட்டமின் கேட்கிறது.
பிரசாத்தின் கேமிரா புண்ணியம் சேர்க்கிறது.
'ஜூடோ'வின் சண்டைகள் சூடாய் உள்ளன.
இதமும், நயமும், சொருகும் இதயத்தெழும் தாலாட்டாய் இப்படத்தில் உண்டு.
வாய் போன படிக்கு தாய் பாடுகிற மாதிரி
வலியத் திணிக்கப்பட்ட வழுவுகின்ற காட்சிகளும் உண்டு.
ஆராரோ ஆரிராரோ யாரங்கே ஆரிராரோ....
கூட்டத்திலிருந்து: (உக்காருப்பா, அடுத்த கவிஞருக்கு டயமாச்சி')



முரசப்பா — **மதுரை சூரன்**

பாடு பாடு 'முரசப்பா' என்ற குரல் கேட்டது.
தேடித் தேடிப் போனதில் 'மதுரை சூரன்' கிடைத்தது.
வீரன் சூரன் என்றதினால் எதிர்பார்ப்பு இருந்தது — ஆனால்
போர்க்களம்தான்; வெறும் Bore களம் தான் (கைதட்டல்.)
போர்முரசு கொட்டியதும் போனபேர் அனைவருமே
கழுத்தருகே அறுபட்டுக் குற்றுயிராய் குலையுயிராய்
கண்ணில் கண்ட வழியிலெல்லாம் புறமுதுகு இடுகிறார்கள்.
வீர சூர விஜய்காந்த் — வேஸ்டான விஜய்காந்த்.
கரடு முரடு ராதாரவி — களேபர தந்தைவழி.
தாவித் தாவிச் செல்லும் காட்சி, தத்தித் தத்திச் செல்லும் கதை (?)
அலுங்கல் குலுங்கல் அனுராதா — ஆடையிலா அனுராதா.
டுமுக்கு டுமுக்கு சங்கர் கணேஷ் — டூப்ளிகேட் தேவர் ஃபிலிம்ஸ்.
எச்ச சொச்சம் சொல்லணுமா? இத்தனைதான் போதாதா?
அன்புத் தமிழ் மக்களே, அடியேனின் கண்ணோட்டம்:
முரசப்பா பாடவேண்டி நான்போன இடந்தனிலே
முகம் நிறைய கரிபூசி அனுராதாவின் உரசப்பா
பாடென்கிறார் டைரக்டர்; அப்பப்பா, ஆளை விடு!
(கைத்தட்டலோ தட்டல்.)

கவியரங்கம் அதன் பாட்டுக்குத் தொடரட்டும்: உங்கள் செவியரங்கத்தைக் காட்டுங்கள். பொங்கல் படங்கள் பற்றி ரகவாரியாய்க் காதோடு சொல்கிறோம்:

தியேட்டர் பக்கமே தலை வைக்காதீர்கள்: மதுரை சூரன், மன்மத ராஜாக்கள்

டி.வி.யில் வரும்போது பார்த்துக் கொள்ளலாம்: மெட்ராஸ் வாத்தியார், தங்கமடி தங்கம்.

ஓசியில் வந்தால் போய்ப் பார்க்கலாம்: நான் மகான் அல்ல, பிரியமுடன் பிரபு.

போனால் போகிறது, போய்ப் பாருங்கள்: குவா குவா வாத்துக்கள், திருப்பம்.

நிச்சயம் பார்த்தே ஆக வேண்டியது: ஸாரி, இந்தப் பொங்கலுக்கு எதுவுமில்லை.

—ஜெ. ம.

Filmotsav 84

பம்பாயில் படவிழா

அன்புள்ள வாசகருக்கு,

அவனவன் மூட்டையைக் கட்டிக் கொண்டு, ஊருக்குத் திரும்பியாச்சு, இன்னும் என்னய்யா ஃபிலிமோத்சவ்?' என்று காரமாய் உறுமுகிறீர்கள்... இல்லே? இதுதான் இறுதியான கடைசித் தவணை.

முதலில் ஹங்கேரி பட்சி கழுகு The Vulture

சட்டத்தை நம்புவதை விட, சொந்த சவுக்கை எடுத்துக் கொள்வதேமேல் என்ற நம்மூர் கதாநாயகன் மாதிரி ஒரு நாயகன், சைமன். விவாகரத்து செய்து விட்டு, அமைதியாய் டாக்ஸி ஓட்டிக் கொண்டிருப்பவன் வன்முறை வழிப்பறியில் இருப்பதை இழந்ததும், கண் சிவந்து 'பழிக்குப் பழி' என்று வில்லனாகிறான். வழிப்பறி செய்தவரில் ஒருத்தரின் மகள் சிசிலியாவைக் கடத்திச் சென்று பணயமாய் நிறையப் பணம் கேட்கிறான். குறுக்கிடுகிற போலீஸுக்கு டிமிக்கி கொடுக்கிறான். கடைசி கடைசியாய், குற்றவாளியாய்ப் போலீஸிடம் சிக்குவதை விட, தற்கொலை செய்து கொள்வதே மேல் என்ற முடிவுக்கு வருகிறான்.

'ரஜினிகாந்த், விஜயகாந்த்' தயாரிப்பாளர்கள் கவனித்துக் கொள்ளட்டும்.

நெக்ஸ்ட்?

அமெரிக்காவிலிருந்து அமரிக்கையாய் ஒரு படம்.

ஃப்ரான்ஸஸ் (Frances)

ஒரு நடிகை நாடகமாகிற கதை. மேடையில் புகழ் கிடைக்கிறது. ரஷ்யா செல்ல வாய்ப்பு வருகிறது. திரும்பி வந்ததும் கம்யூனிஸ்ட் என்ற முத்திரை— வேறு. நாடக சிற்பி ஓடட்ஸ் அவளுக்குக் கை கொடுக்கிறார். தம் முக்கிய நாடகத்தில் சிறப்பான பாத்திரம் தருகிறார். கௌரவம் சேர்கிறது. ஓடட்ஸ் தான் இனி தன் வாழ்வு என அவள் ஐக்கியமாக முற்படும் போது அவரால் கைவிடப்படுகிறாள். ஹாலிவுட்டிலிருந்து அழைப்பு வர, விரக்தியும் வேதனையுமாய்ப் போகிறாள். குடிக்கிறாள், சட்டங்களை மீறுகிறாள். ஹாலிவுட்டிலிருந்து திருப்பப்படுகிறாள். சிதறிய மனநிலையைச் சரிபண்ண வேண்டி, மனநிலை காப்பகத்தில் சேர்க்கப்படுகிறாள். தாயின் அதிகாரமும், காப்பகத்தின் விதிமுறைகளும் அவளைக் கட்டுப்படுத்த முயல, தப்பித்து விடுகிறாள். மறுபடியும் தனக்குப் புகலிடம் அளிக்க நாடக மேடையை நாடிப் போகிறாள். நாடகத்தாயின் ஆதரவு நிழல் அவளை அன்போடு அணைத்துக் கொள்கிறது.

பகட்டும், பளபளப்புமான இந்த நடிப்புத் தொழிலுக்குப் பின்னணியில் எந்த அளவிலும் சோகம் ஊறிக் கிடக்கிறது என்ற 'அருமையான தத்துவம்' தான் படிப்பினை.

கிரேம் க்ளிஃபோர்டு டைரக்டர்

○ ஃப்ரான்ஸஸ்



''**யா**ருய்யா அது — க்யூவைப் பெயர்த்துக் கொண்டு, முண்டியடித்துக் கொண்டு தலையை நீட்டுவது?''

''நம் நாடு ஸார்...''

''என்ன?''

''கேரளம் ஸார்..... பரதன் படம்...''

''மலையாளமா... ஓ... ஓ... பேரு என்ன 'இன்ப வெறி' யா, 'ராத்திரிகளுக்கா'?''

மர்மரம்

''பேர விடுய்யா. கதை எப்படி. ஜோர்தானே?''

''நானுன்னு ஒரு ஸ்கூல் அதிகாரி, பிராம்மணர்.



O கழுகு

அவரோட அம்மாவோ, சாஸ்திரம், சம்பிரதாயம், வைதீகம் இதுக்காக உயிரையே கொடுப்பவங்க... ஸ்கூல்ல மியூஸிக் டீச்சர். ஒரு பொண்ணு. பேரு நிர்மலா... சமூகத்தில கீழ் வகுப்பைச் சேர்ந்த பொண்ணு....''

''போதும், போதும்... நானுவுக்கும் நிர்மலாவுக்கும் லவ்வு. சமூகத்தில் எதிர்ப்புளட்டைட்ரா தானே?'

''இன்னும் கொஞ்சம் சிக்கலான கதை. நானு சாருக்கு இன்னும் கல்யாணமாகலே. ஆனா அந்தப் பொண்ணுக்கு ஏற்கெனவே ஆயிடிச்சி... அவ புருஷன் ஒரு தீவிரவாதி... காணாமல் போய் ரொம்ப நாளாச்சு... உயிரோட இருக்கானுன்னு தெரியாது. அவளுக்கு ஒரு கொழந்தை வேற இருக்கு... விஷயம் தெரிஞ்சப்புறம் கூட நானு அவளைக் கல்யாணம் பண்ணிக்கத் தயார்ங்கறுரு... மொதல்ல சரின்னு சொல்ற அம்மா அப்புறம் வீட்டை விட்டே ஓடம்பிடறுங்க...''

''அடடே!''

''இரு... போதாததுக்கு பழைய புருஷன். வேற வந்து சேர்ந்திடறுன்...''

''அப்புறம்...அப்புறம்...?''

''பூராத்தையும் சொல்லிட்டா அப்புறம் என்ன



O மர்மரம்

இன்ட்டரஸ்ட்டு? உங்களுக்கு வந்தாப் பாரு...''

மீண்டும் அமெரிக்கா. நகைச்சுவையைத் தூண்டும் உட்டி ஆலன் படம்: (Woody Allen) ஜீலிக் (Zelig)

ஐம்பதாண்டுகளுக்கு முன் போவோமா? 1920–1930 கால கட்டம். லியோனுர்ட் ஜீலிக்கின் புகழ் பரவியிருந்த நேரம். மற்றவர் தன்னே நேசிக்க வேண்டுமென்கிற பலவீன மனநிலையால், சூழ்ந்திருப்பவர்களுக்

O ஜீலிக்



கேற்றவாறு தனது உடல், உடைகளை மட்டுமல்லாது முகத்தோற்றத்தையே மாற்றிக் கொள்கிற அந்த அதிசய மனிதராய் உட்டி ஆலன். அவரது சாதுத்தன்மையும், நகைச்சுவை உணர்வும் எல்லோரையும் கவர்ந்திழுக்கிறது. அவரது மனநிலையைக் குணப்படுத்துகிற டாக்டரும் பெரிதும் நேசிக்கிறுர்.

திரைக்கதை என்று எதுவும் இல்லை. சில சம்பவங்கள், சில பேட்டிகள். நிறைய நகைச்சுவை என்று கலந்து எழுதி டைரக்ட் செய்து நடித்தும் இருப்பது சகல கலா உட்டி ஆலன்.

மூன்று வாரங்களும் தொடர்ந்து படித்தவர்க்கும், படிக்காதவர்க்கும், ரசித்தவர்க்கும், ரசிக்காதவர்க்கும் மொத்தமாய்ச் சேர்த்து.

வந்தனங்களுடன்,
'நாங்கள்'

பி. கு.: அதென்ன 'நாங்கள்', என்று மண்டையைச் சொறிபவர்களுக்கு ஒரு சின்ன விளக்கம்:
(இந்த கட்டுரைகளுக்கு) அரிசியும், பருப்பும் கொடுத்தவர்: **த.மு.ரா.**
சமைத்துப் பரிமாறியவர்கள்: **ஜெயமன்மதன்**

பேச்சு நாற்பது வகை

1 வெயிலில் நடந்து போய்க் கொண்டிருந்த அவர் அந்த ஊரில் அந்தத் தெரு வந்தவுடன் தம் கால்களிலிருந்து செருப்புகள் இரண்டையும் கழற்றி, கையிலேந்தியபடி நடந்து, தெரு முடிந்ததும் மீண்டும் கால்களில் போட்டுக் கொண்டு போவாராம்! இது நிஜம். இதற்குக் காரணம் ஜாதிக் கட்டுப்பாடு இல்லை. குருபக்தி. அப்படி நடந்தவர் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத அய்யர். அவர் செருப்பணியாது சென்றது அவரது குரு மீனாட்சி சுந்தரம்பிள்ளை முன்பு வாழ்ந்த தெருவில் நடக்கும்போது. தகவல் சொன்னவர் கி. வா. ஜ.

2 பெர்னாட்ஷாவின் நாடகங்களை விட அதற்கான முன்னுரைகள் சிறப்பாய் இருக்கும். அது போலத் தான் இன்றைய விழாவிலும். என் சிறப்புரையை விட, தொடக்கவுரையே மிகப் பெரிதாய், சுவையாய் அமைந்து விட்டது. எனவே, நான் என் சிறப்புரையை நன்றியுரைபோல் சுருக்கிக் கொள்கிறேன் என்று அரை மணி நேரம் பேசினார் அமைச்சர் காளிமுத்து. தொடக்க உரையாற்றியவர் நெடுஞ்செழியன் (சுமார் ஒன்னேகால் மணி நேரம்).

3 அறிவியக்கம் நூறு என்ற நூல் வெளியீட்டு விழாவில், தமிழ் எழுத்து புரட்சி என்று சொல்லி, காலய் (காலை) மாலய் (மாலை), சாலய் (சாலை) சுவய் (சுவை) என்ற ரீதியில் எழுத வேண்டுமென வலியுறுத்தினார்கள். விழா நடந்த இடம் மயிலய் (ஸாரி! எனக்கும் வியாதி தொத்திக் கொண்டு விட்டது.)

✖ 40 வகையாம்....





✖ திரும்பித்தந்தார்

4 நெ.து.சு.வின் 'நினைவு அலைகள்' (வெளியீடு: வானதி பதிப்பகம்) வெளியீட்டு விழா. நூல் பெரிது. விலை ரூ.70. 'நூல் ரூ. 60க்கு கிடைக்கும் விழா மண்டபத்தில்' என்றார் வானதி திருநாவுக்கரசு. சிலபிரதிகள் விற்பனையாயின. நீதிபதி யொருவர் ரூ. 50-க்குத் தரக் கூடாதா என்றதும், திருநாவுக்கரசு 'சரி'யென்றார். விசேஷம் இது இல்லை! ஏற்கெனவே ரூ. 60 கொடுத்து வாங்கினவர்களுக்கு ரூ. 10 திருப்பித் தரப்பட்டதுதான்.

5 இனிமையாய்ச் சொன்னால் மொழிதல்; அழகாய்ச் சொன்னால் பகர்தல்; சபித்துச் சொன்னால் இயம்புதல்; இதுபோலவே விளம்புதல்; உளறுதல், பிதற்றுதல், கதைத்தல், கூறுதல் என்று 40 வகையாய் சொல்லலாம் 'பேசுதல்' என்பதை. 'விரைவில் வெளிவரவிருக்கும் வாரியாரின் நூல் ஒன்றிலிருந்து.

6 லயோலா கல்லூரி தமிழ்த் துறையில், ஒரு கண்காட்சி. இதுவரை மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்ட நூல்கள், தமிழ்த் துறைப் பேராசிரியர்கள் எழுதிய புத்தகங்கள், இலக்கிய பட்ட வகுப்பு மாணவர்கள் சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்று பல இடம் பெற்றிருந்தன. சில ஆராய்ச்சிக் கட்டுரை பிரதிகளில் மாணவர் கையொப்பம் என்ற இடத்தில் 'இடதுகை பெருவிரல் ரேகை' யைப் பார்த்ததும் சின்ன கொலம்பஸுக்குப் பெரிய ஆச்சரியம். விசாரித்ததில் தெரிய வந்த காரணம்: அவர்கள் பார்வையற்ற மாணவர்கள். அவர்கள் கையெழுத்துப் போடுவதில்லையாம்.


—சின்னகொலம்பஸ்

✖ குருவின் பக்தி



✖ தொடக்கவுரை




பெண்களின் பெரு
விருப்பம் பெற்றது...
ஸ்ரீ
குங்கும் டீலக்ஸ்
பொட்டு
SHREE
SHREE
ஸ்ரீ காஸ்மெடிக்ஸ் பம்பாய்-400 059.



தலைவலி,
உடல்வலி,
ஜலதோஷம்
மறைந்திடும்
இங்கே
AMRUTANJAN
PAIN BALM
AMRUTANJAN LTD.
Luz Church Road
90 ஆண்டுகளாக நம்பகமானது.
அமிர்தாஞ்சன்
துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது.
தீய பின்விளைவுகள் இல்லாதது.
OBM 6321 R TM

இறக்க முடியாத கொடிகள்

வ. தேனப்பன்

மோகன்தாஸ், மிகவும் வித்தியாசமான ஒரு மனிதன் என்பதை அவனுடைய ஒவ்வொரு பேச்சும் ஒவ்வொரு செயலும் நிரூபிக்கும். அவனுடைய உள்ளத்தில் நேர்மையின் ஆணிவேர் நிறையவே சிறுசிறு வேர்களை வளர விட்டிருந்தது. நீதி என்றும், ஒழுங்கு என்றும் அவன் சொற்களில் பல விழுதுகள் வளர, அந்த ஆணிவேர்தான் காரணம் என்பது அவனுடன் நெடுங்காலமாய் நண்பனாய் இருக்கும் எனக்கு நன்ருகத் தெரியும்.

இன்று அவன் வீட்டில் நடந்த சம்பவத்தைக் கேட்டால் நீங்கள் கிளுகிளுவென்று சிரிப்பீர்கள். நன்ருகச் சிரியுங்கள். கூடவே கொஞ்சம் சிந்தியுங்கள்—அவன் செய்தது தவரு என்று.

மது. மாது வகையருவோடு சிகரெட், எண்ணெய்ப் பலகாரங்களையும் சேர்க்க வேண்டும் என்பான் மோகன்தாஸ்.

உலகத்திலேயே கெடுதல் இல்லாத ஒரே ஒரு டிபன் — இட்லிதான் என்பது அவன் கண்டுபிடிப்பு. தினசரி இட்லிதான்.

இன்று அவன் இட்லி சாப்பிடுகிறபோது அவன் மனைவி சும்மா இருந்திருக்கலாம். விதி வலியது அல்லவா? வாயைத் திறக்க வைத்தது. பேச வைத்தது.

''என்னங்க! உங்களுக்குச் சேதி தெரியுமா? நேத்திக்குக் காலையில நான் டிபன் சாப்பிட உட்கார்ந்த போது இட்லி வழக்கத்துக்கு மாரு ரொம்பக் குறைச்சலாக இருந்தது!''

''நான் கணக்கில்லாம அதிகமா சாப்பிட்டுட்டேனு? இதுக்குத்தான் சொல்றது. சாப்பிடுறபோது பேசாதேன்னு! பேச்சு ஞாபகத்திலே ஓவரா சாப்பிட்டுட்டேனு? ஐயையோ, அப்புறம் நீயும் வேலைக்காரப் பையனும் உபவாசம் இருந்துட்டீங்களா?''

''நீங்களாவது... ஓவரா சாப்பிடுறதாவது? ஆண்டவன் உங்களுக்கு நாலு இட்லி அளவுக்குத் தானே இரைப்பை கொடுத்திருக்கான்! எலாஸ்டிக்கா அது? என்னைக்கும் விரிஞ்சு கொடுக்காதே! நீங்க அளவாத்தான் சாப்பிட்டீங்க!''

''அப்புறம் எப்படிக் குறையும்? இட்லி மா பொங்கலையோ?''

''அதெல்லாம் பொங்கித்தான் இருந்துச்சு. ஆறு முந்தாநாள் மாவு கரைக்கிறபோதே நான் கவனிச்சேன். மாவு குறைச்சலா இருந்துச்சு. அதுனல நான் சந்தேகப்பட்டது ரொம்பச் 'சரியாப் போச்சு!''

''என்னன்னு?''

''நம்ம வேலைக்காரப் பையன் கோபால் தான் மாவாட்டுறதுக்கு முன்னேயே அரிசியை அள்ளித் தின்னுருப்பான்னு சந்தேகப்பட்டேன். இட்லி கொறைஞ்சிருக்கறதைப் பார்த்ததும் என் சந்தேகம் வலுத்துப் போச்சு. கூப்பிட்டுக் கேட்டேன்.



முதல்ல இல்லேன்னான். அப்புறம் நாலு அடி போட்டதும்தான் உண்மையை ஒத்துக்கிட்டான். அதுனால அவனுக்கு ஒருவேளை சாப்பாட்டைக் 'கட்' பண்ணிட்டேன். நீங்க சொல்லிங்களே — எந்தத் தவறுக்கும் தண்டனை கொடுக்காம விடக் கூடாதுன்னு! — அதனாலே அவன் பண்ணின தப்புக்குச் சரியான தண்டனை கொடுத்துட்டேன்!'' என்றாள்.

மோகன்தாஸின் முகத்தில் கார்மேகம் சூழ்ந்தது. கண்களில் நீதியின் 'மின்னல் மின்னியது.

கொழுப்பும் கொலஸ்ட்ராலும்!

உனக்கு
''கொழுப்பு அதிகம்''
என்றால்
கோபப்படும்
என் மனைவி
''கொலஸ்ட்ரால்''
அதிகம்
என்றால்
''பெருமிதப்படுகிறாள்''
பணக்கார
வியாதியென்று!

—ஜி. ஷைலாராணி



''தண்டனை சரியான தண்டனைதான். ஆனால் அதை அவனுக்குக் கொடுக்கக் கூடாது!''

''அப்புறம்?''

''உனக்குத்தான் கொடுத்திருக்கணும்!''

''ஏங்க? அவன் அரிசியை அள்ளித் தின்னதுக்கு நான் எதுக்காகத் தண்டனை அனுபவிக்கணும்?''

''இன்னிக்கி மத்தியானம் நீ சாப்பிடக் கூடாது. நான் சொன்னது சொன்னதுதான். ஏன் எதுக்குன்னு யோசிச்சுப்பாரு. உனக்கே காரணம் தெரியும்!'' என்றபடி எழுந்து போய் விட்டான் மோகன்தாஸ்.

மாலையில் வீட்டுக்கு வந்ததும்

''இன்னிக்கி முருங்கைக்காய் குழம்பிலே உப்புக் குறைச்சலா இருந்ததே. ஏன்? டேஸ்ட் பார்க்காம டிபன் கேரியர்ல ஊத்திக் கொடுத்திட்டியோ?'' என்று கேட்டான்.

''கரெக்டாத்தானே உப்பு போட்டிருந்தேன். ருசி பார்க்கிறதென்ன— சோத்தில ஊத்திக்கிட்டுச் சாப்பிட்டே பார்த்தேனே! அது நல்லா இருந்ததுனால தானே ரெண்டு தடவை போட்டுக்கிட்டேன்!'' என்றாள்.

''நீ மத்தியானம் சாப்பிட்டியா இல்லையான்னு தெரிஞ்சுக்கறதுக்காகத்தான் அப்படிக் கேட்டேன். நீ சாப்பிடக் கூடாதுன்னு நான் சொல்லிட்டுப் போயிருந்தேன்ல? அப்புறம் ஏன் நீ சாப்பிட்டே?''

''கோபால் பண்ணின தப்புக்கு நான் எதுக்காகத் தண்டனை அனுபவிக்கணும்?''

''அப்ப... இன்னிக்கி ராத்திரிக்கு எனக்கு டிபன் வேண்டாம். நான் பட்டினி கிடக்க வேண்டியதுதான் முறை!''

''என்னங்க இது! உங்க போக்கை என்னால புரிஞ்சுக்கவே முடியலையே! கோபால் பண்ணின தப்புக்கு நாம் எதுக்காகத் தண்டனையை அனுபவிக்கணும்?''

''அரிசியை அள்ளித் தின்னவன் கோபால் தான். ஒத்துக்குறேன். ஆனால் அந்தத் தப்பை அவன் பண்ணத் தூண்டினது யாரு?''

''யாரு?''

''நீதான்!''

''நானு?''

''ஆமா. நீ அவனுக்கு வயிறு நிறையச் சோறு போட்டிருந்தா அவன் அரிசியை எடுத்துத் திம்பானா? அவனைப் பட்டினி போட்ட தப்புக்காகத்தான் உன்னைப் பட்டினி கிடக்கச் சொன்னேன்!''

''சரி, நான் பட்டினி கிடக்காதது என் தப்பு. அதுக்காக நீங்க ஏன் இப்ப பட்டினி கிடக்கீங்க?''

''நல்லா யோசிச்சுப் பாரு. நான் சொன்னபடி நீ செஞ்சியா? செய்யலேன்னு என்ன அர்த்தம்? என் சொல்லை நீ மதிக்கலேன்னு அர்த்தம். என்னை நீ மதிக்கிற அளவுக்கு என்னால உன்னை நிர்வாகம் பண்ண முடியலேன்னு அர்த்தம். அதுக்குத் தண்டனைதான் இது!''

''இனி நீங்க சொல்றபடி கேக்குறேன். தயவுசெஞ்சு சாப்பிட வாங்க!'' என்று கசிந்த கண்களோடு அழைத்தாள்.

''நான் சொன்ன சொல்லை, நானே கட்டிக் காப்பாத்தலேன்னா... வேறே யார் காப்பாத்துவா? குடும்பம் சீர்திருந்துறதுக்காக ஒருவேளை பட்டினி கிடக்கிறதுனால எந்தத் தப்பும் வந்திடாது. எனக்கு.... சாப்பாட்டை விட நேர்மைதான் முக்கியம்!'' என்று உறுதியுடன் சொன்னான் மோகன்தாஸ்.



வாரம் ஒரு புத்தகம்



டாக்டர் ரெக்ஸ்

நிமிர்ந்து இரு நீடித்து வாழு!

வருமுன் காத்தல் என்கிற அறிவுரை எல்லா நோய்களுக்கும் பொருத்தம் உடையதாயினும், நுரையீரல் நோய்களுக்கு மிக மிகப் பொருத்தமானது. சாதாரண சுகாதார விதிகளைக் கடைப்பிடிப்பதாலேயே பெரும்பாலான நுரையீரல் நோய்களைத் தவிர்க்க முடியும்.

மனிதன் உட்காரும் போதோ, நிற்கும்போதோ, எழுந்து நடக்கும் போதோ நிமிர்ந்தே இருக்க வேண்டும். நிமிர்ந்த நிலையிலேயே நுரையீரல்கள் நன்கு விரிவடைவதற்குரிய வாய்ப்பு கிடைக்கின்றது. நுரையீரல் விரிந்தால் தான் போதுமான அளவு காற்று உடலுக்குக் கிடைக்கின்றது.

சுவாசம் விடும் போது நிமிர்ந்து இருப்பதோடு ஒவ்வொருநாளும் பலமுறை பல ஆழ்ந்த மூச்சுக்களை எடுத்து வெளியிடும் வழக்கத்தையும் கைவந்துக் கொள்ள வேண்டும். இதனை அறிந்தே நம் முன்னோர் பிராணயாமம் என்னும் யோகாசனத்தை அன்றாடம் செய்து வந்தனர். காற்றோட்டமான இடத்தில், வசதியாக நன்கு உட்கார்ந்துகொண்டு, மூக்கில் ஒரு நாசித் துவாரத்தை ஒரு கையால் அடைத்துக் கொண்டு, மறு நாசித் துவாரத்தின் வழியாக மூச்சை உள்ளே ஆழமாக எடுத்துச் சில விநாடிகள்



மூச்சை வெளியே விடாமல் அடக்கி நிறுத்திவைத்து, அதன் பின்னர் அடைத்திருந்த நாசித் துவாரத்தை விடுவித்து அதன் வழியாக உள்ளே எடுத்த மூச்சினை வெளியே விட வேண்டும். இப்படி ஆரம்பத்தில் ஐந்து தடவையாக ஆரம்பித்துப் போகப் போக 10, 20 என அதிகரிக்கலாம். இதனால் சுவாசம் சீராக நடைபெறுவதுடன், இரத்தசுத்தி பலப்படுவதுடன், மனம் ஒரு கட்டுப்பாட்டு நிலையை அடையவும் பயன்படுகிறது.

நுரையீரலின் பரம வைரியாகத் தூசுகளைக் குறிப்பிடலாம். தூசு வெறும் மண்ணினால் மட்டும் ஆனது என்று நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை. இலட்சோப லட்சம் நோய்க் கிருமிகளும் இருக்கின்றன. இந்தத் தூசை நாம் சுவாசிக்கும் போது இந்தக் கிருமிகள் உட்சென்று நுரையீரலில் தங்கி விடுகின்றன. தூசுகளால் ஏற்படும் தீமைகளைச் சரிவர உணர்ந்து நமது வீடு, சுற்றுச் சார்புகளைத் தூசுகள் இல்லாது பாதுகாப்பதில் போதிய கவனம் செலுத்த வேண்டும். தொழிற்சாலைகளில் தூசுகளை முழுவதும் விலக்க முடியாதென்றாலும், தூசுகளைச் சுவாசிப்பதைத் தடுக்க முகமூடி உறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

நுரையீரல்களுக்குப் பெரும் தீங்கினை விளைவிக்கும் இரண்டு தீய பழக்கங்கள் புகைத்தலும், மது அருந்துதலுமாகும். ஒரு குடியன் மது அருந்தி, சில மணித்துளிகளிலேயே அவன் மூச்சிலே மதுவின் நாற்றத்தை உணரலாம். மதுவை அருந்திய பின், இரத்தத்தோடு கலந்த மது, நுரையீரல்களுக்கு வந்ததும் அவை நச்சுப் பொருளாகிய மதுவை மிகமிகத் துரிதமாக அப்புறப்படுத்த முயல்கின்றன. இதுதான் குடியனின் மூச்சு நாறுவதற்குக் காரணம். மது அருந்துபவர்களுக்குச் சளிக் காய்ச்சலும், க்ஷய ரோகமும் எளிதாகத் தொற்றுகின்றன என்பது மருத்துவர் கண்ட முடிவு. மேலும் மது அருந்துபவர்களுக்கு ஏதேனும் நோய் தொற்றினால் அவ்வளவு எளிதில் குணமடைவதில்லை.



புகைக்கின்ற பழக்கம் உடையவர்கள் மெழுகுவர்த்தியின் இரண்டுமுனைகளையும் ஒரே நேரத்தில் எரிப்பது போலத் தம் வாழ்நாளைக் குறைத்துக்கொள்கிறார்கள். சிகரெட் புகைப்ப

தால், அந்தச் சிகரெட்டிலுள்ள காகிதச் சுருள் எரிந்து, அதிலுள்ள கரிப் பொருள் நுரையீரலினுள் சென்று, நுரையீரல்சுவாசக் குழாய் அழற்சியைக் குறைந்த கால கட்டத்திலேயே ஏற்படுத்தி விடுகின்றது. நாளாவட்டத்தில் இந்தத் தீய பழக்கம் நுரையீரல் புற்று நோய்க்கு அடிக்கல் நாட்டுகின்றது.

சிகரெட் புகைப்பவர்கள் படிப்படியாகப்புகைப்பதைக் குறைத்தால் மீண்டும் அந்தப் பழக்கம் தலைதூக்குவதற்குரிய வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகக்கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. தினசரி 5 சிகரெட் புகைப்பவர்களாக இருந்தாலும், 50 சிகரெட் புகைப்பவர்களாக இருந்தாலும்அந்தப் பழக்கத்தைத் திடீரென நிறுத்துவதுதான் சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு இன்று ஆராய்ச்சியாளர்கள் வந்துள்ளனர்.

புகைக்கும் பழக்கத்தைச் சமுதாயத்திலிருந்து ஓட ஓட விரட்டி அடிக்கவேண்டுவது இன்றியமையாதது. அரசும் இந்தத் துறையில் உரிய கடமை ஆற்றவேண்டும். மேலெழுந்தவாரியாக அல்லாமல் மனமார, தூய எண்ணத்தோடு அரசு இந்தக் கடமையைச் செயல்படுத்த வேண்டும்.

நல்ல காற்றோடு, சூரிய வெளிச்சமும் வீட்டின் எல்லாப் பகுதிகளிலும்விழுமாறு இருக்க' வேண்டும். ஏனெனில், சூரிய ஒளிக்கதிர் மனித உடலுக்குச் சத்துணவு மட்டுமல்ல, நுரையீரலைத் தொற்றும் க்ஷய ரோகக் கிருமிகள் போன்றவற்றையும் கொன்று அழித்திடும் சக்தி வாய்ந்த கிருமிநாசினியும் ஆகும்.

நுரையீரலில் தொற்று நோய் ஏற்படாதிருக்க—

1. குறிப்பிட்ட நோயால் துன்புறுவோரிடம் தொடர்பு அறுத்தல்.
2. கிருமித் தொற்றுக்கு எதிர்ப்புச் சக்தி உருவாக்குதல்.
3. கிருமிக் கொல்லிகள் (ஆன்டிபயாடிக்ஸ்) அநாவசியமாகப் பயன்படுத்துவதைக் குறைத்தல்.
4. சுவாச மண்டலத்தில் ஏற்படுகின்ற ஒவ்வாமை நோயின் விளைவுகளை, ஒவ்வாமை ஏற்படுத்துகின்ற பொருட்களை விலக்குவதன் மூலமும், ஒவ்வாமையைக் குறைத்தற்குரிய தகுந்த நிபுணத்துவ சிகிச்சை மூலமும் தடுக்க முடியும்.
5 தொழிற்சாலைகள், விவசாயக் கூடங்கள், ஆகியவற்றில் போதுமான காற்றோட்ட வசதிகளை ஏற்படுத்துவதன்மூலமும் நிலக்கரிச் சுரங்கங்கள், இரும்பு ஆலைகளில் காற்றோடு அங்கு ஏற்படும் தூசுகள் கலக்காமல் இருக்க முயற்சிகள் மேற்கொள்ளுவதன் மூலமும், முகமூடி உறை அணிந்து வேலை செய்வதைச் சட்டத்தின் துணை கொண்டு கட்டாயமாக்குவதின் வாயிலாகவும், நிலக்கரி நோய், மணல் நோய், கல்நார் நோய், விவசாயிகளின் நுரையீரல் நோய் ஆகியவற்றைத் தடுக்க முடியும்.

நுரையீரலைத் தாக்கும் பல வகையான நோய்களைப் பற்றி, தெளிவான தமிழில்டாக்டர் **பி. எம். ரெக்ஸ்** எழுதிய நூலிலிருந்து... (சுருக்கம்: **சாருகேசி**)

நுரையீரல் நோய்கள்: பூம்புகார் பிரசுரம், சென்னை—1, விலை: ரூ.6.90.



அரசியல்வாதி: "விலைவாசி குறையலேன்னு போராட்டம் நடத்தறுங்களே! இப்போ விலை குறைஞ்சிருக்கே. யாராவது பாராட்டு விழா நடத்தறுங்களா?"

ஒருவர்: "அப்படி என்னங்க விலை குறைஞ்சு போச்சு...?"

அரசியல்வாதி: "ஏன், லாட்டரிச் சீட்டு விலை குறையலையா? முன்பு பத்து ரூபாய்க்கு ஒரு கோடி ரூபாய் பரிசு கொடுத்தாங்க. அப்புறம் ஐந்து ரூபாய்க்கு ஒரு கோடி ரூபாய் பரிசு கொடுத்தாங்க. இப்ப இரண்டு ரூபாய்க்கே ஒரு கோடி பரிசு கொடுக்கிறுங்களே! எங்கள் ஆட்சியின் இந்த மாபெரும் சாதனையை எதிர்க்கட்சியினர் மூடி மறைக்கிறுங்க."

—பி. வேணுகோபால்



மனைவி: "இன்னிக்கு என்ன திடீர்னு பேப்பரைப் பார்க்கணும்னு அவசரப்படறீங்க?"

அரசியல்வாதி கணவன்: "நான் எந்தக் கட்சியிலே சேருவதாஅறிக்கை விட்டேன்னு மறந்து போச்சு, பேப்பரைப் பார்த்து தெரிஞ்சுக்கலாமேன்னுதான்!"

—நெல்லைசுவாதி.

மீ.ப.சோமு

வசதி வாரியமா? வியாபார நிலையமா?




இப்போது நடந்து கொண்டிருக்கிற தசாபுத்தி, இதற்கு முன்பு நடந்த தசாபுத்தி என்று, சோதிடத்தில் சொல்லுவார்கள். அது போல நமது தமிழக அரசு, வீட்டு வசதி வாரியத்தின் தசாபுத்திகளை ஆராய்ந்து வருகிறது. அதை வரவேற்கிறேன். ஆனால் இப்போதைய தசாபுத்திகளை மட்டும் பார்ப்பதோடு நில்லாமல், அதன் ஜாதகத்தையே கொஞ்சம் புகுந்து பார்க்கும்படியாகப் பொது மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்!

வீட்டு வசதி வாரிய அமைப்பின் அஸ்திவாரத்தையே தோண்டிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் என்னென்ன எலும்புகள், சிதைந்தவைகள், எங்கெங்கே புதையுண்டு கிடக்கின்றன என்பது புலனாகும்! பெரிதாக வாயைத் திறந்து கொண்டிருக்கும் வெடிப்புகளுக்கு மெய்யான காரணம், நிலத்தடிக் களிமண்ணா அல்லது சிமெண்ட் கலப்படமா அல்லது வேறு இல்லுழல்லுகளா என்பதெல்லாம் அப்போது தான் வெளிச்சத்துக்கு வரும். அதோடு பல குடியிருப்புகளிலே சொந்தக்காரர்கள் குடியேறிப் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகியுங்கூட, அந்த வீடு கட்டி முடிப்பதற்கு எவ்வளவு செலவாயிற்று என்ற கணக்கை வாரியம் இன்னும் அறிவிக்காமல் வாயிலே உளுந்தங்களியைப் போட்டுக் கொண்டு 'கம்' என்று இருக்கிறது! இனிமேலா புதிதாகக் கணக்கு எழுதப் போகிறார்கள்? அல்லது எழுதிமுடித்த கணக்கேடுகள் அல்லது கணக்குக் கேடுகள் எல்லாம் அஸ்திவாரத்துக்குள்ளே புதையுண்டு போய் விட்டனவா? ஏதோ ஒரு விலையின் அடிப்படையில் தானே மாதத் தவணைகளைத் தீர்மானித்தார்கள்? இப்போது அந்த அடிப்படை என்ன ஆயிற்று? பொருள்களின் விலையானது இன்றைக்குக் கூடியிருக்கலாம். ஆனால் அன்று கட்டப்பட்ட வீடு அன்று வாங்கிய அன்றைய விலையில் வாங்கிய, பொருள்களைக் கொண்டுதானே கட்டப்பட்டது? இப்போது என்ன உயர்வு முளைத்து விட்டது?



இதையெல்லாம் நுணுகிப் பார்க்க வேண்டும். நடுவர்க்கத்தினரும், கடைவர்க்கத்தினரும் எவ்வளவோ பாடுபட்டுச் சேமித்த பணத்தை யோசித்தோ, யோசியாமலோ வாரிய பூமியிலே கொண்டு கொட்டியிருக்கிறார்கள்! அவர்கள் எல்லாம் சபிக்காமல் வாழ்த்த வேண்டுமென்றால் இந்த நடவடிக்கைகளை





உடனடியாகச் செய்யவேண்டியது அவசியமாகும்!

வீட்டு வசதி வாரியம் என்பது ஒரு வியாபார நிலையம் இல்லை! தனியார்கள் நடத்துகிற 'பில்டிங் காண்டிராக்ட்' நிறுவனங்களுக்கும், இதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது; இருக்கவும் வேண்டும்! மக்களுக்காக மக்களின் அரசு அமைத்துள்ள வசதி இது. வீட்டுமனைகளை ஏலம் விடுவதிலிருந்து, வீடுகள் கட்டிப் பொது மக்களைக் குடியமர்த்துகிற செயல் வரை, இந்த வாரியத்தின் இயக்கத்தில் ''வசதி'' இருக்கவேண்டும். அதன் பெயரில் மட்டும் வசதி இருந்தால் போதாது! தனியார்களிடம் வாங்குகிற மனைகள், வீடுகள் ஆகியவற்றின் விலைக்கும் வாரியத்தின் விலைக்கும் வசதியான மலிவு இருந்தால் தான், வாரியத்தின் அமைப்புக்கே நியாயம் உண்டு, அந்த வசதி என்ற சொல்லுக்கும் பொருள் உண்டு!

● ● ●

அங்காடிகளிலே 'கலப்படம்' என்ற வித்தை

'ஓகோ' என்று நடந்து வருகிறது! உணவுப் பண்டங்களிலும் எண்ணெய் நெய்களிலும், இந்தக் கலப்படம் வாடிக்கையே ஆகிவிட்டது. நம்முடைய வயிறும் இனிக் கலப்படம் இல்லாத உணவைச் சாப்பிட்டால்தான் கோளாறு செய்யும் போலிருக்கிறது!

வயிற்றின் கதை அப்படி. ஆனால் வழிபாட்டுக்கு உரிய கற்பூரம், திருநீறு, பன்னீர், சந்தனம் போன்ற பூஜைப் பொருள்களில் நடக்கிற மோசடியோ சொல்லி மாளாது! அத்தனையையும் சுவாமி தாங்கிக் கொள்கிறார்! சரி, குங்குமத்திலே போய்க் கலப்படம் செய்கிறார்களே, நம் பெண்டுகளின் நெற்றி என்னஆவது? நெற்றியின் திலக மையத்தில் புண் ஏற்பட்டு, தீராத ரணமும் கசிவுமாக நமது நாட்டின் தாய்க் குலம் படுகிற வேதனையை என்னவென்று சொல்வது?

வழக்கமாக மஞ்சளினால் செய்கிற தூய குங்குமத்தைப் பயன்படுத்துகிற சுமங்கலிகள் கூடக் கோவிற் பிரசாதமாகத் தரப்படுகிற அல்லது தபாலில் வருகிற குங்குமத்தை அப்படியே தூர எறிந்து விட முடியுமா? உள்ளம் கல்லில்லை! நெற்றியும் கல்லில்லை! புண்ணைத் தருகிற குங்குமத்தையும் இட்டுக் கொள்ளவே செய்கிறார்கள். நாடெல்லாம் இந்தக்காலத்தில் பக்தி குறைந்து வருகிறதே என்று வருந்துகிறோம். பக்தியின் பெயரால் நடக்கிற இத்தகைய மோசடிகளைப் பற்றி என்ன சொல்வது? எத்தகைய தண்டனை கொடுப்பது? என்ன தண்டனை கொடுத்தாலும் தகும் என்றே சொல்லத் தோன்றுகிறது!

எல்லா விதமான கலப்படங்களையும் ஒழிப்பதற்கு நாடு முழுவதற்குமான ஒரு மையச் சட்டம் வருவது நல்லதே. ஆனால் அதுவரை காத்திராமல் தமிழக அரசு இப்போதே ஒன்று செய்யலாம்: அறநிலைய ஆணைக்கு உட்பட்ட கோவில்களிலே வழங்குகிற குங்குமத்தின் தரம் அந்தந்த நிருவாக அதிகாரியின் பொறுப்பு என்று ஆணை பிறப்பிக்கலாம். பெரிய கோவில்களிலே தேவைக்கு வேண்டிய குங்குமத்தை அவர்களே செய்து கொள்ளலாம். தாய்க்குலத்தின் நெற்றி தப்புமாக!

• • •

பால் வழங்கும் துறையினர் பொது மக்களின் யோசனைகளுக்குச் செவி சாய்ப்பார்கள் என்ற நம்பிக்கையில் இரண்டொரு யோசனைகள் முன்பு கூறப்பட்டன. இப்போது மேலும் ஒன்று: பல விற்பனை நிலையங்களில் 'எக்ஸ்ட்ரா' அதிகப்படியான பால் எளிதில் கிடைப்பதில்லை. அரசாங்கம் வழங்குகிற ஒரு பொருளை மக்கள் விரும்பி வரவேற்று மேலும் கோருகிறார்கள் என்பதை விட ஒரு நற்சான்று வேறு என்ன உண்டு? மகிழ்ச்சியோடு அல்லவா வழங்க வேண்டும். சிப்பந்திகள் ''எக்ஸ்ட்ராவுக்கு'' ஒரு ''எக்ஸ்ட்ரா'' கேட்காமல் இருக்கும்படியாகக் கண்காணிப்புச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நாமும் ஒரு 'எக்ஸ்ட்ரா' நன்றி ஆவினுக்குச் சொல்லுவோம்!

• • •


சில நாட்களாகத் தெரு ஒலிபெருக்கியின் ஓலம் மட்டுப்பட்டிருக்கிறது. முக்கியமாக மார்கழி மாதம் முழுவதும் இரண்டு காதுகளிலும் வண்டுகள் வந்து குடைவதே வழக்கம்! அந்தக் குடைச்சல் அனுபவம் இந்த ஆண்டில் அவ்வளவாக ஏற்படவில்லை! நாமெல்லாம் பக்தியிலே குறைந்தவர்களில்லை. என்றாலும் நல்ல ஓசைகளுக்குமே அளவு என்று ஒன்று இருக்கிறதல்லவா? அந்த அளவைக் கட்டிக் காத்ததற்காக உரிய அதிகாரிகளுக்கு நாவினால் மட்டுமில்லை, செவியார்ந்த நன்றி உளமார்ந்து கூறுவோம்!



''தினமும் மணிமொழி கேட்டு அதன்படி செயல்படுவேன்.....''
''பலே! அதென்ன மணிமொழி?''
''என் மனைவி, ரங்கமணி, மாமியார் பாலாமணி, மைத்துனி ரமாமணி பேச்சைக் கேட்டுச் செயல்படுவேன்...''



''நீ எழுதின திரைப்படப் பாடலுக்கு நான் இரட்டிப்புத் தொகை தரணுமா! ஏன்?''
''இது ரெட்டை அர்த்தமுள்ள பாட்டாச்சுங்களே!''



CHARMINAR
THE VAZIR SULTAN
TOBACCO CO.LTD.
உங்களைப்
போன்றவர்களை திருப்தி
செய்ய சார்மினாரால்தான்
முடியும்
சற்றே இளைப்பாறுவீர்! ஒரு சார்மினார் புகைப்பீர்

பிசாசு ஒன்று வேண்டும்

அனுராதா ரமணன்

4

எத்தனை நேரம்தான் தாரா — அப்படியே உட்கார்ந்திருந்தாளோ... பாபுவின் குரல், அவளைத் தூக்கிவாரிப் போடச் செய்கிறது...

''ஏய்!''

''ஏ... என்னங்க....

''நானும் அப்பவே புடிச்சுப் பார்த்துட்டேயிருக்கேன்... தூங்காம, பிடிச்சு வச்ச பிள்ளையாராட்டம் உட்கார்ந்திருக்கியே.... என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்லே....தூக்கம் வரல்லே...''

''ஏன் வரல்லே?''

''தலைவலி...''

''எதுனாலத் தலைவலி....''

''....''

''சொல்லேன். வாயிலே என்ன கொழுக்கட்டையா... தலைவலிக்கு என்ன காரணம்.. ஆபீசுக்கு கட் அடிச்சிட்டு மாட்டினி போனியா....''

''ஐய்யோ.... அதெல்லாம் ஒண்ணுமில்லே.... கொஞ்ச நேரம் சும்மா இருங்க.....''

மொகலாய மன்னர் அக்பர் ஒரு பெரிய வாசக சாலை வைத்திருந்தார். அதில் 24 ஆயிரம் புத்தகங்கள் இருந்தன. ஆனால் அக்பருக்கு எழுதப் படிக்கத் தெரியாது!

—ஆர்.எஸ். சுப்பிரமணியம்.



தாரா, 'தடா'லெனப் படுக்கையில் சாய்கிறாள். அந்தக் கணத்தில் அப்படியே மூச்சடங்கி விட்டால் தேவலை போல.....

'சாதாரணமாய் ஒரு கொலையாளி போலீஸ் கண்களில் படாமல் எத்தனை நாளைக்குத்தலைமறைவாய் இருக்க முடியும்...'

'அது போலீசாரின் சாமர்த்தியத்திலும் கொலையாளியின் புத்திசாலித்தனத்திலும் இருக்கிறது...'

ராஜா என்ன செய்வான்...

'நான்தான் இந்தக் கொலையைச் செய்தேன்' என்று தானே வலியப் போய்ச் சரணடைந்து விடுவானோ...

ஏன் கொலை செய்தாய் என்று கேட்டால் என்ன பதிலைச் சொல்வான்.

'இதோ — இந்தப் பெண்ணைக் காப்பாற்ற...' — இப்படி நம் பக்கம் கையைக் காட்டி விட்டால்...

'ஊரும், உறவும் கையைக் கொட்டிச் சிரிக்காதோ... முதலில் இந்த மனிதரின் அருவருப்பான ஏச்சுப் பேச்சுக்களை எப்படிச் சகிப்பது...

'வெளியே போடி நாயே...'

இப்படி, கழுத்தில் கையைக்கொடுத்து, தெருவில் தள்ளி, ஊரை கூட்டிக் கத்தினால்..

சேச்சே... இந்த அவமானத்துக்கு, விஷத்தைத் தின்று உயிரை விடலாம்....

தாராவின் கண்கள், மறுபடியும் அருவியாய்ப் பெருகுகிறது.

'ராஜா இத்தனை நேரம் எங்கேயிருப்பான்... எங்கேயாவது கண்காணும ஓடி ஒளிஞ்சிருந்தாத் தேவலை... ஒரு வேளை, பொழுது விடியறதுக்குள்ளே போலீசை அழைச்சுட்டு இங்கே வந்து நிற்பானோ...'

அவளது தேகம் ஒருமுறை சிலிர்க்க வியர்வையில் சில்லிட்டுப் போயிருந்த அவளை முரட்டுத் தனமாய்த் தன் பக்கம் திருப்புகிறான் பாபு...

''இன்னும் வரல்லியா...''

''யாரு?''

''யாரா... தூக்கம் இன்னும் வரல்லியான்னு கேட்டேன்? நீ யாரை எதிர் பார்த்துக்கிட்டிருக்காப்பல?''

தாரா இரண்டு கைகளிலும் முகத்தைப் புதைத்துக் கொள்கிறாள். அவனின் கேள்விக்குப் பதில் சொல்ல அவள் விரும்பவில்லை. பதில் சொல்லும் நிலையிலும் அவள் இல்லையே...

அவளுக்குத்தான் எத்தனை எத்தனை பிரச்னைகள்

முதலில் — பொழுது விடிந்தால், ஆபீசுக்குப் போவதா வேண்டாமா என்பதே பிரச்னைதான் ..

போனால்... நிச்சயம் அங்கே கும்பல் அலை மோதிக் கொண்டிருக்கும்... குறுகலான தெருவை மேலும் அடைத்துக் கொண்டு போலீஸ் ஜீப்பும் ஆம்புலன்ஸும் கார்களும் நின்று கொண்டிருக்கும்....

பெரிய ஹாலில் — அதுதான் அலுவலகத்தின் வரவேற்பறை — நட்ட நடு சோபாவில் உருகி வழியும் மெழுகுப் பொம்மை மாதிரி, வயதிலும் சரீரத்திலும் பெரியவரான எம். டி. தொளதொளவெனச் சரிந்திருப்பார்... அலுவலகத்தைச் சேர்ந்த காக்காய்,

குருவைக் கூட விட்டு வைக்காமல, இன்ஸ்பெக்டர் கேள்விகளால் குடைந் தெடுப்பார்...

அப்படிப்பட்டதொரு சந்தர்ப்பத்தில் தான் மட்டும் ஆபீசுக்குப் போகாமல் லீவு போட்டால்...

அதுவே சந்தேகப் பொறியைக் கிளப்பி விடாதோ... அப்படியே 'உடம்பு சரியில்லே' என்று மழுப்பினாலும் இந்த போலீஸ் சும்மா யிருக்காதே...

'விசாரணையை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் போகட்டும்—' என்று போலீஸ் ஜீப்பையே வீட்டு வாசலில் கொண்டு வந்து நிறுத்தி விடுவார்களே...

தாரா, மூடிய இமைகளுக்குள் அந்தக் காட்சியைக் கொண்டு வந்து நிறுத்திப் பார்க்கிறாள்...

ஜீப் — வாசலில் நிற்கிறது.

முன்புறத் தோட்டத்தில், சந்தில் போலீஸ் தலைகள். பங்களாவின் சொந்தக்காரர்கள் பரபரத்துப் போய் வாசலுக்கு வருகி றார்கள்... என்னதான் பெரிய பங்களாக்கள் நிரம்பிய பகுதிதானென்றாலும் வம்பென் றால்... அதுவும் தினமும் தனக்கும் குலுக் கலுமாய் நடந்து போகும் பெண்ணை அழைத்துப் போக, காவல் துறையின் பிரத்தி யேக வாகனம் வந்திருக்கிறதென்றால் எந்தப் பெண்ணுக்குத் தான் ஆவல் கரை புரளாது?

தெரு முழுக்கப் பெண்கள், பெண்களின் தோள்களுக்குப் பின்னாலிருந்தபடியே எம்பிப் பார்க்கும் — அந்தந்தப் பெண்களுக்குச் சொந்தமான ஆண்கள்... இவள் — தெருவில் நடந்து போகும் போதும் — இந்த ஆண்கள், தங்களது மனைவிக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு இவளை சுவாரஸ்யமாய்க் கவனிப் பது உண்டுதானென்றாலும் — இது சற்று விசேஷமான, வித்தியாசமான பார்வை....

இவர்களைச் சொல்வானேன்... காம்ப வுண்டு சுவரோரமாய்ச் சாற்றி வைக்கப்பட் டிருக்கும் பேனர்களில் தலைகீழாய், கோணல் மாணலாய், நின்றும், படுத்தும் கிடக்கும் சிவாஜி, ரஜினிகாந்த் கூட இவளைக் கிண்ட லாய்ப் பார்ப்பது போல..

''என்னம்மா, மாட்டிக்கிட்டியா?''

'ஜீப்'பில் ஏறுகிற தாராவைப் பார்த்து, ஆவேசமாய்க் கத்துகிறான் பாபு.

''வெட்கம் கெட்டவளே... இனிமே எம் மூஞ்சியிலேயே முழிக்காதே... இந்தப் பக்கம் வந்தே... காலை உடைப்பேன். காறித் துப்புவேன்...''

தாராவின் நெஞ்சம் உத டும் அதற்குள்-உலர்ந்து போகிறது...



இப்பொழுதுதானே தண்ணீர் குடித்தாள்... மறுபடியும் இதென்ன மரண தாகமா...,

அவன் படுத்தபடியே பக்கத்திலிருந்த கூஜாவை எடுக்கக் கையை நீட்டிப் பார்கிறாள். எட்டவில்லை. எழுந்திருக்க முடியாத வாறு — அவளுடைய இடுப்பைச் சுற்றி பாபுவின் அழுத்தமான கரம்...

'இப்படித்தான் அந்தக் கடங்காரனும் பிடிச்சான்...'

குரங்கு மனம் — மறுபடி மறுபடி மாலையில் நடந்ததையே சுற்றி வருகிறதே... இது என்ன அவஸ்தை.

''இனிமேல் ஆயுசுள்ள வரைக்கும் — இந்த நினைப்பு மனசை விட்டுப்போகாதோ...

'இதையே நினைச்சு, நினைச்சு, நமக்கே ஒருநாள் பைத்தியம் பிடிச்சிடுமோ...'

'பைத்தியம்னு — கண்டதையும் உளறுமே.. நானும் உளறி... உளர்றதுலேயே உண்மை வெளிப்பட்டு...'

கழுத்தைச் சுற்றிய கருநாகம் போல... இந்த நினைப்புக்கள் இறுக்க... மூச்சுத் திணறுகிறது அவளுக்கு...

இத்தனை நினைப்புக்களையும் மீறி — சின்னதாய் ஒரு சந்தேகம்...

இரைக்காக மீனுக்கு
 இரையாகும் புழுவதனை
நறுக்கெனவே தூண்டிலிலே
 நாணேற்றும் வீரர்களே,


பாலதிகம் குடிப்பதனால்
 பசுவன்பு கன்றுகளின்
தோலுக்குள் வைக்கோலை
 திணிக்கின்ற தொண்டர்களே,

மேடேறி முடியும் வரை
 மேனி நோக பாரமதை
ஜோடி மாடு இழுப்பதற்கு
 சோரும் வரை அடிப்பவரே

நீண்டநாள் வாழ்கவென
 நான் உம்மை வாழ்த்துகின்றேன்.

நீரில்லை என்றால்
 நிச்சயமாய் எங்களுக்கு
காருண்யம் என்னவென்று
 கடுகளவும் தெரியாது.

—செம்பருத்தி.



ஸ்ரீதர் உண்மையிலேயே செத்துவிட்டானா... இல்லை, அத்தனை அடியையும், கத்திக் குத்தையும் மீறி, அந்த உடம்பில் உயிர் ஒட்டிக் கொண்டிருக்குமோ...

நிஜமாகவே அவன் ஒரு ராட்சஸன்தான்.

கையும், காலும் கருங்காலிக் கட்டை மாதிரி... இன்றுதான் அவனின் முகத்தை அத்தனை நெருக்கத்தில் பார்த்தாள் அவள்.

கண்களிலும், உதட்டிலும் எத்தனை விஷமம்?

தப்பு தன் பேரிலும் இருப்பதை உணராமல் இல்லை தாரா..

''சாயந்திரம் ஆறரை மணிக்கு —ஆபீஸ் லேயே ஒரு சின்ன மீட்டிங். மத்த பார்ட்னர்ஸெல்லாம் வராங்க. அதனாலே அப்பா உன்னை, மீட்டிங் முடிஞ்ச பிறகு வீட்டுக்குப் போயிக்கலாம்னு சொல்லச் சொன்னார்...''

ஸ்ரீதர், மாலை நாலு மணி சுமாருக்கு, அவளை இன்டர்காமில் அழைத்துச் சொன்ன போது — அவள் — மடத்தனமாய் நம்பினாளே...

இது வரையில் — இந்த மாதிரி மீட்டிங், கான்ஃபரன்ஸ் இவைகள் அலுவலகத்தில் நடத்தப்பட்ட போது — நேரிட, எம்.டி.யே அவளை போனில் அழைத்து விவரத்தைச் சொல்லுவார்...

ஒருநாள் கூட அவர், இதற்காக ஸ்ரீதரை நியமித்ததில்லை...

கொஞ்சமாவது இவள் யோசித்திருக்கலாம்...

இதை விடவும் பெரிய தவறு... அலுவலக நேரம் முடிந்து, எல்லோரும் இடத்தைக் காலி செய்த பின்பு, இவள் அவசர அவசரமாய் அங்கிருந்த குளியலறைக்குள் போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டு, வேலை மெனக்கெட்டு, தனது 'மேக்கப்'பை டச்சப் செய்து கொண்டது...

எல்லாவற்றையும் விடப் பெரிய தவறு— எம். டி. அறையிலிருந்து அழைப்பு மணி ஒலித்தவுடன், அரக்கப் பரக்க அறையை நோக்கி ஓடியது...

எம். டி. மீட்டிங் ஏற்பாடுகளைக் கவனிக்க- முன்னதாகவே வந்து விட்டதாக அவள் நினைத்தது போக... சுழல் நாற்காலியில் படு அமர்க்களமாய் ஸ்ரீதர்...

அந்தக் கணமே —பின் வாங்கினள்தான். ஆனால், அடுத்து அவன் சொன்ன வார்த்தைகள்...

''கமான் மிஸஸ் தாரா... எல்லாரும் வர்றதுக்குள்ளே, இந்த ஃபைலை ஒருதடவை பார்த்து, சின்னதா ஒரு நோட் எடுத்து வச்சுக்கச் சொன்னார் அப்பா.... அவரே இப்ப வர்ற நேரம்தான்... டைத டை, காபி டிபனுக்கெல்லாம் அரேன்ஜ் பண்ணிட்டீங்களா...''

''இதோ... இனிமேத்தான் சொல்லப் போறேன்...''

''அடடே... என்னம்மாயிது... ஒன் அவர்லே என்னத்தை முடிப்பீங்க... சரிசரி.. நீங்க நோட்ஸ் எடுங்க. நான் போன்லே ஆர்டர் கொடுத்திட்டு, பியூனை ஹோட்டலுக்கு அனுப்பி வைக்கறேன்.''

''வேண்டாம் சார். போன்லே ஆர்டர் பண்ணினாப் போதும். அவங்களே கொண்டு

வந்து சர்வ் பண்ணிடுவாங்க... வழக்கமா நியூ உட்லண்ட்ஸ்லேயிருந்து தான் டிபன் வரும்... எத்தனே பேருன்னு சொல்லட்டும் சார்...''

கிரிதர் எழுந்து, அறையின் கதவுப்பக்கம் போனதையே கவனிக்கவில்லை தாரா. டெலிபோன் ரிஸீவரைக் கையிலெடுத்து, நம்பரைச் சுழற்றுவதிலேயே மும்முரமாய்...

''ரெண்டு பேருக்கு ஆர்டர் கொடு தாரா...''

''என்னது ரெண்டு பேரா...''

தாரா திரும்ப, அவன் சிகரெட் புகை வழியப் புன்னகைத்தான்.

''உம். ரெண்டு பேருக்குத்தான்.''

''ரெண்டு பேருக்காக அவங்க, ஹோம் சர்வீஸ் பண்றதில்லே சார்... வேணுமானு பியூனே விட்டு வாங்கிட்டு வரச் சொல்லலாம்...''

''ஓ. கே. உன் இஷ்டம்...''

''என்ன அயிட்டம்...''

''உனக்குத் தெரியாதா... சாப்பிடப் போறது நீயும் நானும்... இதுல உன் இஷ்டம் என்ன... என் இஷ்டம் என்ன...''

அப்பொழுதுதான் அவள் கிரிதரின் முகத்தில் தாண்டவமாடும் வக்கிரத்தைக் கவனித்தாள்...

''வாட் டு யூ மீன்...''

அமர்ந்திருந்த நாற்காலியிலிருந்து உதறிக்கொண்டு அவள் எழ — அவன் பாய்ந்து வந்து அவளது இடையைச் சுற்றிவளைக்க...

''ஐயோ... ஐயய்யோ... என்னே விடுங்க.. ஹெல்ப்... யாராவது வாங்களேன்...''

பாவம் தாரா.

ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அறையில், அதுவும் தாழிடப்பட்ட அறையில் இருந்தபடி என்னதான் தொண்டை கிழியக் கத்தினுலும் யார் காதிலும் விழாது என்பதைக் கூட மறந்து விட்டாள்.

மேலும் யார் இருக்கிறார்கள் ஓடிவர...

வாட்ச்மேன்... அவன் இருப்பான்... சில சமயங்களில் வேலை நேரம் முடிந்த கையோடு, தெரு முனையிலுள்ள டீக்கடையைப் பார்க்க நடையைக் கட்டிவிடுவான். அங்கே டீயுடன், அன்றுட வம்புகளேயும் கொஞ்சம் மென்று விட்டு நிதானமாய், திரும்பி வருவான்.

எத்தனேயோ முறை — இதற்காக முதலாளியிடம் அவன் வசவு வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறுன்...

ஆனுல் சின்ன முதலாளியான கிரிதர், அவனேத் திட்டவே மாட்டான். அவனே பணம் கொடுத்து, டீ வாங்கிக் குடித்து விட்டு வரச் சொல்லி வற்புறுத்துவான்.

கிரிதருக்குப் பல பெண்களின் சகவாசம் இருப்பதாலும், அலுவலகத்தில் உள்ள ஒன்றிரண்டைத் தவிர, மற்றவைகளே அவன் அவ்வப்பொழுது அலுவலகத்துக்கே வரவழைப்பது உண்டு என்பதாலும்... அவன் தரும் சில்லறைகளே வாங்கிக் கொண்டு, கொஞ்ச நேரத்துக்கு ஒதுங்கிப் போய் விடுவது வாட்ச்மேனின் வழக்கம்....

அப்பேர்ப்பட்டவன், தாராவின் கதறல் கேட்டு ஓடி வரப் போகிறுனு...

ஆனுலும்,

விடாமல் தாரா கத்தினுள்; திமிறினுள்; வீறிட்டாள்; அவனது மணிக்கட்டைப் பல்லால் கடிக்க முயன்றுள்; அது இயலாத போது — கையில் கிடைத்த ஃபைலால் அசட்டுத்தனமாய் அவனது தலையில் சாற்றினுள்.

கடைசியில்...

இனி மீள முடியாது என்கிற பயம் நெஞ்சைக் கவ்விய போது — தனக்குத் தெரிந்த தெய்வங்களின் பெயரையெல்லாம் மனதுக்குள் சொல்லியபடி 'ஓ'வென அழுதாள்.

அப்பொழுதுதான் ராஜா, அறைக்குள் பிரவேசித்தான்... அதுவும் எப்படி...

பக்கத்து அறைக்கும், இந்த அறைக்கும் நடுவில் இருந்த கண்ணுடி வெண்டிலேட்டரை உடைத்துக் கொண்டு...

சத்தமே வெளியே கேட்காத போது இவன் மாத்திரம் எப்படி...

யோசிக்க நேரமில்லை தாராவுக்கு.

'வந்தாயே... வந்தாயே...'


கைகூப்பி அழத்தான் அவளால் அப்போதைக்கு முடிந்தது.

(தொடரும்)

பிரான்சு நாட்டில் பல நகரங்களில் தபால்காரர்களுக்கு இடுப்புக்குக் கீழே பூசிக் கொள்ள மருந்து தருகிறார்களாம்.

அதன் வாசனே நாய்களே அண்ட விடாதாம். தள்ளி நின்று குரைப்ப தோடுவிட்டுவிடுமாம். -நெல்லைகவாதி.





நண்பன்: என்னது! உன் ரிஸ்ட்வாட்ச் ரயில் வெட்டினில் விழுந்து போச்சா? உடனே செயினே இழுத்திருக்கறது தானே?

மற்றவன்: இழுத்தேன்! ஆனு ரயில் நிக்கல்லே... பீச்சிட்டுத் கண்ணீர் வந்தது.

மக்கள் மீது பழி சுமத்தாதீர்கள்!



“மக்களின் ரசனை சரியில்லை. அதனால் தான் தரமான படங்களை எடுக்க முடிய வில்லை என்று சில தயாரிப்பாளர்கள் குறிப்பிடுகிறார்களே — அது உண்மையா?”

பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை யின் மனோதத்துவப் பிரிவில் பணியாற்றும் திரு. **எம். பழனி** 'திரைப்படங்களும் சமுதாய மாற்றமும்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். அவர் பதிலளித்தார்:

''மக்களின் ரசனைதான் காரணம் என்பது தவறு. 'பிளிட்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் திரு. பி. கே. கரஞ்சியாவின் யோசனைப்படி சில பரிசோதனைகள்நடத்தப் பட்டன. கர்நாடக மாநிலத்தில் 'ஹெக்டு' என்னுமிடத்தில் சாதாரண, கிராம மக்கள், அரசு ஊழியர்கள், நடுத்தர வர்க்கம் என்று பல தரப்பட்ட மக்களுக்கு சத்யஜித்ரே, மிருணாள்சென், கிரீஷ் கர்னாட் போன்றவர்களின் கலைப்படங்களைப்போட்டு காட்டினோம். மொழி வேறுபட்ட படங்கள் அவை. ஒரு வாரம் கழித்து மக்களைச் சந்தித்து விசாரித்த போது மிகச் சரியான விமர்சனங்களும், பாராட்டுக்களும் பெருமளவில் கிடைத்தன.

''திரைப்படம் மிகவும் சக்திவாய்ந்த சாதனம். எம். ஜி. ஆர். திரைப்படத்தில் நடித்து மக்களின் ஆதரவு பெற்று முதலமைச்சராகவே வர முடிந்தது எப்படி என்கிற பிரமிப்பினால் தான் 'திரைப்படங்களும், சமுதாய மாற்றமும்' என்ற பொருளை நான் ஆராயப் புகுந்தேன். சுமார் முப்பது ஆண்டுகளாகச் சமுதாயத் துக்காகப் பாடுபட்ட தலைவர் சுப்பையா போன்றவர்களைத் தெரியாதவர்கள் இந்தப் பாண்டிச்சேரியில் இன்னும் இருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு படத்தில் தோன்றி நடித்த 'மண் வாசனை' பாண்டியனையோ, ரேவதியையோ சொன்னவுடனேயே யாரும் எளிதில் புரிந்து கொள்கிறார்கள்.

''பாண்டிச்சேரி இளைஞர்களிடம் ஒரு சர்வே எடுத்தேன். 'நல்ல படங்கள் கிடைத்தால் பார்க்கத் தயார். ஆனால் எங்களுக்கு மசாலாப் படங்கள்தாம் கிடைக்கின்றன' என்று வருத்தப்பட்டவர்களே அதிகம். அதனால் தான் 1981—ல் 'நவ்தர்சன்' என்கிற பிலிம் சொஸைட்டியைத் துவங்கி, பாண்டிச்சேரியில் நல்ல திரைப்படங்களைக் கொண்டு வந்து திரையிடத் தொடங்கினோம். அகில இந்திய பிலிம் சொசைட்டி கூட்டமைப்பின் தலைவராக இருப்பவர் திரு. சத்தியஜித் ரே. தரமான மேலை நாட்டுப் படங்களைத் தூதரகங்கள் வாயிலாக டெல்லியில் தருவித்து, பின்பு பிலிம் சொசைட்டி மூலமாக சுற்றுக்கு விட்டுத் திரையிடப்படுகின்றன. நல்ல பல இந்தியப் படங்களும் திரையிடப் படுகின்றன.

''இங்கே குழந்தைகளுக்கெனத் தனியாகப் படங்கள் இல்லையே'' என்று குறைப்படுகிறார் பழனி. ''மூந்தானை முடிச்சு படத்தில் வரும் 'ஆர்ர...ரோ பாட்டுக்கு உங்கள் குழந்தை அர்த்தம் கேட்டால் நீங்கள் என்ன பதில் சொல்ல முடியும்? மேல்நாடுகளில் தனியான குழந்தைப் படங்கள் உண்டு. ட. வியில் கூட இரவு குறிப்பிட்ட நேரம் வரை குழந்தைகளுக்கான திரைப்படங்கள் காட்டப்படுகின்றன.

'' 'ஏழாவது மனிதன்' ரஷ்யப் பரிசு பெற்ற படம். இதனை எடுத்த திரு. ஹரிஹரன் 'வான்டட் தங்கராஜ்' என்று குழந்தைகளுக்கென்று ஒரு திரைப்படம் எடுத்திருக்கிறார். அதை எந்தத் திரையரங்கும் கேட்டு வாங்கித் திரையிடத் தயாராக இல்லை. பிலிம் சொசைட்டி மூலமாகத்தான் திரையிட இயலும்.''

இறுதியாக டாக்டர் எம். பழனி அழுத்தந்திருத்தமாகக் கூறினார்:


''மக்கள் நல்லதையே விரும்புகின்றார்கள். ஆனால் அவர்களுக்கு நல்லவை தரப்படுவதில்லை. சக்தி வாய்ந்த சாதனமான சினிமாவை உபயோகமாகப் பயன்படுத்தவில்லையானால், சமுதாயக் கேடு தான் விளையும்!''

-ஜே. வி. நாதன்



''நேத்து வரையிலும் கவர்னர் பதவி ஒழிக என்று கோஷம் போட்ட நம்ம தலைவர், இன்று கவர்னர் பதவியை ஆதரிக்கிறாரே!''

''அவரோட மனைவிக்கு கவர்னர் பதவி கிடைச்சிட்டுதாம்...''



''இங்கே இருக்கறவங்க இந்தத் தொழி லோட மதிப்பைத் தெரிஞ்சுக்க மாட்டேங்க 'றுங்க சார்! வெளிநாட்டுக் காரங்கதான் நல்லாயிருக்கு, அருமையாயிருக்குன்னு வாங் கிட்டுப் போறாங்க. வி. டி. ஐ. லே வாங்கிக்க றாங்க... கிராஃப்ட்ஸ் கவுன்ஸில்ல நானும் மெம்பர்தான். ஆனா பெரிசா ஆதரவு இல் லீங்க. பூம்புகார், கிராமோத்யோக் பவன்ல எல்லாம் நம்மளைக் கண்டுக்கறதில்லீங்க... ரொம்பப் புராதனமான கலை சார் இது!

''எங்க சங்கத்துல பதினாறு பேர் இருக்க றாங்க. ஊர் ஊராப் போய் விக்கிறோம். பம்பாய்ல அதிகம் விக்கலே சார். பப்ளிஸிடி பத்தலீங்க. அகமதாபாத்ல மிருணாளினி சாராபாய் அம்மா நிறைய வாங்கிக்கிட் டாங்க.

''என். டி. ராமராவ் சீஃப் மினிஸ்டர் ஆனப்புறம் காளஹஸ்தி வந்தார் சார். ஒரு வெங்கடாஜலபதி வரைஞ்சு கொடுத்து, எங்க கஷ்டங்களையும் சொன்னோமுங்க. ஹைதராபாத் போன உடனே, என்ன செய்யணுமோ அதையெல்லாம் செய்யறேன் னாருங்க. அத்தோட போச்சு.

''இத காடாத் துணியிலதாங்க எழுத றோம். ஆயுர்வேத வைத்தியத்துக்கு உப யோகப்படறதெல்லாம்தாங்க இதுக்கும் உப யோகமாகுது. ஆமாங்க, கடுக்காய், கடுக் காப்பூ, தும்பப்பட்டை, சிவப்புக் கலர் வர்ற துக்கு கருன்பட்டை, மந்திஷ்டி (''அப்ப டின்னா?'', ''காட்டிலிருந்து எடுக்கற ஒரு குச்சிங்க!'')

''ஒரு நா படம் வரைஞ்சா மறுநா படிகாரத் தண்ணியிலே ஊற வைக்கணும். ஆத்தில பாயற தண்ணிலே போட்டு அலச ணும். அப்புறம் டிரம்மிலே போட்டு மந்திஷ்டி கருன்பட்டை போட்ட தண்ணியிலே முக்கி எடுக்கணும். அப்புறம் மாட்டுச் சாணி கலந்த தண்ணியிலே ஒரு ராத்திரி பூரா ஊற வைக்கணும். மறுபடி, ஓடற தண்ணி யில அலசி- எடுத்து, சரமணல் இருக்கிற எடத்துல கவுத்துப் போட்டு ஒலர வைக் கணும். இதுமாதிரி மூணு நாள் பண்ண ணும். அப்புறம் கடுக்காப் பொடியைத் தண்ணியில போட்டுக் காய்ச்சி அதுல நனச்சு எடுக்கணும்... ரொம்ப சிரமப் பட்டாத்தாங்க இவ்வளவு அழகா வரும்... கலர் நிக்கும்.

''காளஹஸ்தியில இன்ஸ்டிடியூட் இருக் குங்க. ஆறுபேர் இரண்டு வருஷத்துக்கு ஒரு தடவை சேர்த்துப்பாங்க. எழுபத்தஞ்சு ரூபா ஸ்டைபண்ட் உண்டுங்க மாசத்துக்கு.. ஆதரவு இருந்தா நல்ல தொழிலுங்க... இதோ பார்த்தீங்களா, கீதோபதேசம்! தவிர, ராமாயணம் பூரா ஒரே துணியில கலர்ல எழுதியிருக்கேன்... தாய்லாந்துக்காரர் ஒருத் தர் கேட்டதும் பேசிலே!''

—காளஹஸ்தியிலிருந்து வந்த கலம்காரி கலைஞர் திரு. முனிரெட்டி 'சாருகேசி' யிடம் சொன்னவை.

புகைப்படம்: ராமன் பிரதர்ஸ்

இராமாயணம் முழுதும் ஒரு துணியில்

தமிழ்நாட்டில் இந்திரா போட்டியிடுவாரா?

○ அருள்மொழி, சென்னை.

? எந்த எடுப்பிலேயே ராங் நெம்பர் கிடைத்ததாம் அமைச்சருக்கு. படித்திருப்பீரே?

! ஆந்திராவில் புதிதாகத் தொடங்கப்பட்ட எஸ். டி. டி. இணைப்பு பற்றித் தானே குறிப்பிடுகிறீர்கள்? நல்ல சகுனம் இதைவிடச் சிறந்ததாகத் தொலைபேசிக்குக் கிடைக்கவே கிடைக்காது. ஆனாலும் அமைச்சர் சொன்னார்: 'கோளாறு டெலிஃபோன் இயக்கத்தில், அல்ல. நான்தான் தவறான எண்ணைச் சுழற்றி விட்டேன்' என்று! வழக்கமாக அதிகாரிகள் தரப்பில் சொல்லப்படும் சமாதானம் இப்போது அமைச்சராலேயே கூறப்பட்டு நமது தொலைபேசி பத்தினியின் கற்பு காப்பாற்றப்பட்டு விட்டது!

○ என். எஸ். ராமமூர்த்தி, திருப்பூர். ★

? குமரி அனந்தன் ஆழம் தெரியாமல் காலைவிட்டுவிட்டு இப்போது ஏன் முழிக்கிறார்?

! கட்சி எனக்காக என்ன செய்தது என்று கேட்பதற்குப் பதில் நான் கட்சிக்காக என்ன செய்தேன், செய்யப் போகிறேன் என்று அவர் கேட்டுக் கொண்டிருந்தால் அது தெப்பமாக எந்த ஆழத்திலும் காப்பாற்றியிருக்கும். 'அனந்தன் இல்லாவிட்டால் தமிழகத்தில் ஜனதா இல்லை' என்று எல்லோரும் கருதும் அளவில் இரண்டொரு ஆண்டுகளில் அவர் பாடுபட்டு உழைத்து 'எல்லோருடைய மனங்களையும் கவர்ந்து உயர்ந்திருக்க முடியும். கென்னடிஅறிவுறுத்தியதுபோல்தான், தனது என்ற எண்ணங்களை விட்டொழித்துத் தலைவர்களும் அவர்களைப் பின்பற்றி மக்களும் நாட்டுக்காகத் தியாகங்கள் புரியத் தயாராகும்வரையில் இந்தத் தேசம் முன்னேற வழியே இல்லை. ஜனதாவில் இன்று புதிதாய்ச்சேர்ந்தவர் இவர். அங்கே நெடுநாளாய் காத்திருப்பவர் பலர். அவர்களை ஒதுக்கி இவருக்கு முதல் மரியாதை என்றால் மனக்குமுறல் இருக்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியது தானே. அந்தஎதிர்ப்பை அன்பினாலும் உழைப்பாலும், தியாக மனப்பான்மையாலும் நாளடைவில் வெற்றி கொள்வதற்குப் பதில் சேர்ந்ததாக அறிவித்த ஒலி அடங்குவதற்குள் வெளியேறுவதாக குமரி அனந்தன் எடுத்த முடிவு துரதிர்ஷ்டவசமானது.

○ அழைத்தது எப்படி?





○ தமிழகத்தில் போட்டி



○ சேஷன், பங்களூர்.

? திருவையாறு மகோத்ஸவம் நேரில் பார்த்திருக்கிறீர்களா? டி. வி. யிலா?

! டி. வி. யில் பார்ப்பதற்குள்ளேயே போதும் போதும் என்றாகி விட்டது. நமது வித்வான்கள் ஒன்று சேர மாட்டேனென்கிறார்கள் என்று வருந்துவதுண்டு. பஞ்சரத்ன கீர்த்தனைகளைப் பாட ஒன்று சேர்ந்த போதோ ஏன்தான் சேர்ந்தார்களோ என்றாகிவிட்டது. டி.வி. ஓர் அற்புதமான சாதனம். போலிகளை இனம் காட்டிவிடும் என்பதை வித்வான்கள் மறவாதிருப்பது நல்லது.

○ சௌந்தரி, திருச்சி.

? தாங்கள் தராசு முள்ளாக இருக்க விரும்புகிறீர்களா? அல்லது தட்டாக இருக்க விரும்புகிறீர்களா?

! ஏன் நான் முழுசாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?

○ பி. ஆர். அம்பாசங்கரன், பாதூர்.

? வெட்கம் எது? அவமானம் எது?

! நமது அரசாங்க வர்த்தக கார்ப்பரேஷன், பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டது. வெள்ளி சப்ளைக்கு. ஆனால் வெள்ளி ஏற்றுமதிக்கு அரசாங்க தடை உத்தரவு வந்து விட்டது. உடனே இந்த விவரத்தைச் சம்பந்தப்பட்ட பிரிட்டிஷ் நிறுவனத்துக்குத் தெரிவித்து எங்களால் சப்ளை செய்ய முடியாது என்று கூறியிருந்தால் நஷ்டம்

மிகவும் குறைவாக இருந்திருக்கும். ஆனால் அரசு வர்த்தக கார்ப்பரேஷன் இதைச் செய்யாமல் வெள்ளி ஏற்றுமதி செய்வதாகவே அந்த பிரிட்டிஷ் நிறுவனத்துக்கு நம்பிக்கை அளித்து வந்தது. இது தேசமே வெட்கப்பட வேண்டிய விஷயம். இவ்வாறு நடந்து கொண்டதால் நிகர விளைவு, மேற்படி நிறுவனத்துக்கு நமது அரசாங்க வர்த்தக கார்ப்பரேஷன் 1.72 கோடி ரூபாய் நஷ்ட ஈடு தர வேண்டும் என்று லண்டன் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இது நாடே அவமானப்பட வேண்டிய காரியம்.

○ அண்ணு அன்பழகன், அந்தணப்பேட்டை.

? பாராளுமன்ற தேர்தல் வந்தால் இந்திரா தமிழகத்தில் போட்டி இடுவாரா?

! வேறு எதற்காக அ.தி.மு.க. வுடன் இ.காங்கிரஸ் நல்லுறவு வளர்த்து வருகிறதாம்!

○ தாரக பிரியன், கோவை.

? எளிதில் கோடீசுவரனுவது எப்படி?

! லாட்டரிச் சீட்டு வாங்குவதன் மூலம் அல்ல.

○ அன்புதாசன், கவுந்தப்பாடி.

? எதற்காக அதிகம் செலவிட விரும்புகிறீர்கள்?

! எதற்கு அதிகம் செலவிடாமல் இருக்க முடிகிறது?

○ ஆர். கே. லிங்கேசன், மேலக்கிருஷ்ணன்புதூர்.

? பாக்யராஜை தமதுசினிமா வாரிசு என எம்.ஜி.ஆர். கூறியிருக்கிறரே ஏன்?

! அரசியல் வாரிசாகவேறு ஒருவரைத் தேர்ந்தெடுத்து விட்டதால்!

○ என். சண்முகம், உள்ளி.

? ராஜாஜியை ஆசாரியர் என்று அழைத்தது அன்பிஞலா அவமரியாதை செய்யும் எண்ணத்தாலா?

! அது அழைப்பவரைப் பொருத்தது. ஆசாரியர் என்று பயபக்தியோடு உச்சரித்தவரும் உண்டு: ஆஆச்சாரியர்ர்ர் என்று பல்லைக் கடித்தவர்களும் உண்டு.

○ ஆர். அரிகோபி குடியாத்தம்

? சினிமா படப்பெயர்களில் விரசம் இருப்பது ஏன்?

! விரசம் பெயரில் மட்டும்தாஞ என்ன!

○ ஞானசிராமன், மதுரை.

? வீடியோ காட்சிகளுக்குக் கட்டுப்பாடுகள் விதித்துத் தமிழக அரசு அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளதை வரவேற்கிறீர்களா?

! இல்லை. விஞ்ஞானம் எவ்வளவு வேகமாகமுன்னேறி வருகிறது என்பதைப் புரிந்து கொள்ளாமல் விதிக்கப்பட்ட அபத்தச் சட்டம். இது



○ சினிமா வாரிசு

போன்ற லைசென்ஸ் வழங்கு சட்டங்களால் லஞ்ச ஊழலை வளர்க்கலாம்; வீடியோ காட்சிகளைக் கட்டுப்படுத்த முடியாது. லைசென்ஸ் இருந்தாலொழியஉங்கள் வீட்டில் வீடியோபார்க்க பக்கத்து வீட்டுக்காரரான நான் வரக்கூடாதென்று சுதந்திர ஜனநாயக நாட்டில் ஒரு சட்டமா, சே! திரைப்படங்களையெல்லாம் வீடியோ டேப்பில் பதிவு செய்து வாடகைக்குத் தருகிறர்கள்; தியேட்டரில் கூட்டம் குறைந்து வருகிறது என்பதால் திரைப்படத் துறை சட்டத்தை வரவேற்றிருப்பது புத்திசாலித்தனமானதல்ல. கட்டுப்பாடுகளைக் குறைக்கப் போராட வேண்டுமே தவிர அதிகரிப்பதை வரவேற்பதா? வீடியோ போட்டியைச்சமாளிக்கத் திரைப்படத் துறைக்கு அமெரிக்கா காட்டிய வழி 1) வீடியோவில் பார்த்தால் திருப்தி ஏற்படாத வகையில் உயர்தரமான டெக்னிக்குகளுடன் புதுமையான முறையில் (உம்: Mad Max) திரைப்படங்களைத் தயாரித்தல். 2) வீடியோவில் பார்க்கவென்றே குறைந்தசெலவில் புதிய படங்களைத் தயாரித்து வீடியோ மார்க்கெட்டைக் கைப்பற்றுதல். அங்கே திரைப்பட நடிகர்கள், நாடக நடிகர்கள்போல் வீடியோ நடிகர்கள் என்று ஒரு தனிப் பிரிவினர் தோன்றிவிட்டனர்!

○ ஆ. சந்திரசேகர், லால்குடி.

? என் நண்பர்கள் இரட்டைச் சதம் எடுப்பதில் பிராட்மன் சாதனையை யாராலும் மிஞ்ச முடியாது என்கிறர்கள். நீங்கள்...?

! உங்கள் நண்பர்கள் கூறுவது 'ரிகார்ட்' அளவில் சரி. ஆனல் பிராட்மன் சந்தித்துள்ள பந்து வீச்சு நிபுணர்களைவிட கவாஸ்கர் எதிர்த்து வெற்றி பெற்றுள்ள பந்து வீச்சாளர்கள் பயங்கரப் பேர்வழிகள். அதையும் கவனிக்க வேண்டுமே நாம்!

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
என். எஸ். ராமமூர்த்தி,
1 வி, ராம்நகர்,
முதல் தெரு,
திருப்பூர் 638 602.

○ விழிக்கிறார்?



மாணவர் பக்கம்

ஒரு மாணவி பேட்டி காண்கிறாள்!

நடிகைகளை மட்டும் தான் பேட்டி காண லாமா? இதோ:—

பிரபல மாணவி ஜெயகுமாரியை பிரபல மாணவி சீதாலெட்சுமி பேட்டி காண்கிறாள்!

ஆனந்த நிலையம் முதல் மாடியில் நடித்துக் கொண்டிருந்த... சே! சே!.... படித்துக் கொண்டிருந்த பிரபல ப்ளஸ் டூ மாணவி சீதாலட்சுமி, பிரபல ப்ளஸ் டூ மாணவி ஜெயகுமாரியைப் பேட்டி காண் பதற்குரிய நேரம் நெருங்கவே, மூக்குக் கண் ணாடியைச் சரி செய்தபடி புறப்படுகிறாள். சீதாராம் காட்டேஜ் கிரவுண்ட் ப்ளோரில் 'நடித்துக் கொண்டிருந்த' சே! சே!... படித்துக் கொண்டிருந்த ஜெயகுமாரி புத்தகமும் கையுமாக சீதாலட்சுமியை, வாசலுக்கு வந்து வரவேற்கிறாள். இருவரும் நடுக் கூடத்தில் முற்றத்தில் கால்களைத் தொங்க விட்டபடி தரையிலேயே உட் கார்ந்து கொள்கிறார்கள்.

சீ: உனக்கு 'இங்கே' எப்படி 'அட்மிஷன்' கிடைச்சது?

ஜெ: ஒவ்வொருத்தரைப் போல நான் சிபாரிசுன்னு அலைஞ்சதில்லே. அப்பாவை யும் அழைச்சுண்டு பத்து ஸ்கூல் நான் ஏறி இறங்கினதும் இல்லே! ஒருநாள் வாசற்படியிலே நின்னு, பிச்சை கேட்க வந்தவனிடம் ''பெக்கிங் ஈஸ் த பிக் கெஸ்ட் க்ரைம்''ன்னு சொன்னேன்! அப்போ எனக்கு பத்து வயசு இருக்கும்னு நினைக்கிறேன்! நான் சொன்னதைக் கேட்டபடி வந்த — 'இந்த' ஸ்கூலிலே அப்போ ஹெட்மாஸ்டராக இருந்தவர்— ''உனக்கு இந்த ஸ்கூலிலே படிக்க விருப் பமா''ன்னு கேட்டார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டிருச்சி! நேரு, நௌரோஜி, லாலாலஜ்பதிராய், வ. உ. சி. திலக்குளம் வேலுத்தம்பி... இப்படி பலருக்கு இந்த ஸ்கூலிலே படிக்க வாய்ப்பே கிடைக்கலே! இந்த ஸ்கூலிலே அட்மிஷன் கிடைக்காத காரணத்தினால் காமராஜர் கூட படிப்பை ஒதுக்கிட்டாராம்! நான் சான்ஸ் தேடிப் போகலே! சான்ஸ் என்னைத் தேடி என் வாசற்படியிலேயே வந்து நின்னுது! நான் பூரிச்சுப் போனேன்! எனக்குப் பூரண சம்மதம்னேன்!'' அப்பாவும் 'பிகு' பண்ணாம சரின்னுட்டார்... ஆமா! உனக்கு எப்படி சான்ஸ் கிடைச்சுது?

சீ: நானும் சான்சுக்காக அலையலே! உன்னுட் டம்தான்! 'பெக்கிங் ஈஸ் த பிக்கெஸ்ட் ப்ளண்டர் — பி ப்ரேவ் — பி போல்ட். வாழ்க்கையிலே நீ முன்னேறுவே! அப்ப டின்னேன்!' இதை ஹெட்மாஸ் டர் கேட்டபடி வந்தார். அப்புறம் நடந்ததெல்லாம் உன்னுட்டம்தான்! ஆமா — உனக்கு எந்த லாங்வேஜ் பிடிக் கும்.

ஜெ: ஐ லைக் டமில்! தமிழுன்னா உசிரு! என்னு... டமில் ஈஸ் தி ஸ்வீட்டெஸ்ட் லாங்வேஜ் இன் தி வோர்ல்ட்... தமிழ் 'படம்' எங்கே நடந்தாலும்.... சே!சே!.. தமிழ் 'பாடம்' எங்கே நடந்தாலும் நான் அங்கே போய் உட்கார்ந் துக்குவேன்!

சீ: நானும் அப்படித்தான்! டெலிவிஷனில் தமிழ் 'படம்' நடத்தறப்போ...!சே!சே! தமிழ் 'பாடம்' நடத்தறப்போ நான் அங்கே போய் உட்கார்ந்துக்குவேன்! ஆமா... ஜெயகுமாரி, நடிப்பிலே... சே! சே! படிப்பிலே நான் உனக்குப் போட்டியாக இருக்கிறதாக 'சிலர்' சொல் றாங்களே! அதை நீ நம்பறியா?.

ஜெ: அதையெல்லாம் நான் நம்பமாட் டேன்! நமக்குள் சண்டை மூட்ற வேலை இது! ஒவ்வொருத்தருக்கும், ஒவ்வொரு தலையெழுத்து இருக்கு! அதை யாராலும் மாற்ற முடியாது! 'கோள்' மூட்றவங்க, உனக்கு என்னால் தான் மார்க்கெட்... இல்லே, மார்க் குறைஞ்சு போச்சுன்னு சொல்றாங்க... அதை நீ நம்பாதே!

சீ: நல்லாச் சொன்னே!... ராங்கைக்கூடப் பாரேன்! நீ ஒரு தடவை ஒன்றாவது ராங்கிலே வந்தா நான் இரண்டாவது ராங்கிலே வந்து, அதிக ராங்கிலே நிற் கிறேன்! நான் ஒரு தடவை ரெண்டா வது ராங்கிலே வந்தா, நீ ஒரு ஜம்ப் பண்ணி மூன்றாவது ராங்குக்குப் போய் 'அதிக' ராங்கிலே நிற்கிறே!

ஜெ: நான் இப்ப உன்னை ஒரு கேள்வி கேட்கப் போறேன்! நம்ம டீச்சர்ஸிலே யார் நல்லா டீச் பண்றாங்க?

சீ: என்னை வம்பிலே மாட்டி வைக்க லாம்னு தானே நினைக்கிறே! அதெல்லாம் நம்மகிட்டே நடக்காது! எனக்குப் பாடம்



சொல்லிக் கொடுக்கிற டீச்சர்ஸ் எல்லாருமே கெட்டிக்காரங்க! என்னுடைய இந்த முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அவர்கள் தான் காரணம்... ஆமா! உனக்கு ஏன் 'கல்கி'யை ரொம்பப் பிடிக்குது?

ஜெ: 'கல்கி' ஒண்ணுதான் ''கல்கி''ங்கற பேர்லே வருது! மற்றப் பத்திரிகைகளுக்கெல்லாம் 'கல்கி'னு போடறதுக்குக் கூடத் துணிச்சல் இல்லே! 'கல்கி' மட்டும் தான் 'கல்கி'! 'கல்கி'யைத் தவிர வேறு எதுவும் 'கல்கி' இல்லே! 'கல்கி'தான் கல்கி! மத்தபடி என்னுடைய புகைப் படத்தைப் போட்டு, என்னுடைய 'நடி'ப்பை... சே! சே! என்னுடைய 'படைப்பைப்'போடணுங்கறதுக்காக'ஐஸ்' வைக்கலே!

சீ: நீ 'துக்ளக்' படிக்கிறேங்கறது, உன் பதிலிலேருந்து நல்லாத் தெரியுது! 'ராஜாஜி'யைப் பற்றி என்ன நினைக்கிறே?

ஜெ: யாரு? 'நம்ம' கண்மணி அக்காபையன் ராஜாஜிதானே! பாலாஜியும் ராஜாஜியும் 'டிஷூம்' குத்துச் சண்டை போடுவதைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்....

சீ: நான் கண்மணி அக்காவோட பையன் ராஜாஜியைப் பற்றிக் கேட்கலே! மறைந்து போன மூதறிஞர் ராஜாஜியைப் பற்றிக் கேட்கிறேன்!

ஜெ: (விசும்பி விசும்பி அழுகிறாள்.)அவரைப் பற்றி நினைத்தாலே நெஞ்சம் குமுறுகிறது! வேதனை கொப்பளிக்கிறது! எவ்வளவு பெரிய மனிதர்! நான் அவருடைய கால் தூசுக்குச் சமானம்! அவருக்கு என் மீது ரொம்பவும் பாசம்! நான் பத்தாவது வகுப்பில் தேறிய செய்தியைக் கேட்டு, சென்னையில் இருந்து இதற்கென்றே தனி விமானத்தில் வந்து, என்னை அரை மணி நேரம் பாராட்டினார்! அப்படிப்பட்ட பெரிய மனிதர் இப்பொழுது நம்மிடையே இல்லே! அது தமிழகத்திற்கே பெரிய இழப்பு!

சீ: ஏண்டி? பத்து வருஷத்துக்கு முன்னாடியே, ராஜாஜி இறந்தாச்சே! அவர் நீ பத்தாவது முடிச்சப்போ எப்படி உன்கிட்டே வந்தார்...

ஜெ: இந்த மாதிரி கருணாநிதி கேட்கறாப்பலே கேள்விகளெல்லாம் என் கிட்டே கேட்கக் கூடாது! அது எனக்குப் பிடிக்காது!

கி. ஜெயகுமாரி,
சீதாலக்ஷ்மி,
பள்ளியிறுதி வகுப்பு,
இரணியல் அரசினர் மேல்நிலைப் பள்ளி,
இரணியல், கன்யாகுமரி மாவட்டம்.



கண்டக்டர் உதிர்த்த தத்துவம்!

நமது பல்லவன் கண்டக்டர்கள் ஜன நெருக்கடியின் மத்தியிலே பயணிகளிடம் பேசும்போது தங்களையறியாமல் 'தத்துவங்களை' உதிர்ப்பதுண்டு. மவுண்ட்ரோடில் ஒரு பயணி, ''கண்டக்டர்,ஆனந்த் தியேட்டர்இறங்கணும் நிறுத்துப்பா' என்றார். ஆனந்த் ஸ்டாப்பிங் கிடையாது. சத்தியத்திலதான் நிற்கும்' என்று கண்டக்டர் கூற முன்பு ஒருமுறை ஆனந்தில் நின்றதாகக் கூறினார் பயணி. உடனே கண்டக்டர், ''இல்ல சார், எப்பவும் சத்தியம் தான் நிற்கும்'' என்றார்.

—புலியூர் பிரபா
இறுதியாண்டு பி.டெக்(புரொடக்ஷன்),
73, ஸீனியர் ஹாஸ்டல்,எம்.ஐ.டி.
சென்னை—44.

ஒரு புலம்பல்!


கல்லூரி திறந்ததே ஜூலை மாதம்—தேர்தல்
திருவிழா ஊரையே கலக்கியது ஒருமாதம்
ஆகா வந்தது ஆகஸ்டு என்றதும்—ஆசையுடன்
ஓடிவந்து கைகொடுத்ததுஇலங்கைபிரச்னை

இனிமேல் விடுமுறை கிடையாது—என
நினைக்கும்போதே பல்கலைக்கழக விழாவும்
மாணவர் மன்றங்களின் விழாக்களும்,
விழுங்கியே விட்டன செப்டம்பர்
மாதத்தினை.

அப்பாடா எல்லாம் முடிந்துவிட்டது—என
அக்டோபரில் கல்லூரிக்கு வந்தால்,
பூதமொன்று நவம்பரில் உங்களைத் தேடி
வருவேன்
எனபயமுறுத்துதே!... செமஸ்டர்உருவில்!

எச். வெங்கடேசன்,
மூன்றும் ஆண்டு பி.எஸ்.ஸி (கணிதம்),
எஸ். ஐ. வி. ஈ. டி. கல்லூரி,
சென்னை—601302.




1984
YEAR OF UNIFIED FIELD
BASED CIVILIZATION
7000
A TASTE OF UTOPIA

● "படத்தில் எத்தனை தலைகள் தெரிகின்றன? எண்ண முடியாவிட்டாலும் உத்தேசமாகச் சொல்லுங்கள் பார்க்கலாம்!" அரை நிமிஷம் ஆராய்ந்து விட்டு 7000 என்று சரியாகச் சொன்னால் வலது பக்கம் உள்ள அறிவிப்புப் பலகையைப் படித்துவிட்டீர்கள் என்று அர்த்தம்!

அமெரிக்காவிலுள்ள மகரிஷி மகேஷ்யோகியின் சர்வதேச பல்கலைக் கழகத்தில் இந்த ஏழாயிரம் நிபுணர்களும் கூடி விவாதித்தார்கள்; மகேஷ்யோகியின் டி.எம். அல்லது ஆழ்நிலைத்தியானம் பற்றித்தான்.

நாமெல்லாம் பத்திரிகையைப் பிரித்தால் புதுப் புது பிரச்சினைகளையும் அபாயங்களையுமே காண்கிறோம் அல்லவா? இந்த நிபுணர்களோ உலகின் பல நாடுகளிலும் நடந்து வரும் நல்ல காரியங்கள், அபிவிருத்திகள், முன்னேற்றங்கள் ஆகியவற்றையே கவனித்துப் பட்டியலிடுகிறார்கள். இதற்கு எல்லாம் காரணம் ஆழ்நிலைத் தியானமே என்று சாதிக்கவும் செய்கிறார்கள்.

சாதிக்கட்டும் ஆட்சேபணை இல்லை. எப்படியோ உலகம் அமைதியாக அனைவரும் வாழத் தகுந்ததானால் சரி.

கவிதை

இங்கு மட்டுமே

இங்கு மட்டுமே
பொய்யாய்
பெண்ணுரிமைபேசப்படுகிறது!
இங்கு மட்டுமே
வாழ்க்கை
வரதட்சிணையால்
நிர்ணயிக்கப்படுகிறது!

நெடிய மதில்களும்
நீண்ட அரண்களும்
வேலியிட்ட
சிறைகளின் சாளரத்துவழியே
பார்க்கும்
ஆயுள் கைதிகளைப் போல—
சாளரத்தின் வழியே
நிலத்துண்டாய் தெரியும்
வானத்தைக்கண்டு
வெளிஉலகை
ஏக்கத்தில் அவர்களுக்கு வரும்
தவிப்பைப் போல
இங்கு மட்டுமே
பெண்கள்
ஏக்கத்தில் வேகிறார்கள்!

பெண் பார்க்கும் படலம்
பொருள் பேரமாகிற
இந்த தேசத்தில்
பெண்கள்
இந்தப் படலத்துக்காக
பழைய நாடகத்துக்கு
ஒத்திகை பார்க்கும்
நடிகைகளைப் போல
இயந்திரங்களாய்
தயாராகிறார்கள்!

ஆனாலும்,
உடைந்து சிதறிய
ஓடத்துப் பயணிபோல
துரும்புக்கு ஏங்கி
இவனேனும்
இவளுவது என்று
பிரார்த்திக்கிறார்கள்!
ஒருநாள் முழுக்க
அவனோடு கற்பனையில்
வாழ்ந்து பார்க்கிறார்கள்!

மறுநாள்,
பேரத்தில் கசந்து
ஏதோ நொண்டி
சமாதானங்களோடு
நிராகரிப்பு செய்தி
நீயாய் வரும்போது
மறுபடியும்
விதவைகள் ஆகிறார்கள்!

இங்கு மட்டுமே
நிறைய பேர்
சுமங்கலிகள் ஆகுமுன்பே
விதவைகள் ஆகிற
குரூர வைபவம்
வரமாய் இருக்கிறது.

கனவுகளை கொன்று கொன்று
காலத்தை சுமந்து சுமந்து
இவர்களது
முதுகு வளைகிறது!

புருவங்களுக்கு மைதடவி
புடவை கொசுவத்தை
நீவி, நீவி
இவர்களது
விரல்கள் தேய்கின்றன.

ஆனால்,
வாழ்க்கை மட்டும்
மலருவதே இல்லை!

—வசந்தன் பெருமாள்



அலை மின்சாரம்

ஒரு நிகழ்ச்சியில் பேசுகையில், ''கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் தமிழக அரசின் திட்டத்துக்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்து விடும் என்றும், அதன் பின் தமிழக மின் பற்றாக்குறைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட முடியும் என்றும் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து கடலலையிலிருந்து மின்சாரம் தயாரிப்பது பற்றிய விவரங்களை அறியச் சென்னை ஐ. ஐ. டி. கடற்பொறியியல் துறை தலைவர் திரு. ராஜூ மற்றும் டாக்டர் ரவீந்திரன் ஆகியோரை அணுகியபோது அவர்கள் சொன்ன தகவல்கள்:

- நீர் மின்சாரம், அனல் மின்சாரம், அணு மின்சாரம், சூரிய மின்சாரம் போலவே இன்னொன்று 'அலை மின்சாரம்'
- அலை மின்சாரம் தயாரிப்பதன் சாத்தியக் கூறுகளை அறிய, சென்னை ஐ. ஐ. டி. இயக்குனர் இந்திரேசன், தலைமையில் ஒரு வல்லுனர் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இது சம்பந்தமான வேலைகள் இன்னும் ஆரம்பமாகவில்லை. ஆராய்ச்சி நிலையில் தான் இது உள்ளது.
- முதற்கட்டமாக சென்னையில் கடற்கரைக்கு இணையாக, கரையிலிருந்து சுமார் 200 மீ. தூரத்தில் சுமார் 10 மீ. நீளத்துக்குத் தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டு, அதில் 'ஆஸிலேட்டிங் வாட்டர் காலம் ஸிஸ்டம்' (Oscillating Water Column System) என்ற கருவியை அமைத்து, அதன் மூலம் மின்சாரம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த மாதிரி வடிவமைப்பின் செயல்பாட்டைக் கவனித்தபின் தடுப்புச் சுவரின் நீளம் 100மீ. ஆக்கப்பட்டு, மின்சாரத் தயாரிப்பு உபகரணங்களை அதிக அளவில் பொருத்தி, மணிக்கு300 முதல் 500 மெகாவாட் வரை மின்சாரம் தயாரிக்கப்படும்.
- இந்த முறையில் மின்சாரம் தயாரிக்க ஆகிற உற்பத்தி செலவு கொஞ்சம் அதிகம் தான். ஆனால் — மின்சார தட்டுப்பாடு — இந்தியாவில் — தமிழ்நாட்டில் — ஒரு நிரந்தரப் பிரச்னை. இதைத் தீர்க்க ஒருவழி அலை மின்சாரம். உற்பத்தி செலவு கொஞ்சம் அதிகம் என்ற காரணத்துக்காக, மின் தட்டுப்பாட்டைத் தவிர்க்க உதவுகிற ஒரு நிரந்தர திட்டத்தைக் கைவிடுவது புத்திசாலித்தனமானதில்லை.
- இந்த முறையில், தற்போது, நார்வே, ஸ்வீடன், ஜப்பான், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து ஆகிய நாடுகளில் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.
- மாதிரி வடிவமைப்பு சம்பந்தமான பணிகள் முடிந்து 10 மீ. தடுப்புச் சுவர் கட்டி, சோதனைத் தயாரிப்பு ஆரம்பிக்கவே இன்னும் இரண்டாண்டுகளாகுமாம்.
- இப்படி கட்டப்படும் தடுப்புச் சுவர்களால் இன்னும் பல நன்மைகளும் உண்டு. கடற்கரைக்கும், சுவருக்கும் இடைப்பட்ட பகுதி அமைதியாய் இருக்கும். மீன் வளத்தை இந்தப் பகுதியில் அதிகரிக்கலாம். கடல் அரிப்பைத் தடுக்கலாம்.

-எஸ் சந்திரமௌலி

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

ஒரு பைத்தியம் கிணற்றின் மேல்நின்று கொண்டு 9, 9, 9 என்று எண்ணிக் கொண்டே இருந்தது.

அந்த வழியே வந்த ஒருவர், ''என்னப்பா, 9, 9 என்று அதையே சொல்லிக்கிட்டு இருக்கே!'' என்று கேட்டவாறே கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தார்.

பைத்தியம் வந்தவரைப் பிடித்துக் கிணற்றில் தள்ளிவிட்டு ''10...10...'' என்று எண்ண ஆரம்பித்தது!

—பி. எல். ரவிச்சந்திரன்



- ''அலைகடலில் அலையின் நிலையம் வந்த பிறகு அதைப் படம் எடுத்துத் தருகிறேன்; இப்போதைக்கு அலைகடல் அருகே ஓர் அணங்கை வண்ணப் படம் எடுத்துத் தந்துள்ளேன்'' என்று கூறுபவர்:

துரைலிங்கம்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

